# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள் - 24

விலை - 30 ரூபா

சுடர் 34 கதிர் 160 சித்திரை 24ஆம் நாள் செவ்வாய்க்கிழமை 07 மே 2019 வள்ளுவர் ஆண்டு 2050


## இழப்பீடு வழங்க ரணில் பணிப்பு

கொழும்பு, மே 7
நீர்கொழும்பில் ஏற்பட்ட அமைதியின்மையால் பொது மற்றும் தனியார் சொத்துக்களுக்கு ஏற்பட்டுள்ள சேதங்களுக்கு இழப்பீடு வழங் 07

## தீவிரவாத அமைப்பிடம் 140 மில்லியன் ரூபா நிதி!

கொழும்பு, மே 7
கடந்த 21ஆம் திகதி நாட்டில் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களை நடத்திய அமைப்பின் 140 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான நிதி குற்றப் புலனாய்வுப் 07

## பாடசாலைகள் ஆரம்பித்தாலும் மாணவர் வரவில் நேற்று வீழ்ச்சி




யாழ்ப்பாணம், மே 7
நாடளாவிய ரீதியில் பாடசாலைகளின் இரண்டாம் தவணைக் கல்விச் செயற்பாடுகள் நேற்று ஆரம்பமாகின. பாடசாலைகளில் மாணர்கள் கடும் சோதனைக்குப் பின்னர் உள்ளே அனுமதிக்கப்பட்டனர். பாடசாலைகளில் மாணவர்களின் வரவு குறைவாகவே இருந்தது.
வடக்கு மாகாணப் 19

## சோதனைகளின்போது ஊடகங்களுக்குத் தடா

*அரச தலைவர் பணிப்புரை*

கொழும்பு, மே 7
பாதுகாப்புத் தரப்பினரால் மேற்கொள்ளப்படும் தேடுதல் நடவடிக்கைகளை ஊடகங்கள் வாயிலாகக் காட்சிப்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது என் 19

## வலி.தெற்கு பிரதேச சபையில் குண்டுப் புரளியால் பதற்றம்

யாழ்ப்பாணம், மே 7
வலிகாமம் தெற்குப் பிரதேச சபையில் வெடி குண்டு உள்ளது என்று வந்த தொலைபேசி அழைப்பால் நேற்று அங்கு பரபரப்பு ஏற்பட்டது. பாதுகாப்புத் தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டு அங்கு வந்து சோதனையில் ஈடுட்டனர். அங்கு எந்தவொரு வெடி பொருளும் கண்டு 19



# மோதல்களைத் தவிர்த்து முன்னோக்கி செல்வோம்

*கொழும்புப் பேராயர் அழைப்பு*

கொழும்பு, மே 7
தாக்குதல்களை நடத்தியவர்கள் முஸ்லிம்கள் என்றோ இஸ்லாமியர்கள் என்றோ நம் கருதவில்லை. நாம் முஸ்லிம் சகோதரர்களை குறை கூறமுடியாது. குற்றம் சாட்ட முடியாது. அவர்கள் தவறிழைக்கவில்லை. இதனை தெளிவாக புரிந்துகொள்ள வேண்டும். நாம் மோதல்களுக்குச் செல்ல வேண்டியதில்லை. 07

## சிறு குழுவினர் செய்த செயலுக்காக அனைவரையும் குறைகூற முடியாது

*அரச தலைவர் மைத்திரி தெரிவிப்பு*

கொழும்பு, மே 7
அடிப்படைவாதச் சிறிய குழு ஒன்றால் மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாதச் செயற்பாட்டால் நாட்டின் ஒட்டுமொத்த மக்களிடையேயும் காணப்படும் நம்பிக்கைக்குப் பங் 19



## நீர்கொழும்பின் நிலமை தற்போது கட்டுப்பாட்டில்

*பொலிஸ் தரப்புக் கூறுகின்றது*

கொழும்பு, மே 7
நீர்கொழும்பில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட பதற்றமான நிலமை நேற்று அதிகாலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. நேற்றுக் காலை ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டபின்னர் அந்தப் பகுதியில் சட்டம், ஒழுங்கு பேணப்படுவதைப் பாதுகாப்புத் தரப்பினர் உறுதி செய்துள்ளனர் என்று 06

## கோடிக்கணக்கான சொத்துக்கள் நாசம்

*நீர்கொழும்பு முஸ்லிம்கள் கண்ணீர்*

கொழும்பு, மே 7
எமது கோடிக்கணக்கான சொத்துக்கள் வன்முறையாளர்களினால் அடித்து நொறுக்கப்பட்டு தீ மூட்டப்பட்டு நாசமாக்கப்பட்டுள்ளன. வாகனங்கள், தளபாடங்கள் உள் 07

## நீர்கொழும்புச் சம்பவத்தை விசாரிக்க நான்கு குழுக்கள்

கொழும்பு, மே 7
நீர்கொழும்பில் நேற்றுமுன்தினம் இரு தரப்புகளுக்கு இடையே ஏற்பட்ட வன்முறை தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு 4 பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்தார். 07

## பல்கலையில் கைதானோருக்கு நாளைவரையும் விளக்கமறியல்

*பிணையா? விடுவிப்பா? என்று அன்றைய தினமே கட்டளை*

யாழ்ப்பாணம், மே 7
தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் ஒளிப்படம் இருந்தது என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பல்கலைக் கழக மாணவர்கள் இருவரையும், தியாகி திலீ 19

## தனித்திருந்த மூதாட்டி மர்மமாக உயிரிழப்பு

*கொலையாக இருக்கலாம் என்றும் சந்தேகம்*

யாழ்ப்பாணம், மே 7
வீட்டில் தனித்திருந்த மூதாட்டி ஒருவர் சந்தேகத்துக்கு இடமான முறையில் உயிரிழந்துள்ளார். அவர் அணிந்திருந்த நகை மற்றும் வீட்டில் இருந்த பணம் காணாமல் போயுள்ள நிலையில் மூதாட்டி கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். 06

## நாட்டின் பாதுகாப்பு தொடர்பில் இன்றும் நாளையும் விவாதங்கள்

*கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானம்*

கொழும்பு, மே 7
ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளின் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் மற்றும் நீர்கொழும்பு இன மோதல் ஆகிய 07

## நுவரெலியாவில் சஹ்ரானின் தீவிரவாதப் பயிற்சி முகாம்!

*பொலிஸார், இராணுவம் நேற்று சுற்றிவளைப்பு*

கொழும்பு, மே 7
கடந்த 21ஆம் திகதி நாட்டில் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் பயிற்சிகளை மேற்கொண்டிருக்கலாம் என்று சந்தே 07

## யாழ்.பல்கலை மாணவர்களை விடுவிக்கத் துரித நடவடிக்கை

*சுமந்திரன் எம்.பியிடம் பதில் சட்டமா அதிபர் வாக்குறுதி*

கொழும்பு, மே 7
கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் சிற்றுண்டிச்சாலை உரிமையாளர் ஆகியோரின் விடுதலை குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்தி 19

## யாழ். பல்கலைத் துணைவேந்தரை திடீரென நீக்கினார் மைத்திரிபால!

யாழ்ப்பாணம், மே 7
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் இ.விக்னேஸ்வரன் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பாக அரச தலைவரின் மேலதிக செயலர் பல்கலைக் கழகப் பதி 19

# விகாரி வருட தமிழ்ப் புத்தாண்டு பொதுப் பலன்கள்




**உள்ளதை உள்ளபடி பேசுபவர்களே!**

சுக்கிரனும், புதனும் சாதகமான வீடுகளில் அமர்ந்திருக்கும் நேரத்தில் தமிழ்ப் புத்தாண்டு பிறப்பதால் எதிர்பார்த்த தொகை கைக்கு வரும். மகிழ்ச்சியான செய்திகள் வரும். பழைய நண்பர்கள், உறவினர்கள் தேடி வந்து பேசுவார்கள். எதிர்பார்த்த உதவிகளும் கிடைக்கும். பிள்ளைகள் கல்வி அல்லது உத்தியோகத்தின் பொருட்டு வெளிநாடு அல்லது வெளிமாநிலம் செல்வார்கள். கல்யாணப் பேச்சு நல்ல விதத்தில் முடியும் உங்கள் ராசிக்கு 8ஆம் வீட்டில் சந்திரன் இருக்கும் வேளையில் வருடம் பிறப்பதால், எந்த ஒரு வேலையையும் போராடித்தான் முடிக்கவேண்டி வரும். பணம் வரும் என்றாலும் செலவுகளும் அதிகரிக்கவே செய்யும். மற்றவர்களை நம்பி பெரிய முடிவுகள் எடுக்க வேண்டாம்.

வருடம் பிறக்கும்போது செவ்வாய் 6இல் இருப்பதால், தொடங்கும் காரியங்கள் வெற்றிகரமாக முடியும். எதிர்பார்ப்புகள் தடையின்றி நிறைவேறும்.

பிரபலங்களின் உதவியால் சில வேலைகளை முடிப்பீர்கள். வெகுநாள் கனவாக இருந்த வீடு வாங்கும் ஆசை இப்பொழுது நிறைவேறும். வெளிநாடு சென்று வருவீர்கள். இழுபறியாக இருந்த பூர்வீகச் சொத்துப் பிரச்சினைக்கு நல்ல தீர்வு கிடைக்கும். வருடம் முழுவதும் சனிபகவான் ராசியிலேயே அமர்ந்திருப்பதால் எதையும் சமாளிக்கும் மனப்பக்குவம் கிடைக்கும். ஜன்மச் சனியாக தொடர்வதால் உடல் நலம் பாதிக்கும். வழக்கை நினைத்துக் கவலையடைவீர்கள்.

வருடம் முடியும் வரை 1இல் கேதுவும், 7இல் ராகுவும் இருப்பதால் முன்கோபம், மனதில் ஒருவித சஞ்சலம், எதிலும் ஆர்வமில்லாத நிலை, ஹார்மோன் பிரச்சினை,




தலைச்சுற்றல் வந்து செல்லும். கணவன் மனைவிக்கிடையே வீண் சந்தேகம், ஈகோ பிரச்சினைகள் வரக்கூடும். வாழ்க்கைத் துணைக்கு மருத்துவச் செலவுகளும், அவருடன் கருத்துமோதல்களும் ஏற்படக்கூடும்.

ஆண்டுத் தொடக்கத்திலிருந்து 18.5.19 வரை குருபகவான் அதிசாரமாக ஜன்ம குருவாக நீடிப்பதால், அடுத்தடுத்து வேலைகள் இருந்தபடி இருக்கும். எதிர்காலத்தைப் பற்றிய அச்சம் ஏற்பட்டு நீங்கும். உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படக்கூடும். 19.5.19 முதல் 27.10.19 வரை குரு உங்கள் ராசிக்கு 12ஆம் வீட்டில் நிற்பதால் திடீர் பயணங்கள் அதிகரிக்கும். கொஞ்சம் சிக்கனமாக இருப்பது அவசியம். கோயில்களுக்குக் குடும்பத்துடன் சென்று வருவீர்கள்.

ஆனால், 28.10.19 முதல் 27.3.20 வரை குருபகவான் உங்கள் ராசிக்குள்ளேயே நுழைவதால் திடீர் பயணங்களால் ஏற்பட்ட வீண் அலைச்சல்கள், அலைக்கழிப்புகள் குறையும். முன்கோபத்தில் உணர்ச்சிவசப்பட்டு வார்த்தைகளை விட்டுவிடவேண்டாம். ஓய்வெடுக்க முடியாதபடி வேலைச்சுமை அதிகரிக்கும்.

24.6.19 முதல் 9.8.19 வரை செவ்வாய் 8இல் அமர்வதால் கணவன் மனைவிக்கிடையே மனக்கசப்புகள் வரும். உங்கள் இருவருக்கிடையே வீண் சந்தேகத்தை ஏற்படுத்திப் பிரிவை உண்டாக்கச் சிலர் முயற்சி செய்வார்கள். சொத்துப் பிரச்சினை தலைதூக்கும். வழக்குகளில் எச்சரிக்கையாக இருங்கள். 4.6.19 முதல் 5.7.19 வரை மற்றும் 29.3.20 முதல் 13.4.20 வரை சுக்கிரன் 6இல் மறைவதால் பேச்சால் பிரச்சினைகள் வரக்கூடும். மற்றவர்கள் விஷயங்களில் நீங்கள் தலையிடாமல் இருப்பது நல்லது. மாணவர்களுக்கு விளையாட்டு மனப்பான்மை நீங்கி, படிப்பில் ஆர்வம் அதிகரிக்கும்.

வியாபாரத்தில் முன்னேற்றமான சூழ்நிலை காணப்படும். பணியாளர்களின் ஒத்துழைப்பு நன்றாக இருக்கும். கூட்டுத் தொழிலில் ஏற்பட்ட குழப்பங்கள் தீரும். உத்தியோகத்தில் நல்ல திருப்பம் ஏற்படும். மேலதிகாரிக்கு நெருக்கமாவீர்கள். வைகாசி மாதத்தில் புதிய வேலை கிடைக்கும்.

கலைத்துறையினருக்குப் பெரிய நிறுவனங்களில் இருந்து வாய்ப்பு வரும். வருமானம் உயரவும் வழி பிறக்கும். இந்தப் புத்தாண்டு ஓய்வில்லாமல் உழைக்க வைத்தாலும், தடைப்பட்ட காரியங்களை நிறைவேற்ற உதவி செய்வதாக இருக்கும்.

# நீங்கள் பிறந்த நேரத்தின் படி உங்கள் குணங்கள்



நீங்க பிறந்த நேரத்தை வைத்தே உங்கள் குணங்களை தெரிந்துக்கொள்ளலாம். ஒ ருவர் பிறந்த நேரத்தை வைத்த ஒருவரது இல்வாழ்க்கை, சமூக வாழ்க்கை, வேலை, குணாதிசயங்கள் எப்படி இருக்கும் என அறியப்படுகிறது. அந்த வகையில், குறிப்பிட்ட நேரத்தில் பிறப்பவர்களது குணாதிசயங்கள் மற்றும் வாழ்க்கை எப்படி இருக்கும் எனப் பார்க்கலாம்.

**அதிகாலை 6 முதல் 8**

இந்த ரேரத்தில் பிறந்தவர்கள் அமைதியான மனோபாவம் கொண்டிருப்பார்கள். சிலர் நேரத்தை வீணடிக்கும் பழக்கம் கொண்டிருப்பார்கள். இது இவர்களுடைய எதிர்காலத்தை பாதிக்கும்.

**காலை 8 முதல் 10**

இந்த நேரத்தில் பிறப்பவர்கள் நல்ல நட்பும், சுற்றமும் கொண்டிருப்பார்கள். பொருளாதாரம் சீரான நிலையில் இருக்கும். இவர்களது வாழ்வில் பணம் முக்கிய பங்கு வகிக்கும். மேலும், இவர்கள் சற்று விரக்தியுடன் காணப்படலாம்.



**நண்பகல் 10 முதல் 12**

இந்த நேரத்தில் பிறந்தவர்கள் பின்தொடரும் காரியங்கள் எல்லாம் வெற்றியே தரும். இவர்களது வாழ்க்கை வெற்றிகரமாக அமையும். பெருமை கொள்ளும் வகையில் வாழ்வார்கள்.

**12 முதல் 2**

இந்நேரத்தில் பிறப்பவர்கள் அதிக பயணம் சார்ந்த எதிர்காலம் கொண்டிருப்பார்கள். இவர்களது வேலை அல்லது பர்சனல் விஷயங்கள் பயணம் சார்ந்து அமையலாம். புத்திகூர்மை கொண்டுள்ளவர்களாக திகழ்வார்கள். நல்ல குணத்திற்கு பெயர்பெற்று திகழ்வார்கள்.

**மதியம் 2 முதல் 4**

பணம் சார்ந்து துறையில் சிறந்து விளங்குவார்கள். எதையும் லீகலாக செய்ய வேண்டும் என்ற மனப்பான்மை கொண்டிருப்பார்கள்.

**மாலை 4 முதல் 6**

இந்த நேரரத்தில் பிறந்தவர்கள் பொறுப்பு, கடமை அதிகம் கொண்டவர்களாக இருப்பார்கள். திருமணத்திற்கு பிந்தைய வாழ்க்கை வலிமையாக இருக்கும்.

**மாலை 6 முதல் 8**

இந்த நேரத்தில் பிறந்தவர்கள் தங்கள் வாழ்க்கை தங்களுக்கு நெருக்கமான அல்லது நண்பர்களை சார்ந்து வாழும் விதமாக அமைந்து காணப்படுவார்கள். குடும்பம் என்பது இவர்களுக்கு இரண்டாம்பட்சம்தான். சமூக வாழ்க்கையில் அதிகம் இணைந்திருப்பார்கள்.

**இரவு 8 முதல் 10**

இந்த நேரரத்தில் பிறந்தவர்கள் மத்தியில் கற்பனை திறன் அதிகம் காணப்படும். திறமைகள் அதிகம் கொண்டிருப்பார்கள். தங்களுக்கு பிடித்த வேலைகளை மட்டுமே செய்வார்கள், அதிலும் சிறந்து காணப்படுவார்கள்.

**இரவு 10 முதல் 12**

இந்த நேரத்தில் பிறந்தவர்கள் வெற்றி, தோல்வியை சமமாக காணும் பண்பு கொண்டிருப்பார்கள். ஏற்றத்தாழ்வுகளை எளிதாக கடந்து வந்துவிடுவார்கள்.

**நள்ளிரவு 12 முதல் 2**

இந்த நேரத்தில் பிறந்தவர்கள் அதிக புத்திசாலியாக இருப்பார்கள். சாகசங்களை விரும்புவார்கள். பயணிக்க விரும்புவார்கள். ஊடகம் சார்ந்த வேலையில் அதிக கவனம் செலுத்துவார்கள்.

**நள்ளிரவு 2 முதல் 4**

இந்த நேரத்தில் பிறந்தவர்களுக்கு உணவு சார்ந்த விருப்பம் அதிகம் இருக்கும். குடும்பம் மற்றும் பொருளாதார நிலை மேலோங்கி காணப்படும்.

# கேள்வி அறிவித்தல் (IFB-6)
## மாவட்டச் செயலகம் - யாழ்ப்பாணம்.

1. யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தின் திணைக்களப் பெறுகைக்குழுவின் தவிசாளர் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைகளுக்கான தகவுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக் கேள்வியாளர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட மூடியவிலைக்கேள்விகளைக் கோருகின்றார்கள்.
2. இது **தேசிய போட்டி விலைக்கேள்விமுறையாக** இருந்தாலும் **வடக்குமாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவு செய்யப்பட்ட கேள்விதாரர்களுக்கு** மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
3. கேள்விகோரல் அறிவித்தலில் குறிப்பிட்ட தரத்துக்கு கேள்விகள் கிடைக்காதுவிடின் அல்லது கிடைக்கப்பெற்ற கேள்விகள் தகுதியற்றதாயின் அதற்கு மேற்பட்ட CIDA தரம் கருத்திலெடுக்கப்படும்.
4. நிர்மாண ஒப்பந்தத்திற்கு தகுதியுடைய ஒப்பந்தக்காரர், நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிர்மாணத்தரத்தில் பதிவுசெய்யப்பட்டிருப்பதுடன் மோசடியில் ஈடுபட்ட ஒப்பந்தக்காரர்களின் கறுப்புப் பட்டியலில் இடம்பெறாதவராகவும் இருத்தல் வேண்டும்.
5. அக்கறையுள்ள கேள்வியாளர்கள் யாழ் மாவட்ட செயலக பெறுகை அலகில் கேள்விப்பத்திரங்களை இலவசமாகப் பார்வையிடுவதோடு மேலதிக விபரங்களையும் பெற்றுக் கொள்ள முடியும். மேலும் ஒரு வேலைக்கு கேள்வி ஆவணங்களின் இரு பிரதிகள் மட்டுமே விநியோகிக்கப்படும். தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள் : 021 221 4633/ 021 222 2233, 2234 (Ext. – 140) Facsimile – 021 222 3674, www.jaffna.dist.gov.lk Gmail address-jkprocurementunit@gmail.com
6. அக்கறையுள்ள கேள்வியாளர்கள் எழுத்து மூலமான விண்ணப்பத்துடன் மீளளிக்கப்படாத கட்டணமாகிய **(Nonrefundable fee)** அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையினை **மாவட்டச் செயலகம் - யாழ்ப்பாணத்தில் உள்ள பெறுகை அலகு அலுவலகத்தின் மூலம் (அறை இல – 42)** செலுத்தி பற்றுச்சீட்டை சமர்ப்பிக்குமிடத்து **07.05.2019 தொடக்கம் 27.05.2019 வரை மு.ப 9.00** மணியிலிருந்து **பி.ப 02.00** மணிவரை அலுவலக நேரங்களில் கேள்விப் பத்திரங்களை பெற்றுக் கொள்ளலாம், முடிவுத்திகதி **28.05.2019 முற்பகல் 10.30** மணி ஆகும்.
7. அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்வித்தொகைகளுக்கான கேள்விப்பிணைப்பொறுப்பு (Bid Security) கேள்வி ஆவணங்களுடன் இணைக்கப்பட்டு **தவிசாளர், திணைக்களப் பெறுகைக்குழு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு **28.05.2019 மு.ப 10.30** மணிக்கு அல்லது அதற்கு முன்னதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைக்கப்படல் வேண்டும். மேலும் கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் கேள்வி இலக்கத்தினையும் **(Bid ID)**,வேலை விபரத்தினையும் **(Description of work)** குறிப்பிடல் வேண்டும். கேள்விகள் சமூகமளிக்கும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் **உடனடியாகத் திறக்கப்படும்** என்பதுடன் தாமதமாக கிடைக்கும் கேள்விகள் திறக்கப்படாமலே நிராகரிக்கப்படும்.
8. விலைக்கேள்வி செல்லுபடிக்காலம் **(Bid Validity – 27.08.2019 வரை)** கேள்வி இறுதித் திகதியிலிருந்து அல்லது நீடிக்கப்படும் திகதியிலிருந்து 91 நாட்களும், கேள்விப் பிணைப்பொறுப்பு **(Bid Security)** கேள்வி திறத்தல் திகதியிலிருந்து **119 நாட்களும்** ஆகும்.
9. முற்கேள்விக் கூட்டம் **(Prebid Meeting)** 20.05.2019. மு.ப 10.30 மணிக்கு மாவட்ட செயலகத்தில் நடைபெறும்.
10. பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதி முடிவாக அமையும்.

| S. No | Bid ID. | Description of work | Estimated Amount (million) (Excluding VAT) | Contract Period | ICTAD Registration, Specialty | Required Bid Security | | Non Refundable Fee (Rs.) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Security Amount (Rs.) | Vaild Period Until | |
| 01 | JK/PROC/Building /02/07/2019 | CONSTRUCTION OF TWO STORIED CLASS ROOM (70'×25') BUILDING AT J/SITHTHANKERNY SRI GANESHA VIDYALAYAM | 13.24 | 180 days | C-6 & C-5 or above (Buildings) | 146,000 | 24.09.2019 | 4,100 |
| 02 | JK/PROC/Road/04/ 13/2019 | RENOVATION OF THIKKAM SCHOOL ACCESS ROAD AND THIKKAM KILIVETTI ROAD at ALVAI WEST | 5.91 | 60 days | C- 7& C-5or Above ( highway /Road ) | 60,000 | 24.09.2019 | 2,000 |
| 03 | JK/PROC/School/0 5/08/2019 | CONSTRUCTION OF TWO STOREYED CLASSROOM (70'×25') BUILDING AT J/KADDAIVELY METHADIST SCHOOL | 12.24 | 180 days | C-6 & C-5 or Above (Buildings) | 135,000 | 24.09.2019 | 4,000 |
| 04 | JK/PROC/Building /09/01/2019 | CONSTRUCTION OF OFFICE BUILDING AT SLIPWAY,KAYTS | 3.24 | 90 days | C-8 or Above (Buildings) | 40,000 | 24.09.2019 | 1,500 |
| 05 | JK/PROC/CMTRY /04/11/2019 | DEVELOPMENT WORK OF CEMETERY AT THREE PLACES IN TELLIPALAI DIVISION | 4.31 | 45 days | C-8 or Above (Buildings) | 54,000 | 24.09.2019 | 1,600 |
| 06 | JK/PROC/Road/06/ 09/2019 | RENOVATION OF VARIVADDAN ROAD AT MARUTHANKERNY | 20.57 | 120 days | C- 6 & C-5 or Above (highway /Road) | 255,000 | 24.09.2019 | 5,000 |
| 07 | JK/PROC/Building /09/02/2019 | CONSTRUCTION OF NATIONAL YOUTH SERVICE COUNCIL DISTRICT OFFICE, JAFFNA AT KAKKAI THEEVU | 39.49 | 210 days | C5 & C-4 or above (Buildings) | 400,000 | 24.09.2019 | 7,500 |
| 08 | JK/PROC/Nal.Adm n./05/09/2019 | CONSTRUCTION OF ADMINISTRATIVE BUILDING AT DIVISIONAL SECRETARIAT, NALLUR STAGE III | 15.20 | 180 days | C6 & C-5 or above (Buildings) | 155,000 | 24.09.2019 | 4,200 |

**நா.வேதநாயகன்,**
**அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலாளர்,**
**மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.**


### விற்பனைக்கு
அலுவலக பாவனையிலுள்ள
மரத்தளபாட பொருட்கள் விற்பனைக்கு
**தொடர்பு - 077 101 1111**

### பெண் வேலையாள்கள் தேவை
மல்லாகத்தில் இயங்கும் எமது
தொழிற்சாலைக்கு பொதி செய்வதற்கு பெண்
வேலையாள்கள் தேவை. வயது எல்லை 18
தொடக்கம் 30 வரை. வேலைநேரம் காலை
7.30 தொடக்கம் மாலை 5.30 வரை
**தொடர்பு - 076 118 4010**

### வாடகைக்கு
நல்லூரில் வெளிநாட்டிலிருந்து
வருப்வர்கள் தங்குவதற்கு ஏற்ற வீடு
A/C. சமையலறை வசதிகளுடன்
குறுகியகால வாடகைக்கு உண்டு
**தொடர்பு - 077 788 7360**

### வீட்டுப்பணிப்பெண் தேவை
வீட்டுப்பணிப்பெண் ஒருவர்
உடனடியாக தேவை சம்பளம்
நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்
**078 283 2289, 077 642 9299**

### வாடகைக்கு
வவுனியா புகையிரத நிலையத்துக்கு
அருகில் மாடிக் கட்டடம் தனியார்
வைத்தியசாலை, கல்வி நிலையங்களுக்கு
வாடகைக்கு உண்டு.
**077 410 5294**
(cs. 23178) (13.17)

### காணி விற்பனை
குழாய்க்கிணறு, மின்சார வசதியுடைய
5 பரப்புக்காணி விற்பனைக்குள்ளது.
**இடம்:-** சங்கரத்தை சந்தி (தெல்லிப்பழை
வீதியும் நவாலி வீதியும் சந்திக்கும் இடம்)
வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணம்.
**077 328 8795**
(CS/25169) (11.17)

### வெல்டிங் வேலையாள் தேவை
**விளையாட்டு உபகரணங்கள்**
செய்வதற்கு அனுபவமுள்ள
வேலையாள்கள் தேவை.
*சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்*
**டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்**
**இல.108, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.**
**077 592 5088**

### தவறிவிட்டது
விநாயகன் நாகலட்சுமி என்பவரின் தேசிய
அடையாள அட்டை (566173409V),
சிறுதொகைப் பணம், நகை என்பவற்றுடன்
சிறு பை ஒன்று யாழ் நகரப் பகுதியில்
30.04.2019 அன்று தவறிவிட்டது.
கண்டெடுத்தவர்கள் கீழுள்ள
இலக்கத்திற்கு தொடர்புகொள்ளவும் தகுந்த
சன்மானம் வழங்கப்படும்.
**077 857 5104/ 077 857 0362**

### வேலைக்கு ஆள்கள் தேவை
நிலாவரைக்கு அண்மையில் இயங்கும்
உற்பத்தி நிறுவனத்துக்கு 18 - 40 வயதிற்கு
இடைப்பட்ட ஆண்கள் வேலைக்கு
சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர். தகுந்த
சம்பளம் வழங்கப்படும். ஆர்வமுள்ளோர்
பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன்
தொடர்புகொள்ளவும்.
**077 959 4326, 077 313 5195**

### காணி விற்பனைக்கு
மிருசுவில் பழைய
வாய்க்கால்
பாம் வீதியிலுள்ள
17 பரப்புக்
காணி
விற்பனைக்குண்டு.
**077 132 4967**
**077 630 3757**
(CS. 00609) (4.17)

## மரண அறிவித்தல்கள்

# திருமதி பூரணம் குலத்துங்கம்



தோற்றம் 04.09.1932 மறைவு 06.05.2019

பலாலியைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி பத்தமேனியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூரணம் குலத்துங்கம் நேற்று (06.05.2019) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கோவிந்தர் - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற இளையதம்பி சிவகாமி தம்பதிகளின் அன்பு மருமகளும் குலத்துங்கத்தின் பாசமிகு மனைவியும் நாகேஸ்வரி, நாகேந்திரம், வில்வராசா (வில்வம்), வீரசிங்கம் (பிரான்ஸ்), ஈஸ்வரி, சிவனேஸ்வரி, லோகிதராசா, லோகேஸ்வரி (சுவிஸ்), ஆனந்தராசா (கிளி), அரசரத்தினம் (சுவிஸ்), பாகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் பாலச்சந்திரன், சர்வானந்ததேவி, புனிதவதி, மஞ்சுளாதேவி, தர்மலிங்கம், இந்து, வல்லிபுரம், சுமந்தினி, ரவீந்திரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ரஞ்சனா, றமணன் (பிரான்ஸ்), ராகுலன் (பிரான்ஸ்), ராகவன், றஜிதா, பிரபாகரன், நவீதன் நிரஞ்சலா, பிரதீபன், ஜெகநாதன் (பிரான்ஸ்), நம்பிகை (பிரான்ஸ்), மதிவதுனன் (நோர்வே), சுபாஜினி (லண்டன்), கஜேந்தினி (பிரான்ஸ்), சாரங்கன் (பிரான்ஸ்), கௌரீசன் (பிரான்ஸ்), கௌசலா (லண்டன்), கௌசிகா, கௌதமி (சுவிஸ்), யானுஷா (சுவிஸ்), கௌசல்யா (சுவிஸ்), கோபிராம், அருண் (சுவிஸ்), யுவன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அஜந்தன், அர்ச்சனா அஜீவன், டஷ்வின் (லண்டன்), தீப்தி (நோர்வே), றோகித், கிஷானா (லண்டன்), கிசானன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பத்தமேனியில் உள்ள இல்லத்தில் இன்று (07.05.2019) செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பலாலி சித்தவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**ஆசையப்பர் கோவில் வீதி,**
**பத்தமேனி, அச்சுவேலி.**

**077 755 2947 வில்வம்**
**077 609 5284 கிளி**

(C 10107/15/17)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அன்னை மடியில் 26 . 07 . 1943

கணபதியின் திருவடியில் 08 . 04 . 2019

# அமரர் இராசா வாமதேவன்

(உரிமையாளர்– இராசா டீசல் இன்ஜினியர்ஸ், தர்மகர்த்தா நல்லூர் பண்டாரக்குளம் மருதவளவு பிள்ளையார் கோவில்)

கடந்த (08.04.2019) திங்கட்கிழமை அன்று இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவரின் மறைவுச்செய்திகேட்டு பல்வேறு வழிகளில் உதவி புரிந்தவர்களுக்கும் அத்துடன் இறுதிக்கிரியையில் கலந்துகொண்டு எமக்கு ஆறுதல் அளித்த உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள், எமது நிறுவன ஊழியர்கள், நல்லூர் பண்டாரக்குளம் பிள்ளையாரின் அடியவர்கள், இறுதி அஞ்சலி உரை செலுத்தியவர்கள் மற்றும் அனைவருக்கும், எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் நாளை (08.05.2019) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் பங்குபற்றி தொடர்ந்து நண்பகல் 12.00 மணியளவில் நடைபெறவுள்ள மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(தயவு கூர்ந்து இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

**28/3 மணல்தறை ஒழுங்கை,**
**கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்.**



தோற்றம் 14 . 08 . 1937

மறைவு 04 . 05 . 2019

# திருமதி பிலோமினா திருச்செல்வம்

நெடுந்தீவு மத்தி 10 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பிலோமினா திருச்செல்வம் கடந்த (04.05.2019) சனிக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான யோசேப்பு ஆகுதாசி தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான மடுதீன் சலோமை தம்பதியினரின் மருமகளும் காலஞ்சென்ற மடுத்தீன் திருச்செல்வத்தின் அன்பு மனைவியும் மரியதேவதாசன் (பிரான்ஸ்), மேரி யோசேப்பின் (அவுஸ்திரேலியா) , திருஞான தீபசெல்வம் (இந்தியா), காலஞ்சென்ற நிர்மலா ஆகியோரின் பாசமிகு தாயாரும் செல்வமலர், மருதநாயகம் (மருது), தேன்மொழி ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான அருளப்பு, கிறிசாந்து, மரியம்மா, ஆபிரகாம், திரேசம்மா ஆகியோரின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்ற அமிர்தநாதர், கிரிஸ்ரவெல் ஜெயராணி, சகாஜமேரி சறோயா, மேரிமென்ரேஸா, ஞானச்சந்திரன் (கனடா) ஆகியோரின் சின்னம்மாவும் சாந்தி, செல்வின், காருன்யா, அனிதா ஆகியோரின் அன்பு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் நாளை (08.05.2019) புதன் கிழமை மு.ப 10.00 மணிக்கு நெடுந்தீவு மத்தி புனித பற்றிமா அன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் நெடுந்தீவு மத்தி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


**செல்வம் : 0094 714 926279 (இலங்கை)**
**மருது : 0094 760 53 1852 (இலங்கை)**
**தாசன் : 0033 609249103 (பிரான்ஸ்)**

**தகவல்: குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

# சின்னையா சண்முகலிங்கம்

*(B.S.C. Dip in Edu, PGC in Ed (UK), SLEAS*
*ஓய்வுபெற்ற விரிவுரையாளர் பலாலி ஆசிரியர் கலாசாலை)*



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் சுதுமலை மத்தி மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா சண்முகலிங்கம் 05.05.2019 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா இலட்சுமி தம்பதிகளின் பாசமிகு மகனும் K.S. சுப்பிரமணியம் (K.S.S. யாழ். இந்துக் கல்லூரி) பூமணி தம்பதிகளின் மருமகனும் குணபாக்கியம் (ஓய்வு பெற்ற ஆசிரியை - யாழ். இந்து மகளிர் கல்லூரி, யாழ். இராமநாதன் கல்லூரி, மட்டக்களப்பு இந்து கல்லூரி, சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்) இன் பாசமிகு கணவரும் வசந்தி, சுகந்தி, ஜெயந்தி, சிறீதயாளன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் இரவிச்சந்திரன், காலஞ்சென்ற செந்திவாசன் (சேனன்) மற்றும் சுமி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் மயூரி, நிஷி, அஷ்வினி, அனுஜன், ஆரண் ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களான கந்தையா, நகேஸ்வரி, மகேஸ்வரி, ஆறுமுகம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் தையல்நாயகி, காலஞ்சென்றவர்களான கந்தையா, நடேசபிள்ளை, சியாமளாதேவி, பரராஜசேகரம், நரேந்திரன், சிறீதரன் மற்றும் மகேஸ்வரி, மனோரஞ்சிதம் (ரஞ்சி), சந்திரோதயம் (சந்திரி) ஆகியோரின் அன்புமிகு மைத்துனரும் திசைவீரசிங்கம், காலஞ்சென்றவர்களான இராமநாதன், நடனசபாபதி (சபா), நாகராஜேஸ்வரி மற்றும் கலாநிதி, சகுந்தலாதேவி ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.05.2019) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சுதுமலை மத்தி,**
**மானிப்பாய்.**

**தகவல்: குடும்பத்தினர்.**

(CS 23136/15/17)

## வேலைவாய்ப்பு

கட்டட நிர்மாணத்துறை நிறுவனம் ஒன்றிற்கு பின்வரும் வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

01. தொழில்நுட்ப உத்தியோகத்தர் (Civil)
02. தொழில்நுட்ப உத்தியோகத்தர் (Electrical)
03. கணிய அளவையாளர் (Q.S)
04. வேலைத்தள மேற்பார்வையாளர்

ஆர்வமுள்ளவர்கள் 03 நாட்களுக்குள் தங்களது சுயவிபரக்கோவையுடன் விண்ணப்பிக்கவும். நேர்முகத்தேர்வு (11.05.2019) அன்று காலை 9.00 மணிக்கு நடைபெறும்.

Email: vacancynsc@gmail.com
Fax: 0212213663
T.P 077 712 0945
Address: No.09, Nanthavil Lane, Thavady.

## கண்ணீர் அஞ்சலி

யாழ். போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராக கடமைபுரியும் திருமதி R.குமுதினியின் அன்புத்தந்தை

**சிற்றம்பலம் இராசரத்தினம்**

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரினது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்தெரிவிப்பதுடன் அன்னாரினது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

**தாதிய உத்தியோகத்தர் நலன்புரிக் கூட்டுறவுச்சங்கம்**

ES Printers
357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
esprintersjaffna@gmail.com
021 492 7471, 021 492 7472

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 26 . 05 . 1965



உதிர்வு 07 . 04 . 2019

### அமரர் சின்னத்துரை சற்குணரத்தினம்

பண்பின் உறைவிடமாய் அன்பின் இலக்கணமாய்
நோயொடு நொடிந்தும் ஒளி விளக்காய் ஒளிதந்தாயப்பா !
நின் ஆறுதலும் அரவணைப்பும் இனி யார் தருவாரப்பா !
எமக்கரணாய் இருந்ததுபோல விண்ணுலகிலிருந்தும் எம்மை காத்தருள்வீரப்பா !

கடந்த 07.04.2019 ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் இன்று (07.05.2019) செவ்வாய்க்கிழமை மு.ப. 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும்.

இந் நிகழ்வில் தாங்களும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கொயிலாமனை, கொடிகாமம்.

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### திருமதி சுந்தரவல்லி (ஈஸ்வரி/ஈசு) துரைசிங்கம்



வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை 84/3 தபால் கந்தோர் ஒழுங்கையினை வதிவிடமாகவும் இல. 259, பருத்தித்துறை வீதி, நல்லூரைதற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி சுந்தரவல்லி (ஈஸ்வரி/ஈசு) துரைசிங்கம் நேற்று (06.05.2019) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் வேலணை மேற்கு வேலணையைச் சேர்ந்த காலஞ் சென்றவர்களான பிரமநாயகம் பிள்ளை (தர்மர்) மரகதம் தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் பராசக்தி தம்பதியினரின் மருமகளும்காலஞ்சென்றதுரைசிங்கத்தின் (Chshier) அன்புத்துணைவியாரும் காலஞ் சென்றவர்களான பாக்கியலட்சுமி, தயாபரன், மற்றும் அமராவதி, கண்ணபிரான், ஆகியோரின் பாசமிகு சகோதரியும் விஜயராசன், காலஞ்சென்ற சுமதி ஆகியோரின் அத்தையும் காலஞ்சென்ற விஜயசங்கர் மற்றும் யாழினி, சுமன், ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, அன்னலட்சுமி மற்றும் வீரசிங்கம், தேவாம்பிகை மற்றும் காலஞ்சென்றவர்களான சிவமணி, நாகேஸ்வரி, சாரதா, ரூபசிங்கம், இரத்தினசிங்கம், மற்றும் பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.05.2019) செவ்வாய்க்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரின் தற்காலிக இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: சி.தர்மராசா
தர்மராசா: 077 3101540, வீரசிங்கம் (அமரா): 077 247 0606

## மரண அறிவித்தல்

# சின்னத்தம்பி சொக்கலிங்கம்

***(ஓய்வுபெற்ற ஆசிரியர் - பலாலி சித்தி விநாயகர்)***



பிறப்பு 26.08.1935 இறப்பு 06.05.2019

குப்பிளானைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சொக்கலிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) நேற்று (06.05.2019) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - பறுவதம் தம்பதிகளின் மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - நல்லமுத்து தம்பதிகளின் மருமகனும் அன்னலட்சுமியின் கணவரும் கருணாகரன் (லண்டன்), சசிகலா (டென்மார்க்), சுரேஸ்கரன் (லண்டன்), வித்தியாகரன் (லண்டன்), லோகிதகலா (சுவிஸ்), அமிர்தகலா, ஸ்ரீகலா, தனேஸ்கரன் (லண்டன்) ஆகியோரின் தந்தையாரும் விஜிதா, அன்னராஜா, சிவதீபா, சிவரூபினி, பிரபாகரன், சுதர்சன், சிவகரன் ஆகியோரின் மாமனாரும் அபிராம், விஷ்ணுகரன், வைஷ்ணவி, செந்தூரன், நிலவன், எழிலன், சிவகீரன், வாரணன், ஜோதனா, ரதிவர்ணன், அஸ்வினி, மகிழினி, பௌர்ணிகா, சந்தோஸ், கருணிகா, பூர்வீகன், கனிஷ்கா, சகிந் ஆகியோரின் பேரனும் காலஞ்சென்றவர்களான சொர்ணம்மா, பத்மாவதியம்மா மற்றும் ஞானலிங்கம், அருள்ராசலிங்கம் (ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர்) ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற இராசையா மற்றும் சிங்கராசா, மல்லிகாதேவி, காலஞ்சென்ற ரேவதிதேவி (கிளி), பரிமளம், காலஞ்சென்ற ஜீவராஜா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மனைவி - 0094 77 334 3339**
**மகன் - கருணா - 0044 74 8858 1456**
**மகள் - சசி - 0045 626 14880**
**மகன் - கரன் - 0044 799 979 2424**
**மகன் - லோகன் - 0044 753 195 3165**
**மகள் - றோசா - 0041 7795 10099**
**மகள் - அமுதா - 0094 212 059 325**
**மகள் - புஷ்பா - 0094 213 007795,**
**மகள் - லக்ஷன் - 0044 750 8366 269**
**தம்பி - அருள்ராசலிங்கம் - 0094 777 495 019**
**தம்பி - ஞானலிங்கம் - 0045 517 25828**

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 25189/15/18)

**வேலணை மேற்கு பெரியபுலம்**
**மகா கணபதிப்பிள்ளையார் கோவில்**
**(முடிப்பிள்ளையார்)**

**விகாரி வருட மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2019**

விநாயகப் பெருமான் அடியார்களே!

07.05.2019 மண்டலாபிஷேக பூர்த்தி (சங்காபிஷேகம் காலை 10.00 மணி)
08.05.2019 கொடியேற்றம் காலை 10.30 மணி
09.05.2019 உற்சவ மூர்த்திக்கு சங்காபிஷேகம்
11.05.2019 மூலமூர்த்திக்கு சங்காபிஷேகம்
15.05.2019 வேட்டைத் திருவிழா மாலை 3.00 மணி
16.05.2019 சப்பைரத திருவிழா இரவு 7.00 மணி
17.05.2019 தேர்த்திருவிழா காலை 9.30 மணி
18.05.2019 தீர்த்தோற்சவம் காலை 8.00 மணி

*அனைவரும் கலந்து அருள்பெறுக!*

**குறிப்பு** : விழாக்காலங்களில் அடியவர்களிற்கு ஐங்கரன் அன்னதான சபையினர் மகேஸ்வர பூசையையும் வழங்க உள்ளனர்.

**ஆலய பரிபாலன சபையினர்**
**வேலணை மேற்கு, பெரியபுலம்**
**மகா கணபதிப் பிள்ளையார் (முடிப்பிள்ளையார்) ஆலயம்**

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சரஸ்வதி கஜமுகன்

**(ஓய்வுநிலை நெசவு ஆசிரியர்)**



அன்னைமடியில் 20.09.1934 — ஆண்டவன் அடியில் 05.05.1994

யாழ். காரைநகர் வலந்தலையைப் பிறப்பிடமாகவும், மூளாய் கிழக்கு, ஏழாலை கிழக்கு ஆகிய இடங்களை வசிப்பிடங்களாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி கஜமுகன் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை (05.05.2019) இரவு 08.45 மணியளவில் தனது வதிவிடமான ஏழாலை கிழக்கில் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு திருமதி. லோங் முருகேசு பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நல்லசேகரம்பிள்ளை தங்கம் தம்பதியினரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற நாகம்மாவின் அன்புச் சகோதரியும், முருகேசு கஜமுகனின் அன்புக் கணவரும் வேல்வேந்தன் (பொறியியலாளர், இலண்டன்), வாசுகி (இலண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஞானகௌரி, திருக்குமார் ஆகியோரின் அன்பு மாமியாரும், சிவகுகன், வாகீசன், கஜானன், பவித்திரா, அபர்ணா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும், மூத்த ஓதுவார் ஏழாலையூர் கலாபூசணம் க. ந. பாலசுப்பிரமணியத்தின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.05.2019) செவ்வாய்க் கிழமை காலை 7.00 மணியளவில் ஏழாலை கிழக்கிலுள்ள புளியடி ஞானவைரவர் ஆலயத்திற்கு அண்மையிலுள்ள அவரது வதிவிடத்தில் இடம்பெற்று அதனைத் தொடர்ந்து பூதவுடல் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு காரைநகர் சாம்பலோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**0772677503** — **தகவல்: குடும்பத்தினர்.**

### திருமதி சொர்ணலட்சுமி சிவசுப்பிரமணியம்

**(கொங் கொங் மாமி)**



தோற்றம் 21.03.1932 — மறைவு 06.05.2019

மூளாய் வீதி, வட்டு தெற்கு உடுக்கியவளை ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சொர்ணலட்சுமி சிவசுப்பிரமணியம் நேற்று (06.05.2019) திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நவரத்தினம் ஆச்சிமுத்து தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் சேகரன் (லண்டன்), சுகிர்தலாதேவி ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற கணேசானந்தன் மற்றும் பரமசிவம் ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற இராசதுரை அன்னலட்சுமியின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (07.05.2019) செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வலுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மூளாய் வீதி**
**வட்டுக்கோட்டை**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**புதிய வினோ நகை மாடம்**

அட்ஷய திருதியை 07.05.2019 செல்வம் வருகிட
அட்ஷய திருதியை வாழ்த்துக்கள்




சிறந்த விலைக் கழிவுடன்
22 கரட் தங்க நகைகள்
நவீன அழகிய
தங்க ஆபரணங்களுக்கு
சிறந்த ஸ்தாபனம்
தரம் மாறாத
தங்கநகைகளுக்கு
ஒரே இடம்
பிரதான வீதி, சங்கானை.
(செலான் வங்கி அருகாமை)
தொ.பே.இல. : 077 600 2588

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மல்லிகாதேவி குலசேகரம்



நாவற்குழி மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மல்லிகாதேவி குலசேகரம் நேற்று (06.05.2019) திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் நாகம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற குலசேகரத்தின் அன்பு மனைவியும், குலமதி, குலசீலன், குலறதி, குலசசி, குலறஜீஸ் (இலங்கை மின்சாரசபை, சாவகச்சேரி) ஆகியோரின் அன்புத் தாயும் றஞ்சன், யாழினி, சத்தியலிங்கம், றாஜ்குமார், றொஷானி ஆகியோரின் அன்பு மாமியும் குலறஞ்சினி, துஷ்யந்தன், துயர்சன், குலர்சன், விதுர்சிகா, கோகிலா, பிசாந், விதுஷா, பிரசாந், அபிமன்யு ஆகியோரின் அன்புப்பேர்த்தியும், தபிசனின்பூட்டியும், காலஞ்சென்றவர்களான இராசரத்தினம், குமாரசிங்கம், செல்வரத்தினம், கோபாலசிங்கம், ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.05.2019) புதன் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக நாவற்குழி மேற்கு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கேரதீவு வீதி,**
**நாவற்குழி மேற்கு, கைதடி**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**



### திருமதி இந்திராணி குமாரசாமி

*(ராணி அக்கா)*

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் இல. 65, மஞ்சுளா பேக்கரி சந்தி அருகில் திருநகர் வடக்கு, கிளிநொச்சியை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இந்திராணி (ராணிஅக்கா) குமாரசாமி நேற்று (06.05.2019) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்து - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னையா - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் குமாரசாமி (சிறி) யின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, இலட்சுமி, ஆறுமுகம், தங்கம்மா, சிவக்கொழுந்து, விக்கினேஸ்வரன், நாராயணமூர்த்தி ஆகியோரின் சகோதரனும் வாசுகி (முகாமையாளர் - ஒருங்கிணைந்த பண்ணையாளர் சி. க. கூ. சங்கம், கிளிநொச்சி), கயல்விழி, இந்துாசினி (தேசிய சேமிப்பு வங்கி, கிளிநொச்சி), மயூரினி (பிரான்ஸ்), தயாஸ்கர் ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவசிதம்பரம், ஜெயக்குமார், அஜந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும் கலையகன் (மாணவன் - கிளிநொச்சி ம. வி), லிதுசன் (பிரான்ஸ்), லக்சனா (பிரான்ஸ்) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.05.2019) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 3.00 மணிக்கு திருநகர் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல. 65, திருநகர் வடக்கு.**
**கிளிநொச்சி. 077 570 1828**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## நீர்கொழும்பின்...

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்துள்ளார்.

இரு குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட முறுகல் நிலைமையே பின்னர் வன்முறையாக மாறியது என்றும், தனிப்பட்ட பிரச்சினை ஒன்றே வன்முறையாக மாற்றம் பெற்றது என்றும் அவர் விளக்கமளித்துள்ளார்.

**நடந்தது என்ன?**

நேற்றுமுன்தினம் மாலை நீர்கொழும்பு கொச்சிக்கடைப் பகுதியிலுள்ள கடலில் குளிக்கச் சென்ற பலகத்துறையைச் சேர்ந்த முஸ்லிம் இளைஞர்கள் நால்வருக்கும், சிங்கள இளைஞர்கள் குழு ஒன்றுக்கும் இடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது. சிங்கள இளைஞர்கள் மதுபோதையில் இருந்தனர் என்று கூறப்படுகின்றது. வாய்த் தர்க்கம் முற்றி முஸ்லிம் இளைஞர்கள் மீது சிங்கள இளைஞர் குழு தாக்குதல் நடத்தியுள்ளது. அந்த முஸ்லிம் இளைஞர்கள் வந்திருந்த முச்சக்கர வண்டி சிங்கள இளைஞர் குழுவால் தாக்கிச் சேதப்படுத்தப்பட்டது என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்திருந்தனர்.

இந்தச் சம்பவத்தை அடுத்து அந்தப் பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டது. குறித்த பகுதியில் முப்படையினரும் களமிறக்கப்பட்டனர்.

இதன்பின்னர் பலகத்துறைப் பகுதியில் ஒன்றுகூடிய முஸ்லிம் மக்கள், முஸ்லிம் இளைஞர்களைத் தாக்கிய குழுவுக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். அந்தத் தகவலை அறிந்த சிங்கள மக்கள் பெரும் எண்ணிக்கையில் கூடி பலகத்துறைப் பகுதிக்குச் சென்று அந்தப் பகுதியில் நின்ற வாகனங்களை அடித்து நொறுக்கித் தீவைத்துக் கொளுத்தியுள்ளனர். சில வர்த்தக நிலையங்களையும், வீடுகளையும் தாக்கிச் சொத்துக்களை நாசம் செய்துள்ளனர் என்று அங்கு வாழும் மக்கள் கூறுகின்றனர்.

நிலமை கட்டுமீறிச் சென்றதை அடுத்து நீர்கொழும்புப் பொலிஸாரும், பொலிஸ் சிறப்பு அதிரப் படையினரும், முப்படையினரும் குவிக்கப்பட்டு, பொலிஸ் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுக் கலவரக்காரர்கள் அகற்றப்பட்டனர். எனினும், பாதுகாப்புத் தரப்பினரின் கட்டளைக்கும் கீழ்ப்படிய மறுத்து, அவர்களின் முன்பாகவே சிலர் வன்முறையில் ஈடுபட்டனர்.

பலகத்துறைப் பகுதி முஸ்லிம் மக்கள் அதிகமாக வாழும் பகுதி. கொச்சிக்கடை உட்பட அயல் கிராமங்களைச் சேர்ந்தவர்களே பலகத்துறைக்குச் சென்று வன்முறையில் ஈடுபட்டனர். அச்சமடைந்த பலகத்துறை முஸ்லிம் மக்கள் நேற்றுமுன்தினம் இரவு அந்தப் பகுதியில் உள்ள பெரிய பள்ளிவாசலில் தஞ்சமடைந்திருந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

நீர்கொழும்பில் நேற்றுமுன்தினம் 8 மணியிலிருந்து நேற்றுக் காலை 7 மணிவரை ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த வேளையிலும் தமது வீடுகள் ம்ற்றும் வர்த்தக நிலையங்கள் மீது வன்முறையாளர்கள் தாக்குதல் மேற்கொண்டிருந்தனர் என்று அங்குள்ள முஸ்லிம் மக்கள் கவலை தெரிவித்தனர்.

(எ-22)

## தனித்திருந்த...

இந்தச் சம்பவம் நேற்று தெல்லிப்பளையில் நடந்துள்ளது. சு.கமலாதேவி (வயது-70) என்பவரே மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார்.

இந்த மூதாட்டி தனித்து வாழ்ந்து வந்தார் என்றும், எனினும் நேற்றுப் பகல் இவருடன் ஒரு பெண் இருந்தார் என்றும் உறவினர்கள் தெரிவித்தனர். அவர்கள் இருவரையும் நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் இறுதியாகக் கண்டதாவும், நேற்றுக் காலை மூதாட்டியின் வீட்டுக்குச் சென்றபோது அவர் உயிரிழந்த நிலையில் காணப்பட்டதுடன், வீட்டின் கதவுகள் திறந்த நிலையில் காணப்பட்டன என்று அயலவர்களால் தெரிவிக்கப்பட்டது.

மூதாட்டியின் கழுத்தில் உள்ள அடையாளத்தை வைத்து அவர் கழுத்து நெரிக்கப்பட்டுக் கொல்லப்பட்டிருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்படுகின்றது. எனினும் உடற்கூற்றுச் சோதனையின் பின்னரே மூதாட்டியின் உயிரிழப்புத் தொடர்பில் உறுதியான தகவல்களை வழங்க முடியும் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாகத் தெல்லிப்பழை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ-26,37)

## நுவரெலியாவில்...

கிக்கப்படும் இடம் ஒன்று நேற்று நுவரெலியாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அந்த இடம் இராணுவத்தினராலும், பொலிஸாராலும் சுற்றிவளைக்கப்பட்டுத் தேடுதல் நடத்தப்பட்டது.

நுவரெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிளக்பூல் பகுதியில் உள்ள பாடசாலையொன்றுக்கு மிக அருகிலுள்ள இரண்டு மாடிக் கட்டடமே நேற்று சுற்றிவளைக்கப்பட்டது.

தற்கொலைக் குண்டுதாக்குதலின் பிரதான சூத்திரதாரி என்று கூறப்படும் தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் தலைவர் சஹ்ரான் ஹாசீம் உட்பட 35 பேர் இங்கு பயிற்சி பெற்றுள்ளனர் என்று பொலிஸார் கூறுகின்றனர். அம்பாறை, காத்தான்குடிப் பிரதேசத்தில், சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட ஒருவர் வழங்கிய தகவலுக்கு அமையவே இந்தக் கட்டடம் சுற்றிவளைக்கப்பட்டுத் தேடுதல் நடத்தப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை, இந்தக் கட்டடத்திலேயே உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கான இறுதிப் பயிற்சி, ஏப்ரல் 17ஆம் திகதியன்று ஒத்திகை பார்க்கப்பட்டது என்ற தகவல்களும் வெளியாகியுள்ளன. (எ-22)

## மோதல்களைத்...

இவ்வாறு தெரிவித்துள்ளார் கொழும்புப் பேராயர் கர்தினல் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை.

நீர்கொழும்பில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட பதற்ற நிலைமையை அடுத்து அந்தப் பகுதிக்கு நேற்று அவர் சென்றிருந்தார். அவருடன் ஜம்இய்யத்துல் உலமா சபையின் தலைவர் மௌலவி எம்.ஐ.எம்.றிஸ்வியும் சென்றிந்தார். அங்கு இஸ்லாமியத் தலைவர்கள் மற்றும் பல தரப்பினருக்கு மத்தியில் நடந்த கலந்துரையாடலில் பின்னர் உரையாற்றியபோதே பேராயர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முஸ்லிம்களுக்கு எதிரான போராட்டத்துக்குக் கிறிஸ்தவர்கள் வரவே மாட்டார்கள் என்ற சான்றிதழை நான் நம்பிக்கையுடன் தருகின்றேன். இந்த விடயங்களிலிருந்து நாம் விடுபட்டு முன்னோக்கி செல்வது பற்றி சிந்திக்க வேண்டும். அதற்காக நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

இந்த நாட்டில் மூவின மக்களும் ஒற்றுமையாக வாழவேண்டும் என்பதே எமது விருப்பம். நாம் எல்லோரும் சகோதரர்களே. எமக்குள் பிரிவினைகள் வேண்டாம். வன்முறைகள் ஊடாக எதனையும் சாதிக்க முடியாது. ஓர் இனத்தை இன்னொரு இனம் அடக்கி ஆளவே முடியாது. அப்பாவி மக்களின் உயிர்களுடன் அவர்களின் சொத்துக்களுடன் எவரும் விளையாடக்கூடாது. குற்றவாளிகள் அனைவரையும் சட்டத்தின் முன் நிறுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றார்.

அதேவேளை, கொழும்பில் உள்ள பேராயர் இல்லத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த பேராயர், நீர்கொழுப்பில் நடைபெற்ற கசப்பான சம்பவத்துக்கு அங்குள்ள வாசிகள் காரணமாக இல்லை. வெளியிலிருந்து வந்தவர்களே காரணமாக இருக்கின்றார்கள்.

வெளியாரை அழைத்து வந்து அவர்களுக்கு அதிகமாக மது அருந்தச் செய்து முஸ்லிம்களையும், கத்தோலிக்கர்களையும் பிளவுபடுத்தி மோதல்களை உருவாக்கச் செய்யும் செயற்பாடொன்றே மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது.

மதுப்பாவனையையும் போதைப்பொருளையும் இலங்கையிலிருந்து முற்றாக ஒழிக்கும் வேலைத்திட்டத்தை முன்னெடுக்கும் அதேநேரம், தற்போதைய சூழலில் நீர்கொழும்பு பகுதியில் உள்ள அனைத்து மது விற்பனை நிலையங்களையும் மூடுவதற்கான உத்தரவைப் பிறப்பிக்க வேண்டும் என்று அரச தரப்பைக் கோருகின்றேன் - என்றார். (எ-22,61)

## இழப்பீடு...

குமாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அறிவுறுத்தியுள்ளார்.

சேதங்கள் தொடர்பில் மதிப்பீடுகளை மேற்கொண்டு, அதற்கான இழப்பீடுகளை வழங்க விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் அவர் பணித்துள்ளார்.

தேசிய கொள்கைகள், பொருளாதார நடவடிக்கைகள், மீள்குடியேற்றம், வடக்கு அபிவிருத்தி, இளைஞர் விவகார அமைச்சின் கீழ் சேதங்களுக்கான அலுவலகம் ஊடாக சேதங்கள் தொடர்பாக மதிப்பீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தலைமை அமைச்சர் தெரிவித்துள்ளார். (எ-22)

## கோடிக்கணக்கான...

ளிட்ட பல பொருள்கள் மீளப் பாவிக்க முடியாதளவு சேதங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்று நீர்கொழும்பில் பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்கள் கண்ணீருடன் தெரிவித்துள்ளனர்.

நீர்கொழும்பில் நேற்றுமுன்தினம் பதற்ற நிலைமை உருவாகியிருந்தது. அதைத் தொடர்ந்து வாகனங்கள் தீக்கிரையாக்கப் பட்டதுடன், சில கடைகளும் சேதப்படுத்தப்பட்டன. பாதிக்கப்பட்ட மக்களில் பலர் பலகத்துறை பெரிய பள்ளிவாசலில் தங்கியுள்ளனர்.

அவர்கள் தெரிவித்ததாவது:

"எமது வீடுகள், தளபாடங்கள், வாகனங்கள் எனப் பல பெறுமதிமிக்க பொருள்கள் வன்முறையாளர்களால் தாக்கி நாசம் செய்யப்பட்டுள்ளன. சில பகுதிகளில் மின்சாரம் திட்டமிட்டு நிறுத்தப்பட்டு, அதன்பின் எங்களுடைய உடமைகளுக்குச் சேதம் விளைவிக்கப்பட்டுள்ளது. சில பகுதிகளில் அச்சத்தால் நாம் வீடுகளில் மின்சாரத்தை நிறுத்தி வைத்திருந்தோம்.

அதைச் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தியுள்ள வன்முறையாளர்கள், எமது வீடுகள் மீது தாக்குதல்கள் நடத்தியுள்ளனர். எங்களுடைய சொத்துக்களைத் தாக்கிச் சேதம் ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு செயற்பட்டனர். எமது சொத்துக்கள் தாக்கப்படும்போது சில இடங்களில் பொலிஸாரும் முப்படையினரும் வேடிக்கை பார்த்தனர்.

வன்முறையாளர்களால் நாம் பரம்பரை பரம்பரையாகச் சேர்த்துவைத்த உடமைகளுக்குக்கூட சேதம் ஏற்படுத்தப்பட்டுள்ளது"-என்றனர். (எ-22)

## தீவிரவாத...

பிரிவால் இனங்காணப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

ஒரு தொகைப் பணம் மீட்கப்பட்டுள்ளது, வங்கிகளில் வைப்பிலிடப்பட்டுள்ள வங்கிக் கணக்குகள் முடக்கப்படும். அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. அதேவேளை அந்த அமைப்புக்குச் சொந்தமான 7 பில்லியன் ரூபா பெறுமதியான சொத்துக்கள் தொடர்பான விவரங்களும் கிடைத்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## நாட்டின்...

வற்றால் நாட்டின் பாதுகாப்புத் தொடர்பில் கேள்வி எழுப்பப்படும் நிலையில் இன்றும், நாளையும் நாடாளுமன்றத்தில் பாதுகாப்புத் தொடர்பான விவாதங்கள் நடைபெறவுள்ளன.

சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற நாடாளுமன்றக் கட்சித் தலைவர்களின் கூட்டத்திலேயே விவாதங்கள் நடத்துவது குறித்து தீர்மானிக்கப்பட்டுள்ளது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் நேற்றிரவு 'உதயன்' பத்திரிகையிடம் தெரிவித்தார்.

அனைவரும் பொறுப்புடன் விவாதத்தில் கலந்துகொள்ளுமாறு சகல கட்சித் தலைவர்களிடமும் சபாநாயகர் வேண்டுகோள் விடுத்துள்ளார் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் மேலும் தெரிவித்தார். (எ-22)

## நீர்கொழும்புச்...

கொழும்பில் நேற்று நடத்தப்பட்டச் செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த வன்முறைகள் தொடர்பாக இரு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இரு நபர்களுக்கு இடையே வாய்த்தகராறு ஏற்பட்டுள்ளது. கூடுதலான மதுபானம் அருந்தியிருந்த ஒரு குழுவினர் இந்தச் சம்பவத்தில் தலையீடு செய்தனர். அதையடுத்தே நீர்கொழும்பில் அமைதியற்ற நிலைமை ஏற்பட்டது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-22)

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்:3180 திகதி: 2019.05.06 திங்கட்கிழமை
SATURDAY FORTUNE
நிலம்
வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து: 08 48 52 65 E
போனஸ் இலக்கம்: 31
அடுத்த புதன்கிழமைக்கான ஜக்பொட்: 41,506,365/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919 இற்கு அனுப்பவும்.
0114 824 824, 0112 333 778

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 602
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2019.05.06
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 59,033,705/-
வெற்றி இலக்கங்கள்: 21 44 46 58 H
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919 இற்கு அனுப்பவும்.
0114 824 824, 0112 333 778

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 967
சீட்டிழுப்பு திகதி 2019.05.05 ஞாயிற்றுக்கிழமை
S 14 29 30 69
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
மஞ்சள், பச்சை, நீலம், சிவப்பு நிற டிக்கட்டுகள் முறையே திங்கட்கிழமை, வியாழக்கிழமை, சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

கோடிபதி ஷனிதா
சீட்டிழுப்பு வாரம்: 439 சீட்டிழுப்பு திகதி: 2019.05.05
வர்ணம்: பச்சை ஞாயிற்றுக்கிழமை
T 12 14 33 50
அடுத்த ஜக்பொட் ரூ. 123,261,673/-
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>KS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1566 சீட்டிழுப்பு திகதி 06.05.2019
வெற்றி இலக்கங்கள்: 02 28 37 49 I
அடுத்த வியாழக்கிழமைக்கான ஜக்பொட் ரூ.30. 486. 052/=
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
0114 824 824, 0112 333 778

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மலர்வு 02.01.1943 உதிர்வு 08.04.2019

## அமரர் சின்னத்தம்பி ஈஸ்வரலிங்கம்

(ஓய்வு நிலை இ.போ.ச கணக்காளர்)

கடந்த 08.04.2019 திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது குலவிளக்கின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (08.05.2019) புதன்கிழமை காலை 9.00 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் அதனைத் தொடர்ந்து மதியம் எமது இல்லத்தில் வீட்டுக்கிருத்தியக் கிரியைகளும் நடைபெறும். இந் நிகழ்வில் தாங்களும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம் பெறும் மதிய போசனத்திலும் பங்கு பற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


**ஐயனார் வீதி,
சுன்னாகம்.**

**யோகறஞ்சன் சுவேந்தினி
(மகள் - இலண்டன்)**

# மரண அறிவித்தல்

## பொன்னம்பலம் முத்தையா சோமசுந்தரம்

*(மதிப்பீட்டாளர் - இறைவரித் திணைக்களம்)*



தோற்றம் 22.05.1931 மறைவு 06.05.2019

புலோலியைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் முத்தையா சோமசுந்தரம் நேற்று (06.05.2019) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா - சோதிமுத்து தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான O. A. இராமநாதன் - சிவகாமி தம்பதிகளின் அன்பு மருமகனும் தெய்வநாயகியின் அன்புக் கணவரும் சிவாஞ்சலி (கனடா), சண்முகானந்தன் (பிரதிப் பிரதம செயலாளர், பொறியியல் சேவை, வடமாகாணம்), சண்முகாசஞ்சலி (பிரித்தானியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆதித்தன் (கனடா), சிவப்பிரியா (கொழும்பு) கருணாகரன் (பிரித்தானியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் தணிக்காசலம், பொன்னம்பலம், தங்கராஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும் துவாரகன், அஜந்திகா, நிஷேவிதா, தக்ஷாயன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.05.2019) புதன் கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**11/1, நாயன்மார்கட்டு வீதி,
நல்லூர்.**

**தகவல்:
எந்திரி. சோ. சண்முகானந்தன்**

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# நீர்கொழும்பு சம்பவம் புகட்டும் பாடம்!

உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டு வெடிப்புக்கள் மற்றும் படுகொலைகளின் பின்னணியில் கனன்றுகொண்டிருந்த நெருப்பு நீர்கொழும்பில் நேற்று முன்தினம் பற்றிக்கொண்டது போன்று தோன்றுகின்றது. அங்கு ஏற்பட்ட குழப்பம், கலவரம் நேற்றுக் கட்டுக்குள்வந்துவிட்டதாகப் பொலிஸார் அறிவித்துள்ளனர். எனினும் அது பல அபாயச் சங்குகளை ஊதிச் சென்றிருக்கின்றது.

நீர்கொழும்பில் ஏற்பட்ட சம்பவம் சிறு குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட குழப்பம் என்பதாகக் காட்டுவதற்கே கொழும்பு ஆட்சித்தரப்பு முயல்கின்றது. குழப்பம் ஏற்பட்டதற்கான காரணம் இரு சிறு குழுக்கள் இடையிலான முரண்பாடுகள்தான் என்பதை மறுக்க முடியாது. ஆனால், அதன் பின்னணியில் செயற்பட்ட பௌத்த, சிங்கள தேசியவாதத்தின் கரங்களை மறைக்க முடியாது.

இந்தக் கலவரம் ஒப்பீட்டளவில் மிகச்சிறியதே என்கிற போதும் இதற்கு முன்னர் இலங்கை கண்ட தமிழ்– சிங்களக் கலவரங்களின் அனைத்துக் கூறுகளையும் இதிலும் காணமுடிவது வேதனையானது, வெட்கப்பட வேண்டியது.

சமூக வலைத்தளங்களில் காணக்கிடைக்கும் பல காணொலிகளில் அங்கு என்ன நடந்தது என்கிற உண்மையை நெருங்கிச் சென்று பார்க்கக்கூடியதாக இருக்கின்றது.

1. வன்முறைகளுக்குகாரணமானவர்களாகச்சிறுபான்மையினத்தைச் சேர்ந்தவர்கள் இருக்கின்றபோது, அவர்களுக்கு எதிரான பௌத்த, சிங்கள மனோநிலை வீறு கொண்டு எழுந்து பழிதீர்ப்பதற்கு நிற்கின்றது.

2. சிறுபான்மை மக்களைத் தாக்குதவதற்காக சிங்கள மக்களைக் கொண்ட பெரும் கூட்டம் ஒன்று பொல்லுகள் சகிதம் வன்முறையை நாடி உடனடியாகத் திரள்வதற்கான சக்தியையும் ஊக்கத்தையும் கொண்டிருக்கிறது. அதற்கு அடிப்படையாக அமைந்திருக்கும் சிறுபான்மையினர் மீதான வெறுப்புணர்வு இத்தகைய சந்தர்ப்பங்களில் பீறிட்டுப் பாய்கின்றது.

3. படையினர் மற்றும் பொலிஸாருக்கு முன்பாகவே சிங்கள வன்முறையாளர்கள் துணிந்து வன்முறையிலும் அட்டூழியங்களிலும் ஈடுபட முடிகின்றது. தரைப்படை, பொலிஸ், அதிரடிப் படை என்று அனைத்தும் வன்முறையில் ஈடுபடும் சிங்களவர்களை வேடிக்கை பார்த்து நிற்கின்றது. அல்லது அவர்களை அடங்கிப் போகச் சொல்லி மென்போக்கோடு அவர்களைக் கையாள்கின்றது.

4. பாதிக்கப்பட்ட மக்களுக்குச்சார்பாக படையினரும் பொலிஸாரும் இருக்கவில்லை என்கிற குற்றச்சாட்டு பாதிக்கப்பட்ட தரப்பினரிடம் இருந்து வெடித்துக் கிளம்புகின்றது.

5. பெரும் கூட்டமே, கும்பலே வன்முறைகளுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் காரணமாக இருந்தபோதும் பெயருக்குச்சிலர்மட்டும்கைது செய்யப்படுகிறார்கள் அல்லது சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுகின்றார்கள்.

ஆகிய இந்தக் கூறுகள் அனைத்தையும் இலங்கை இதற்கு முன்னர் எதிர்கொண்ட இனக் கலவரங்களின் போதும் காணமுடியும். இம்மியும் மாறாமல் இப்போதும் அதுவே நடந்து வருகின்றது என்பது 30 வருடப் போர் மற்றும் அவலங்களுக்குப் பின்னரும் அடிப்படை மனோநிலையில் மாற்றம் ஏற்படவில்லை என்பது தெளிவாகின்றது.

மாறி மாறி அதிகாரத்துக்கு வரும் ஆட்சியாளர்கள் எல்லோரும் சிங்கள, பௌத்த தேசியவாதத்தை அனுசரித்து அனுசரித்து நகர்வதன் விளைவே இது. இதில் மாற்றம் ஏற்படாதவரையில் இந்த நாட்டில் நிரந்தரமான அமைதி ஏற்படுவது என்பது துர்பலமே!

# மக்கள் விழித்தெழாதவரை நாட்டுக்கு விடிவில்லை

"ஈஸ்டர் புனித தினத்தன்று இடம்பெற்ற தாக்குதலுக்கு சுமார் நான்கு மில்லியன் அமெரிக்க டொலர் பணம் கைமாற்றப்பட்டதாக இஸ்ரேலின் உளவுத்துறை கூறியதைப் புறமொதுக்கிவிட முடியாது. தற்கொலை குண்டுதாரிகள் மதத்தின் பெயரைக் கூறிக்கொண்டு பணத்துக்காக இந்த ஈனச் செயலைப் புரிந்திருந்தால் அந்த ஆண்டவன் அவர்களை ஒருபோதுமே மன்னிக்க மாட்டான்."

சேரலாதன்

வெளிநாட்டு இராணுவத்தை அழைக்காமல் நீண்ட காலமாக இடம் பெற்ற போருக்குத் தாம் முடிவு கட்டியதாக முன்னாள் அரச தலைவரும் தற்போதைய எதிர்க்கட்சித் தலைவருமான மகிந்த ராஜபக்ச பெருமையாகக் கூறியுள்ளார். இதேவேளை பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளுக்காக வெளிநாட்டு இராணுவத்தை அழைக்கின்ற நோக்கம் தமக்குக் கிடையாதெனவும் வெளிநாட்டு நிபுணர்களின் உதவியே தமக்குத் தேவையாக இருப்பதாகவும் அரச தலைவர் கூறியிருக்கிறார். இறுதிப் போரில் இலங்கைக்கு எவ்வாறு வெற்றி கிடைத்தது என்பது இரகசியமான விடயமல்ல. வெளிநாடுகளின் உதவி கிடைத்திருக்காதுவிட்டால் போர் முடிவுக்கு வந்திருக்க மாட்டாது. விடுதலைப் புலிகளைத் தோற்கடிப்பதில் இந்தியாவின் பங்கு மிகப் பிரதானமாக அமைந்திருந்தது. தமிழர்களின் போராட்டம் கொச்சைப்படுத்தப்பட்டு புலிகளை ஒரு பயங்கரவாத அமைப்பாகவே இலங்கை அரசு சித்தரித்துக் காட்டியதால் அமெரிக்கா உள்ளிட்ட மேற்குல நாடுகள் புலிகளுக்குத் தடைவிதித்ததுடன் அந்த அமைப்பை அழிப்பதற்கான உதவிகளையும் இலங்கை அரசுக்கு வழங்கின. ஆனால் போர் தொடர்வதற்கான காரணங்களைக் கண்டறிவதில் இந்த நாடுகள் தவறிவிட்டன. இதன் விளைவாகவே இனப்பிரச்சினை தொடருவதுடன் தமிழர்கள் தீர்வு எதையும் பெறமுடியாதநிலையில் அவல வாழ்வு வாழ்கின்றனர்.





**பெரும் தலைவலியானது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு**

முன்னாள் அரச தலைவர்கள் புலிகளுடன் பேசி அவர்கள் போரிடுவதற்கான காரணங்களைக் கண்டறிந்து அவற்றுக்குத் தீர்வு காண்பதற்கு முயன்றிருந்தால் 30ஆண்டு காலமாக இந்த நாட்டில் போரே இடம்பெற்றிருக்காது. பேரழிவுகளையும் தவிர்த்திருக்க முடியும். ஆனால் இனவாதம் அதற்கு இடம்கொடுக்கவில்லை. இன்று மதவாதம் புதிய தலைவலியாகியுள்ளது.

ஏதாவதொரு நாட்டில் இடர் ஏற்படும்போது அந்த நாட்டில் வாழ்கின்ற அனைவரும் ஒற்றுமையாகச் செயற்படுவதுடன் அரசுக்குத் தமது ஆதரவையும் வழங்க வேண்டும். ஆனால் இந்த நாட்டில் என்னதான் நடக்கின்றது? நாடு பெரும் உயிரிழப்புக்களை எதிர்கொண்ட அதிர்ச்சியில் இருக்கும்போது ஆட்சிக்கலைப்புத் தொடர்பாக எதிர்க்கட்சிதலைவர் திரும்பத் திரும்பக் கூறிக்கொண்டிருக்கிறார். இதேவேளை கோத்தபாய தாமே அடுத்த அரச தலைவர் தேர்தலில் வேட்பாளராக நிற்கப் போவதாக அறிக்கை வெளியிட்டுள்ளார். நடந்து முடிந்த தாக்குதல்களின் பின்னணியில் அரச புலனாய்வாளர்கள் சிலர் இருந்ததாக நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் பகிரங்கமாக குற்றம்சாட்டியுள்ளார். இவையெல்லாம் இந்த நாட்டுக்கு நல்ல சகுணங்களாகத் தெரியவில்லை.

அதுமட்டுல்லாது பயங்கரவாதச் செயல்களுக்குப் பின்னணியில் உள்ள அமைப்புக்கு அரசியல்வாதிகள் சிலர் ஆதரவு தெரிவித்து வந்ததாகச் செய்திகள் கசிந்துள்ளன. இதில் உண்மை இருக்குமானால் அத்தகையவர்களை அரசு தொடர்ந்தும் கண்டு கொள்ளாமல் இருக்க முடியாது. பெரும் எதிர்ப்புக்களுக்கு மத்தியில் அரசதலைவரால் கிழக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்ட ஹிஸ்புல்லா மீதும் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. ஆனால் அவர் இன்னமும் அந்தப் பதவியில் நீடிப்பதைக் காணமுடிகின்றது.

**அசண்டையீனம் முக்கிய காரணம்**

இஸ்லாமிய தீவிரவாதம் தலைதூக்குவது தொடர்பாகப் பல ஆண்டுகளுக்கு முன்பே செய்திகள் வெளிவர ஆரம்பித்துவிட்டன. ஆனால் அரசு அவற்றையெல்லாம் கவனத்தில் கொள்ளவில்லை. இதனால் அப்பாவி மக்கள் தமது இன்னுயிர்களையும் அங்கங்களையும் இழக்க வேண்டியதாயிற்று.

ஈஸ்டர் புனித தினத்தன்று இடம்பெற்ற தாக்குதலுக்கு சுமார் நான்கு மில்லியன் அமெரிக்க டொலர் பணம் கைமாற்றப்பட்டதாக இஸ்ரேலின் உளவுத்துறை கூறியதைப் புறமொதுக்கிவிட முடியாது. தற்கொலை குண்டுதாரிகள் மதத்தின் பெயரைக் கூறிக்கொண்டு பணத்துக்காக இந்த ஈனச் செயலைப் புரிந்திருந்தால் அந்த ஆண்டவன் அவர்களை ஒருபோதுமே மன்னிக்க மாட்டான்.

இலங்கையின் ஆட்சியாளர்கள் தம்மைத்திருத்திக் கொள்ளாதவரை நாட்டு மக்களுக்கு எந்த வகையிலும் விமோசனம் கிடைக்கமாட்டது. சுயநல அரசியல்வாதிகளை மக்கள் இனம்கண்டு ஒதுங்கி வைப்பதற்குத் தவறிவிடக்கூடாது. இந்த அரசியல்வாதிகள் இருக்கும் வரையில் எவர் உதவி செய்வதற்கு வந்தாலும் அதனால் பயன் கிடைக்கப்போவதில்லை.

# நீராவியடியில் இரு தரப்பும் வழிபாடு மேற்கொள்ளலாம்

## முல்லைத்தீவு நீதிமன்று கட்டளை

முல்லைத்தீவு, மே 7

முல்லைத்தீவு, செம்மலை கிழக்கு நீராவியடியில் இரு தரப்பினரும் வழிபாடுகளை மேற்கொள்ள முடியும். எவரும் அடுத்தவருடைய வழிபாடுகளுக்கு இடையூறு ஏற்படுத்தக் கூடாது. அந்தப் பகுதியில் ஏதேனும் கட்டடங்களை அமைப்பதானால் உரியவர்களிடம் அனுமதி பெற வேண்டும் என்று முல்லைத்தீவு நீதிவான் மன்று உத்தரவிட்டுள்ளது.

இந்த நிபந்தனைகளின் அடிப்படையில் இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான பிணைமுறியில் செல்லுமாறும் நீதிமன்றம் கட்டளையிட்டதுடன், பிணைமுறியின் நிபந்தனைகளை மீறினால், உரிய தண்டனைகள் வழங்கப்படும் என்றும் இருதரப்பினரையும் மன்று எச்சரித்தது.

அங்கு கடந்த வருடம் வழிபாடுகளில் ஈடுபட்டபோது பிக்கு தடை ஏற்படுத்தினார் என்று நீராவியடிப் பிள்ளையார் ஆலய நிர்வாகத்தினர் குற்றஞ்சாட்டியிருந்தனர். அது பற்றிப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. அங்கு சென்று நிலைமையைக் கட்டுப்படுத்திய பொலிஸார், சமாதானக் குலைவு ஏற்படக் காரணமாக இருந்தார்கள் என்று இரு தரப்பினருக்கும் எதிராக வழக்குத் தாக்கல் செய்தனர். அந்த வழக்கு நீதிமன்றில் விசாரிக்கப்பட்டு வந்தது.

சில மாதங்களுக்கு முன்னர் பிக்கு தனது இடத்தில் புத்தர் சிலை ஒன்றை அமைத்திருந்தார். அதனால் இந்த விடயம் மேலும் சிக்கலாகியது. வழக்கு விசாரணை நிறைவடைந்த நிலையில் கட்டளைக்காக வழக்கு ஒத்திவைக்கப்பட்டு வந்த நிலையில் நேற்றுக் கட்டளை வழங்கப்பட்டது.

கோவில் நிர்வாகத்தினரின் வழிபாட்டுக்கு பிக்கு தரப்பினர் எந்தவித இடையூறும் ஏற்படுத்தக்கூடாது. ஏதாவது அபிவிருத்தி வேலைகள் செய்வதாக இருந்தால் உரிய உள்ளூராட்சித் திணைக்களம், உள்ளூராட்சிச் சட்டங்களுக்கு அமைவாக அமைக்கவேண்டும் என்றும் கட்டளையில் நீதிவான் எஸ்.லெனின்குமார் தெரிவித்தார். கோவில் நிர்வாகத்தினர் சார்பில் மூத்த சட்டத்தரணி அன்ரன் புனிதநாயகம் வழக்காடியிருந்தார்.

(து-246)



ஐ.எஸ்.ஐ.எஸ். தொடர்பில்

## மன்னாரில் இராணுவத்தினர் விழிப்புணர்வுப் பரப்புரைகள்

மன்னார். மே 7

மன்னாரில் இராணுவத்தினர் ஒலிபெருக்கி மூலம் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புத் தொடர்பான விழிபுணர்வுப் பரப்புரையை முன்னெடுத்து வருகின்றனர்.

ஈஸ்டர் தினத்தன்று ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பால் நடத்தப்பட்ட தாக்குதலில் சுமார் 250க்கும் மேற்பட்ட பொது மக்கள் கொல்லப்பட்டனர். சுமார் 500க்கும் அதிகமானவர்கள் காயமடைந்தனர். இதையடுத்து ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிரான செயற்திட்டங்களும் புலனாய்வு நடவடிக்கைகளும் துரித கதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இத்தகையதொரு நிலையில் மன்னாரில் இராணுவம் ஒலிபெருக்கி மூலம் விழிப்புணர்வுப் பரப்புரையை மேற்கொண்டு வருகின்றது. அத்துடன் சோதனை நடவடிக்கைகளுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குமாறும் இராணுவத்தால் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

(ம-213)

## தொழிற்சாலையில் கைதான 9 பேருக்கு நீதிமன்று பிணை

### ஒருவருக்கு மறியல் நீடிப்பு

கொழும்பு, மே 7

தற்கொலை குண்டுதாரிகளில் ஒருவரான மொஹமட் இல்ஹாம் என்பவருக்குச் சொந்தமான வெல்லம்பிட்டிய தொழிற்சாலையிலிருந்து சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட 9 நபர்களும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். 10ஆவது சந்தேக நபரை மாத்திரம் எதிர்வரும் 22ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

குறித்த நபர்களை தலா 5 இலட்சம் ரூபா பிணையில் விடுவிக்குமாறு கொழும்பு மேலதிக நீதிவான் பிரியந்த லியனகே உத்தரவிட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபர்களுக்கெதிராக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் வெல்லம்பிட்டிய பொலிஸாரால் காரணங்கள் முன்வைக்கப்படவில்லை என்பதுடன் பிணையை நிராகரிப்பதற்கான போதுமான காரணிகள் பொலிஸாரிடம் காணப்படாததன் காரணமாக அவர்களுக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த 21ஆம் திகதி குண்டுத் தாக்குதல்களைத் தொடர்ந்து நடத்திய தேடுதல்களின்போது குறித்த தொழிற்சாலையிலிருந்து கடந்த வார முற்பகுதியில் இவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

(து)

## அஞ்சலி நிகழ்வு

யாழ்ப்பாணம், மே 7

பயங்கரவாத குண்டுத் தாக்குதல்களில் உயிரிழந்த அப்பாவிப் பொதுமக்களுக்கான அஞ்சலி நிகழ்வு யாழ்ப்பாண மாவட்டச் செயலக முன்றலில் நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும்.

தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய அலவல்கள் அமைச்சின் ஏற்பாட்டில் இந்த அஞ்சலி நிகழ்வு இடம்பெறவுள்ளது.

(ஐ)

## கஞ்சா வைத்திருந்தார் என்று மருதங்கேணியில் ஒருவர் கைது



யாழ்ப்பாணம், மே 7

இரண்டு கிலோகிராம் கஞ்சாவை உடமையில் வைத்திருந்தார் என்ற குற்றச் சாட்டில் நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று மருதங்கேணிப் பொலிஸார் தெரிவித்தனர்.

மருதங்கேணிப் பகுதியில் வீடு ஒன்றில் கஞ்சா உள்ளது என்று மருதங்கேணிப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் குறித்த வீட்டில் இருந்து கஞ்சாவை மீட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. தொடர்ந்து கஞ்சாவை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் மேலதிக விசாரணைக்காக பளைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். சந்தேகநபர் இன்று கிளிநொச்சி நீதிவான் மன்றில் முற்படுத்தப் படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(ம-21,26)

## இலக்கமற்ற உந்துருளியால் பரபரப்பு

கிளிநொச்சி, மே 7

முறிகண்டிப் பிள்ளையார் ஆலயத்துக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இலக்கத் தகடு அற்ற உந்துருளியால் பரபரப்பு ஏற்பட்டது. உந்துருளிக்கு உரிமை கோரியவர் பொலிஸரால் விசாரணைக்கு அழைக்கப்பட்டார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது.

முறிகண்டிப் பிள்ளையார் ஆலயத்துக்கு அருகில் இலக்கத்தகடு அற்ற உந்துருளி ஒன்று காலை 9 மணி முதல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அதை அவதானித்த பொதுமக்கள் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்துள்ளனர். அங்கு சென்ற பொலிஸார் உந்துருளியைச் சோதனைக்குட்படுத்தினர். அங்கு பொலிஸாரும், இராணுவத்தினரும் பாதுகாப்பில் ஈடுபட்டனர்.

உந்துருளியைப் பொறுப்பேற்குமாறு பொலிஸார் அறிவித்திருந்தனர். மாலை 5 மணியளவில் ஒருவர் உந்துருளிக்கு உரிமை கோரி வந்துள்ளார். நீதிமன்றத்துக்குச் செல்வதற்காக உந்துருளியை அங்கு நிறுத்தி விட்டுச் சென்றேன் என்று அவர் கூறியுள்ளார்.

உந்துருளி கடன் அடிப்படையில் (லீசிங்) கொள்வனவு செய்யப்பட்டது என்றும், அதனால் அதன் இலக்கத்தகடு இன்னமும் கிடைக்கவில்லை என்றும் அவர் விசாரணை யின் போது குறிப்பிட்டுள்ளார். அதையடுத்து அவர் பொலிஸாரால் விசாணைக்காக அழைத்துச்செல்லப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

(எ-6)

## மௌலவிக்கு விளக்கமறியல்

பதுளை, மே 7

பதியத்தலாவையில் மௌலவி கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

பதியத்தலாவை ஜும்மா பள்ளிவாசல் மௌலவி மீது, சந்தேகம் ஏற்பட்டதையடுத்து, மௌலவியின் அறையை சோதனையிடும் போது, தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் ஸஹ்ரான் ஹாசிமின் உரையடங்கிய ஒளிப் பதிவு நாடாக்கள், இறுவட்டுக்கள் பல கண்டறியப்பட்டன. அவற்றை மீட்டுள்ளோம். அதனையடுத்து மௌலவி கைது செய்யப்பட்டார் என்று தெகியத்தக்கண்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

மௌலவியை நாளை வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

(து)



## போலி அரச ஆவணங்கள் மீட்பு மட்டக்களப்பில் இருவர் கைது

செங்கலடி, மே 7

மட்டக்களப்பில் 27 அரச திணைக்களங்களின் போலி இறப்பர் முத்திரைகள், பிரின்டர், மடிக்கணினி மற்றும் ஆவணங்களுடன் இரண்டுபேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு ஏறாவூர்ப் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் நடத்திய தேடுதலின் போதே அவர்கள் கைது செய்யப்பட்டனர். தவிர, அங்குள்ள குப்பை மேடுகளில் வீசப்பட்டிருந்த ஒரு தொகுதி கூரிய கத்திகள், வாள்கள் என்பனவும் மீட்கப்பட்டுள்ளன என்று ஏறாவூர்ப் பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி நளின் ஜயசுந்தர தெரிவித்தார்.

தமக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து இந்தத்தேடுதல் நடத்தப்பட்டது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

(து)

## வெள்ளவாயவில் வெடிப்பொருள்கள் மூவர் கைது

பதுளை, மே 7

பதுளை வெள்ளவாயப் பொலிஸ் பிரிவில், சில இடங்களில் நேற்று வெடிப்பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன. மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று வெள்ளவாயப் பொலிஸார் தெரிவித்தனர்.

வெள்ளவாயா முதன்மைப் பாலத்தினடியில் மறைத்துவைக்கப்பட்டிருந்த 17 வெற்றுத் தோட்டாக்கள் மீட்கப்பட்டுள்ளன.

பிபிலை நகர வர்த்தக நிலையமொன்றைச் சோதனையிட்ட இராணுவத்தினரும் பொலிஸாரும் ரி 56 ரகத் துப்பாக்கிக்குப் பயன்படுத்தும் 27 புதிய தோட்டாக்களை மீட்டனர்.

வர்த்தக நிலையத்திலிருந்த இருவர் கைது செய்யப்பட்டனர்.

வீடு ஒன்றைச் சோதனையிட்டபோது தோட்டத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நான்கு வாள்கள் மீட்கப்பட்டன. அந்த வீட்டிலிருந்த 26 வயது சகோதர இனப் பெண் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

(து)

# வன்மம் பிடித்த சக்திகள் சமூகத்தைப் பிரிக்க முயற்சி

## சகவாழ்வுக்கான யாழ். மக்கள் ஒன்றியம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 7

குறுகிய எண்ணம் படைத்த, வன்மம் மிக்க சமய சார் மற்றும் இனத்துவம் சார் தேசியவாத சக்திகள் எமது சமூகங்களைப் பிரிக்கும் முயற்சிகளிலே ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றன. பிரிவுகளை ஏற்படுத்தும் இவ்வாறான சக்திகள் தோற்கடிக்கப்படல் வேண்டும். இந்தச் சக்திகளைத் தோற்கடிப்பதற்கு உண்மையான சமய நம்பிக்கைகளை உடையவர்களும், முற்போக்கான கருத்தியல் நிலைப்பாடுகளை எடுத்திருப்பவர்களும் முன்வருதல் அவசியம் என்று சகவாழ்வுக்கான யாழ்ப்பாண மக்கள் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

நாட்டில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலின் பின்னர் நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள சகவாழ்வு தொடர்பான ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்று கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம் பாதுகாவலன் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது சகவாழ்வுக்கான யாழ்ப்பாண மக்கள் ஒன்றியத்தினர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் உள்ளதாவது;

யாழ்ப்பாணத்தில் வசித்து வரும் பல்வேறு சமய மற்றும் இனக் குழுமங்களைச் சேர்ந்தவர்கள் என்ற வகையில் நாம் உயிர்த்த தினத்தன்று இலங்கையிலே மேற்கொள்ளப்பட்ட பயங்கரமான தாக்குதல்களை மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இந்தத் தாக்குதல்களின் போது உயிரிழந்தவர்களின் குடும்பத்தாருக்கும், காயமடைந்தோருக்கும் இந்தச் சம்பவம் காரணமாக இலங்கை முழுவதிலும் மன வேதனையால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் நாம் எமது இதயபூர்வமான அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

போருக்கு முன்னரும், போரின் போதும், போருக்குப் பின்னரும் மக்கள் ஒருவருடன் ஒருவர் சேர்ந்து வாழும் ஒரு நீண்ட வரலாறானது எம் மத்தியிலே உள்ளது. பத்து வருடங்களுக்கு முன்னர் போர் முடிவுக்கு வந்ததில் இருந்து சமூகங்களின் மத்தியிலே நிலவும் உறவுகளே மேலும் பலப்படுத்துவதற்கு சாதாரண மக்கள் தமது உறுதிப்பாட்டை வெளிப்படுத்தி நிற்கின்றார்கள்.

மக்களைப் பாதுகாக்குமாறு அரசையும், மக்களின் பாதுகாப்புக்கு முதன்மை நிலைகொடுக்கும் படியாக எல்லா அரசியல் தரப்பினரையும் நாம் கேட்டுக்கொள்கிறோம்.

ஜனநாயக விழுமியங்கள் பேணப்படவேண்டும் எனக் கோரும் நாம் கொடூரமான அடக்கு முறைகளை உருவாக்கும் நடவடிக்கைகளை மக்கள் மீது திணிப்பதற்கும், பொரும்பான்மை வாதக் கொள்கைகளை அறிமுகப்படுத்துவதற்கும் சமூகத்தை மேலும் இராணுவமயப்படுத்துவதற்கும் தற்போது நிலவும் அச்சமூட்டும் சூழலைப் பயன்படுத்த வேண்டாம் எனவும் வலியுறுத்துகின்றோம்.

பொறுப்புணர்வுடன் செயற்படும்படியும், ஆத்திரமூட்டக்கூடிய கோசங்களையும், வதந்திகளையும் பரப்புவதைத்தவிர்க்கும் படியும், சமூகங்களுக்கு இடையிலே நம்பிக்கையைக் கட்டியெழுப்பப்படுவதற்கான முயற்சி களுக்குப் பங்களிக்கும்படியும் தேசிய மற்றும் பன்னாட்டு ஊடகங்களை நாம் கோருகின்றோம் உள்ளூர் மற்றும் வெளிநாட்டுச் சக்திகளின் தூண்டுதலுக்கு உட்பட்டு இனவாதத்தையும், தீவிரத்தன்மையையும் முன்னெடுக்கும் சக்திகளின் எழுச்சி குறித்து நாம் மிகவும் ஆழமான, கரிசனை உடையவர்களாக இருக்கிறோம் உயிர்த்த ஞாயிறுத்தினத்தன்று இடம்பெற்ற இந்த துன்பியல் நிகழ்வானது, இந்த நாட்டின் மக்கள் கூடிவாழ்தல், அமைதி மற்றும் நீதி என்பனவற்றை உருவாக்குவதற்கு தமது பற்றுறுதியை மீள்வலியுறுத்தக்கோரும் ஒரு விழிப்புணர்வைத் தூண்டியிருக்கும் ஒரு சம்பவமாகக் கூட அமைகின்றது.

யாழ்ப்பாணத்திலும் நாட்டின் ஏனைய பாகங்களிலும் முஸ்லிம் சமூகத்தின் மீது பதிலடித்தாக்குதல்கள் நடைபெறக்கூடும் என்ற அச்ச உணர்வுகளை எம்மால் அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது வன்முறையின் எல்லாவடிவங்களையும், வெறுப்பைத் தூண்டும் பேச்சுக்களையும் கடுமையாக எதிர்க்கும்படியும், பரஸ்பரமரியாதையும், மதிப்பும் உத்தரவாதப்படுத்தப்படும் வகையிலே சமூகங்களுக்கு இடையிலான நாளாந்த உறவுகளை வலிமையூட்டுமாறும், எல்லாச்சமூகங்களுக்கும், அவற்றின் தலைவர்களுக்கும் நாம் அழைப்புவிடுக்கிறோம் - என்றுள்ளது. (ஐ-21)

### தென்மராட்சியில் மூன்று வேலைகளுக்கு நிதி ஒதுக்கீடு

கொடிகாமம், மே 7

துரித கிராமிய அபிவிருத்தி திட்ட நிதியிலிருந்து தென்மராட்சிப் பகுதியில் 3 வேலைத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதற்கான நிதியை நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா ஒதுக்கியுள்ளார்.

மிருசுவில் வடக்கு வன்னியர் சனசமூக நிலையத்துக்கு 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், பெரிய நாவலடி விநாயகர் சனசமூக நிலையத்துக்கு 50 ஆயிரம் ரூபாவும், மீசாலை சீமா விளையாட்டு கழகத்துக்கு 50 ஆயிரம் ரூபாவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று சாவகச்சேரிப் பிரதேச சபை உறுப்பினர் வை. ஜெகதாஸ் தெரிவித்தார். (ஐ-159)





### உயிர்நீத்த மக்களுக்கான பிரார்த்தனை நிகழ்வு

யாழ்ப்பாணம்,மே 7

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று உயிர்நீத்த மக்களுக்கான பிரார்த்தனை நிகழ்வு உரும்பிராய் சென் மிக்கேல் தேவாலயத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

பங்குத் தந்தை ம.பத்திநாதர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அங்கிலிக்கன் திருச்சபை போதகர் ஜோன் அற்புதமணி, மௌலவி ஏ.எம். றலீம், அமெரிக்கன் சிலோன் மிசன் போதகர் யூட் சுதர்சன், பெனியியல் சபை போதகர் சொலமோன் டிக்சன் மற்றும் போதகர் அன்ரனி ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-422)



### சிறீ சபாரத்தினத்தின் 33ஆவது நினைவு நிகழ்வு

யாழ்ப்பாணம்,மே 7

தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் சிறிசபாரத்தினத்தின் 33ஆவது நினைவேந்தல் நிகழ்வு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இவர் 1986ஆம் ஆண்டு மே மாதம் நாள் யாழ். கோண்டாவில் அன்னங்கைப் பகுதியில் உள்ள தோட்டவெளியில் வைத்து சுட்டுப்படுகொலை செய்யப்பட்டார்.

இந்த இடத்திலேயே நினைவேந்தல் நிகழ்வு சிறீதமிழீழ விடுதலை இயக்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்டு இடம்பெற்றது.

நிகழ்வில் சிறீரெலோ கட்சியின் செயலர் ப.உதயராசா, வடக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சி தலைவர் தவராசா, வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபைத் தவிசாளர், உறுப்பினர்கள், தமிழீழ விடுதலை இயக்கத்தின் மூத்த போராளிகள், சிறிரெலோ இளைஞரணியின் தலைவர் ப.கார்த்தீபன், உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-110,37)

## மாணவர்களின் பாதுகாப்பு விடயத்தில் அனைவரும் கவனம் செலுத்த வேண்டும்

### அச்சுவேலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவிப்பு

அச்சுவேலி, மே 7

பாடசாலை மாணவர்களின் பாதுகாப்பு விடயத்தில் பாடசாலை நிர்வாகமும் பெற்றோரும் கூடிய கவனம் செலுத்த வேண்டும். மாணவர்களுக்கு நிலமை தெளிவுபடுத்தி ஒவ்வொரு மாணவர்களும் தங்களது சுய பாதுகாப்பை சகமாணவர்களின் பாதுகாப்பையும் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு அச்சுவேலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆர்எம்.பி.இரத்நாயக்கா தெரிவித்தார்.

புத்தூர் சிறிசோமஸ்கந்தாக் கல்லூரி மற்றும் புத்தூர் சிறி சோமஸ்கந்தா இந்து ஆரம்பப் பாடசாலை மாணவர்களின் பாதுகாப்புத் தொடர்பான கலந்துரையாடல் புத்தூர் சோமஸ்கந்த கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கல்லூரி அதிபர் சி.இளங்கோ தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தொடர்ந்து உரையாற்றும் போது,

"பாடசாலை மாணவர்களின் பாதுகாப்பு விடயத்தில் பொலிஸார் பொருத்தமான முறையில் ஒத்துழைப்பு வழங்குவார்கள். ஆனால் பெற்றோர் பாடசாலை நிர்வாகத்துடன் நெருக்கமான உறவைப் பேணி பிள்ளைகளின் பாதுகாப்பு விடயத்தில் முழுமையான ஒத்துழைப்பை வழங்கவேண்டும். பொலிஸாரும் ஒத்துழைப்பு வழங்குவார்கள்.

கடந்த 21ஆம் திகதியும் அதன் பின்னரும் நடைபெற்ற சம்பவங்களை முஸ்லிம்கள் செய்தார்கள் என்பதற்காக முஸ்லிம்கள் எல்லோரும் இந்தச் சம்பவத்துடன் தொடர்புபட்டுள்ளார்கள் எனத் தப்பாக நினைத்துக் கொள்ளக் கூடாது. முஸ்லிம்களை எதிரானவர்கள் எனக் கொள்ளக் கூடாது ஒரு குழுவினர் வன்செயல்களில் ஈடுபட்டுள்ளனர். அது முற்றாக ஒழிக்கப்படும். பாதுகாப்புமீண்டும் உறுதி செய்யப்படும்.

மாணவர்கள் பயப்பீதியுடன் கல்வியைத் தொடர முடியாது மாணவர் மத்தியில் சுயநம்பிக்கை, சமாதானம், நல்லுறவு வளர்க்கப்பட வேண்டும். பாடசாலை பாதுகாப்பு விடயத்தில் பெற்றோர் பாடசாலை நிர்வா கத்துடன் பொருத்தமான முறையில் நெருக்கமாக ஒத்துழைப்பு வழங்கி பிள்ளைகளின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்" எனத் தெரிவித்தார். (ஐ-11)

## விரைவில் புதிய கட்டடத்தில் சாவகச்சேரி கால்நடை அலுவலகம்

சாவகச்சேரி மே. 7

சாவகச்சேரி கால்நடை மருத்துவர் அலுவலகம் விரைவில் நிரந்தர கட்டடத்தினுள் இயங்கவுள்ளது. சாவகச்சேரியில் கால்நடை மருத்துவர் அலுவலகத்துக்கு நிரந்தர கட்டட வசதி இல்லாத காரணத்தால் வாடகையில் நீண்ட காலமாக இயங்கி வந்துள்ளது.

இறுதியாக சாவகச்சேரி பிரதேச செயலகத்துக்குச் சொந்தமான கட்டடத்தில்கடந்த 2003 ஆம் அண்டு தொடக்கம் இயங்கிவந்தது. பிரதேச செயலகை விரி வாக்கத்துக்கு கட்டடத் தேவை ஏற்பட்டதால் கால்நடை மருத்துவர் அலுவலகம் இடம்மாற்றவேண்டிய நிலை ஏற்பட்டது.

இந்த நிலையில் கால்நடை மருத்துவர் அலுவலகத்துக்கான நிரந்தர கட்டடம் பிரதேச செயலரின் முயற்சியால் அரச



காணியில் அதனுடன் சாவகச்சேரி நகரசபைக்குச் சொந்தமான காணியுடன் இணைந்து அமைக்கப்பட்டு வேலைகள் பூர்த்தியடையும் நிலையில் உள்ளது. இந்தக் கட்டடத்தில் விரைவில் கால்நடை மருத்துவர் பணியகம் இயங்கவுள்ளதெனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

# படையினர் கஞ்சா மீட்பதை ஒளிப்படம் எடுத்தவர் கைது

### 9 மணி நேர தடுத்து வைப்பின் பின்னர் பொலிஸார் ஊடாக விடுவிப்பு

யாழ்ப்பாணம், மே 7

சோதனை நடவடிக்கையின்போது படையினர் மற்றும் பொலிஸார் கஞ்சா மீட்பதைத் தனது அலைபேசியில் ஒளிப்படம் எடுத்தார் என்ற குற்றச்சாட்டில் சமூக அமைப்பின் தலைவர் கைது செய்யப்பட்டு 9 மணி நேரம் தடுத்து வைக்கப்பட்டார். ஊடகவியலாளர்களுக்கு வழங்குவதற்காகவே தான் ஒளிப்படம் எடுத்தார் என்று தெரிவித்தபோதும் அவரைக் கைது செய்த படையினர் விசாரணையின் பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். பொலிஸார் அவரை விடுவித்தனர்.

வடமராட்சி கிழக்கு சுண்டிக்குளம் பூனைதொடு வாய் கடற்கரையில் நேற்றுமுன்தினம் இனந்தெரியாத நபர்கள் சிலர் படகில் வந்து கரை இறங்கிச் செல்வதனை அவதானித்த அந்தப் பகுதி மீனவர்கள் பிரதேச செயலருக்கு அறிவித்தனர்.

பிரதேச செயலர் இராணுவத்தினர், கடற்படையினர் மற்றும் பொலிஸாருக்கு அறிவித்தார்.

அறிவிப்பை அடுத்து அந்தப் பகுதிக்கு விரைந்த படையினர் தேடுதல் நடத்தினர். அந்தப் பகுதி மக்களும் அவர்களுடன் இணைந்து தேடுதல் நடத்தினர்.

அதன் போது கடற்கரையில் இருந்து சற்று தொலைவில் இருந்த காட்டு பகுதிக்குள் நான்கு பொதிகளில் பொதியிடப்பட்ட நிலையில் ஒரு தொகை கேரளக் கஞ்சா மீட்கப்பட்டது.

அவ்வாறு பொதியைச் சோதனை செய்வதையும் அதற்குள்ளிருந்த கஞ்சாவை எடுப்பதையும் அங்கிருந்த சுண்டிக்குளம் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவரும், வடமராட்சி கிழக்கு குடிமக்கள் குழுவின் செயலருமான செ.உதயசிவம் தனது அலைபேசியில் ஒளிப்படம் மற்றும் காணொலிகளைப் பதிவு செய்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

அதனை அவதானித்த இராணுவத்தினர் அவரது அலைபேசியை பறித்தனர். அவரைத் தடுத்து வைத்து விசாரணை செய்தனர். ஊடகவியலாளர்களுக்கு வழங்கவே ஒளிப்படம் மற்றும் காணொலிகளைப் பதிவு செய்ததாகக் அவர் கூறியுள்ளார்.

அதனை ஏற்க மறுத்த இராணுவத்தினர் அவரைக் கைது செய்து கட்டைக்காடு இராணுவ முகாமுக்கு கொண்டு சென்றனர். அங்கு சுமார் 6 மணி நேரம் தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் மாலை 4 மணியளவில் பளைப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

பளை பொலிஸார் இரவு 7 மணி வரையில் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்த பின்னர், கடுமையாக எச்சரித்து விடுவித்தனர். (த-37)

## பதில் பணிப்பாளர் நியமனம் மாகாண அதிகாரத்தைப் பறிக்கிறது

### சி.வி.கே.சிவஞானம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 7

மருத்துவர் சத்தியமூர்த்தியின் நியமனம், இரட்டைப் பொறுப்புக் கூறலுக்கும் கட்டுப்பாட்டுக்கும் வழிவகுப்பதோடு ஏற்கனவே பலவீனமான அதிகாரப் பகிர்வை இன்னும் பலவீனப்படுத்தி, இருக்கின்ற மாகாண சபை அதிகாரத்தையும் பறிக்கின்ற செயல்.

இவ்வாறு வடக்கு மாகாண சபை அவைத் தலைவரும் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர்களின் அமையத்தின் இணைப்பாளருமான சீ.வீ.கே. சிவஞானம் தெரிவித்தார். அவர் அனுப்பிய செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ்ப்பாணப் போதான மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். கொழும்பு சுகாதார அமைச்சு அவரை நியமித்திருக்கிறது.

வடக்கு மாகாண ஆளுநரின் பணிப்பின் பேரில் அவரது செயலர் கொழும்பு சுகாதார அமைச்சின் செயலருக்கு எழுதிய கடந்த 25ஆம் திகதிய கடிதத்தில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஒருவரை மாகாண நிர்வாகத்தின் உடன்பாட்டுடன் பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் விதிகளுக்கு அமைய நிரந்தரமாக நியமிக்குமாறு கோரியுள்ளார் என்று சிவஞானத்தின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

## விளைவேலி மருதடி விநாயகர் பெருந்திருவிழா ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 7

சாவகச்சேரி நுணாவில் மேற்கு விளைவேலி மருதடி அருள்மிகு வீரகத்தி விநாயகர் தேவஸ்தான வருடாந்த பெருந்திருவிழா நாளைமறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 நாள்கள் இடம்பெறவுள்ளது.

இதற்கமைய 15ஆம் திகதி புதன்கிழமை மாலை 4 மணிக்கு வேட்டைத்திருவிழாவும், 16ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 3.30 மணிக்கு புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டமும் அன்று இரவு 7 மணிக்கு சப்பைரதத் திருவிழாவும் 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் 18ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழைமை காலை 10 மணிக்கு பிராயச்சித்த அபிஷேகமும் மாலை 5 மணிக்கு பூங்காவனமும் 20ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு வைரவர் பொங்கலும் இடம்பெறவுள்ளன.

திருவிழாப் பூசைகள் தினமும் காலை 9 மணிக்கு ஆரம்பமாகி நண்பகல் 12.30 மணி வரையும், மாலை 6 மணிக்கு ஆரம்பமாகி இரவு 9.30 மணி வரையும் நடைபெறும். திருவிழா இடம்பெறும் 11 தினங்களும் தினசரி 12.30 மணிக்கு அன்னதானமும் வழங்கப்படும். (ம)

## ஏ.எல் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் சமூகம் தரவும்

யாழ்ப்பாணம்,மே 7

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கல்வி கற்று 2021 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்குரிய விண்ணப்பங்களை பூர்த்தி செய்வதற்காக நாளை பாடசாலைக்கு வருமாறு அதிபர் கேட்டுக்கொண்டுள்ளார். காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் 1 மணிவரை நடைபெறும். மாணவர்கள் பாடசாலை சீருடையுடன் வருகைதரவேண்டும் என்று அதிபர் சதாநிமலன் அறிவித்துள்ளார். (ஐ)

## குருநகர் வீட்டில் குடு மீட்பு சந்தேகத்தில் இருவர் கைது

யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் வீடொன்றை நேற்றுமுன்தினம் சோதனையிட்ட சிறப்பு அதிரடிப்படையினர் அங்கிருந்து 11 பக்கற்றுகள் குடு போதைப் பொருளை மீட்டுள்ளனர்.

அதனை விற்பனை செய்யும் நோக்குடன் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

"குருநகர், கடற்கரை வீதியில் அண்ணா சிலைக்கு அருகில் உள்ள வீடு சிறப்பு அதிரடிப் படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு வீடு முழுவதும் சோதனையிடப்பட்டது.



இதன்போதே அங்கு "குடு" போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது. அந்த வீட்டில் நீண்டகாலமாக போதைப்பொருள் வியாபாரம் இடம்பெறுவதாக கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே சிறப்பு அதிரடிப் படையினர் முற்றுகையிட்டனர்" என்று பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபர்கள் இருவரும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர். (ஐ-37)





## குருநகர் பகுதியில் கூரிய வாள் மீட்பு

யாழ்ப்பாணம், மே 7

யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் உள்ள வீட்டில் இருந்து கூரிய வாள் ஒன்று மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸ் சிறப்பு அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

குறித்த பகுதியில் ஆயுதங்கள் பதுக்கி வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் சிறப்பு அதிரடிப்படையினருக்கு தகவல் கிடைத்தது.

அதனையடுத்து பொலிஸ் சிறப்பு அதிரடிப்படையால் நேற்றுமுன்தினம் இரவு வீடு ஒன்று சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

மோப்ப நாய்கள் சகிதம் வீட்டைச் சல்லடை போட்டு தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். எனினும் வீட்டுக்குள் எந்தவிதமான ஆயுதங்களும் மீட்கப்படவில்லை.

வீட்டுக்கு அருகில் உள்ள கிணறு ஒன்றிலிருந்து கூரிய வாள் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

குறித்தவாள் தொடர்பில் விசாரணைகளை பொலிஸ் சிறப்பு அதிரடிப்படையினர் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-106)

## சட்டவிரோத ஆயுதங்களை ஒப்படைக்க நேரம் நீடிப்பு

கொழும்பு, மே 7

சட்ட விரோதமாக வாள், கத்தி உள்ளிட்டவற்றை பொலிஸாரிடம் ஒப்படைப்பதற்கான காலம் 48 மணித்தியாலங்களால் நீடிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். இவற்றை ஒப்படைப்பதற்கான கால எல்லை நேற்றுமுன்தினம் நள்ளிரவு 12 மணியுடன் நிறைவடைய இருந்தது. இது தொடர்பில் பொலிஸ் தலைமையகம் மேற்கொண்ட தீர்மானத்துக்கு அமைய கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது. கடந்த 21ஆம் திகதி குண்டுத் தாக்குதல்களையடுத்து நாடு முழுவதும் தேடுதல் நடத்தப்பட்டது.

சட்ட விரோத ஆயுதங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. இதன் காரணமாக சட்ட விரோதமான ஆயுதங்களை கொண்டிருப்போர் அருகில் உள்ள பொலிஸ் நிலையங்களில் ஒப்படைக்குமாறு பொலிஸார் பொது மக்களுக்கு அறிவுறுத்தியிருந்தனர். (த)


## ஈஸ்டர் தாக்குதலில் இறந்தோருக்கு சாவகச்சேரி நகரசபையில் அஞ்சலி

கொடிகாமம், மே 7

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்களில் உயிரிழந்த அப்பாவிப் பொதுமக்களுக்கு சாவகச்சேரி நகரசபை அமர்வில் நேற்று மெழுகுதிரி ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

சபை அமர்வு ஆரம்பமானதும் தவிசாளர் சிவமங்கை இராமநாதன் தலைமையில் சபையில் கலந்து கொண்ட நகரசபை செயலர் நகரசபை உறுப்பினர்கள் மற்றும் சபை அலுவலர்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தி ஆத்ம சாந்தி வேண்டி பிரார்த்தித்தனர். (ம-159)









## பலரையும் கவரச் செய்த சிறார்களின் ஆக்கங்கள்

யாழ்ப்பாணம்,மே 7

யாழ்ப்பாணம் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட ஆக்கதிறன் போட்டியில் சிறார்களின் ஆக்கங்கள் பலரையும் கவரச் செய்தன.

அரியாலை மயிலு மீனாட்சி மண்டபத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற குறித்த போட்டியில் பல சிறார்கள் கலந்து கொண்டு தமது ஆக்கங்களைக் காட்சிப்படுத்தி இருந்தனர். (ஐ-37)

## செபஸ்டியார் ஆலயத்துக்கு வடக்கு ஆளுநர் பயணம்

யாழ்ப்பாணம்,மே 7

பயங்கரவாதிகளின்குண்டுத் தாக்குதலுக்கு உள்ளான கட்டுவபிட்டிய புனித செபஸ்டியார் ஆலயத்துக்கு வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் நேற்றுமுன்தினம் பயணம் மேற்கொண்டார்.

பயணம் மேற்கொண்ட ஆளுநர், ஆலய பங்குத்தந்தை ஸ்ரீலால் பொன்சேகாவை சந்தித்து குண்டுத் தாக்குதலில் உயிரிழந்த மற்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தனது சார்பிலும், வடக்கு மாகாண மக்கள் சார்பிலும் அனுதாபங்களை தெரிவித்துக் கொண்டார்.

இதன் பின்னர் சேதமடைந்த ஆலயம் மீள சீரமைக்கப்படுவதையும் பார்வையிட்டார்.

அத்துடன் பாதிப்படைந்த அந்தப் பிரதேசத்தின் சில இல்லங்களுக்கும் பயணம் செய்த ஆளுநர் அவர்களின் சுக துக்கங்களை கேட்டறிந்து கொண்டார். (ஐ-7)





### யாழ்ப்பாண மாவட்டத்தில்

# குரக்கன் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம்,மே 7

யாழ்ப்பாண மாவட்டத்தில் குரக்கன் உற்பத்தியை அதிகரிப்பதற்கு அரச தலைவர் செயலகம் முன் வந்துள்ளதாக மாவட்ட செயலக விவசாயப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

"யாழ்ப்பாண மாவட்டத்தில் குரக்கன் உற்பத்தியை ஊக்குவிப்பதற்கு அரச தலைவர் செயலகம் முன் வந்துள்ளது. சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் முதற் கட்டமாக இந்தப் பயிர்ச் செய்கைக்காக 350 கிலோ கிராம் குரக்கன் வழங்கப்படவுள்ளது.

தலா 3 கிலோ வீதம் பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளது.

குரக்கன் செய்கையில் அந்தப் பகுதி விவசாயிகள் ஆர்வமாக உள்ளதை அடுத்து பிரதேச செயலகம் ஊடாக மாவட்ட விவசாயப் பிரிவுக்கு கோரிக்கை முன்வைக்கப்பட்டதை அடுத்து அரச செயலகம் இதற்கான நிதியை வழங்க முன்வந்துள்ளது.

இதேவேளை, அதிக விளைச்சலைத் தரக்கூடிய மாம்பழ உற்பத்தியை ஊக்குவிப்பதற்காகப் பயனாளிகளுக்கு 500 மாமர கன்றுகள் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)

## தீர்மானங்கள் எடுப்பது மட்டுமின்றி அதனைச் செயற்படுத்தவும் வேண்டும்

### வலி.கிழக்குப் பிரதேச சபையில் கோரிக்கை முன்வைப்பு

யாழ்ப்பாணம், மே 7

பிரதேச சபையில் தீர்மானங்களை மட்டும் நிறைவேற்றினால் போதும் என்ற நிலை ஏற்புடையது அல்ல. தீர்மானங்களை செயற்படுத்தி மக்களுக்கு உரிய சேவைகளை வழங்க வேண்டும். வலி. கிழக்குப் பிரதேச சபையில் இதுவரை நிறை வேற்றப்பட்ட தீர்மானங்களில் பெரும்பாலானவை செயற்படுத்தப்படவில்லை. இது ஏற்றுக் கொள்ள முடியாது.

எனவே சபையில் இதுவரை நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள், நிறைவேற்றப்படாத தீர்மானங்கள் ஆகியவற்றின் விவரம், செயல்முறைப்படுத்தப்படாத தீர்மானங்களின் நிலைப்பாடு தொடர்பான விவரங்கள் மே மாதத்துக்கான கூட்டத்தில் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட வேண்டும். இவ்வாறு சபையின் இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர் இ.மயில்வாகனம் காட்டமாகக் கோரிக்கை விடுத் துள்ளார்.

வலி.கிழக்குப் பிரதேச சபையின் ஏப்ரல் மாதக் கூட்டம் கடந்த வாரம் நடைபெற்றது. மேற்படி கூட்டத்தின் போதே இவர் தவிசாளர் தியாகராஜ நிரோஷிடம் காட்டமான கோரிக்கையை முன்வைத்து உரையாற்றினார். தொடர்ந்து அவர் உரையாற்றுகையில்,

இந்தச் சபை மக்களுக்கான திட்டங்களை, தீர்மானங்களை நிறைவு செய்ய வேண்டும். அதன் மூலம் திருப்தி அடைய வேண்டும். மன நிறைவு பெற வேண்டும். தனியாகத் தீர்மானங்களை நிறைவேற்றினால் மட்டும் போதும் என்ற நிலையில் இருப்பது கவலையளிக்கின்றது.

இதுவரை நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் உண்மை நிலையை அது தொடர்பான சுயமதிப்பீட்டை உறுப்பினர்கள் வெளிப்படையாகக் கண்டு கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு கூட்டத்திலும் நிறைவேற்றப்படும் தீர்மானங்களின் செயற்பாட்டு நிலமை அடுத்த மாதாந்தக் கூட்டத்தில் முன்வைக்க வேண்டும்.

அது தொடர்பான செயற்படு நிலையை உறுப்பினர்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும்.

சபை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து சபையில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. அவை தொடர்பான விவரங்கள் உறுப்பினர்களுக்கு வெளிப்படையாகத் தெரிய வேண்டும் எனக் கூறினார். (ஐ-11)

## குறிப்பிட்ட தொகை நகைகள் திருட்டு

யாழ்ப்பாணம், மே 7

வீடொன்றில் கடந்த புதன் கிழமை குறிப்பிட்ட தொகை நிறையுடைய நகைகள் திருடப்பட்டுள்ளன என்று முறையிடப்பட்டுள்ளதாகச் சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

ஏழாலை தெற்கு மயிலங்காடு வேம்படி அம்மன் ஆலயத்துக்கு அருகாமையிலுள்ள வீட்டில் திருடப்பட்டுள்ளதாக முறையிடப்பட்டுள்ளது.

வீட்டிலிருந்தவர்கள் உறக்கத்திலிருந்த வேளை அலுமாரிக்குள் இருந்த நகைகள் களவாடப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

அந்த வீட்டில் விரைவில் திருமணம் நடைபெறவிருந்தது என்றும் பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது. (த)

## நிர்வாகத் தெரிவு

காரைநகர், மே 7

காரைநகர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவு அண்மையில் இடம்பெற்றது.

இதன்போது தலைவராக கந்தசாமி இராஜச்சந்திரன் மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார். உப தலைவராக முருகேசு பரராஜசிங்கம், நிர்வாக சபை உறுப்பினர்களாக சுந்தரலிங்கம் ரவீந்திரன், கோகுலரஞ்சன் விஜிதா, இரத்தினம் ஜெயராமன், வேலுப்பிள்ளை நடரசா, ஜயன் வேலுப்பிள்ளை ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (ஐ-250)

## மூன்று நாள்களின் பின்னர் மூதாட்டி சடலமாக மீட்பு



ஏழாலை.மே 7

வீட்டில் தனித்து வசித்து வந்த மூதாட்டி மூன்று நாள்களின் பின்னர் நேற்றுமுன்தினம் சடலமாக மீட்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் தெல்லிப்பழை தந்தை செல்வாபுரம் பகுதியில் உள்ள வீட்டில் இடம்பெற்றது.

அதே இடத்தை சேர்ந்த சண்முகம் பாக்கியலக்சுமி.(வயது -75) என்ற மூதாட்டியே சடலமாக மீட்கப்பட்டார்.

ஆலய பூஜை வழிபாடுகளில் கலந்து கொண்ட குறித்த பெண்மணியை இரண்டு நாள்களாக வெளியில் காணவில்லை எனவும். இந்த இரண்டு நாள்களும் இரவில் வீட்டின் மின்விளக்குகள் எரியவில்லை எனவும் வீடுகளின் கதவுகள் பூட்டிக்கிடந்ததாகவும் இது தொடர்பாக சந்தேகம் கொண்டு கடந்த சனிக்கிழமை இரவு 8 மணிக்கு பின்னர் வீட்டின் யன்னல் கதவினை இழுத்து திறந்து பார்த்தபோது குறித்த பெண்மணி கட்டில் அருகில் படுத்திருந்த நிலையில் உயிரிழந்து காணப்பட்டதாக அயலவர்கள் தெரிவித்தளனர்

இது தொடர்பாக தெல்லிப்பழைப் பொலிஸாருக்கு தெரியப்படுத்திய நிலையில் நேற்றுமுன்தினம் காலை அதிக மணம் வீசிய நிலையில் சடலத்தைப் பொலிஸார் மீட்டுள்ளனர். விசாரணைகள் இடம் பெற்று வருகின்றன. (ஐ)

*ஐ.எஸ். அமைப்பின் தாக்குதல்*

## 2009க்கு முன்னர் நடந்திருந்தால் விளைவு வேறாக இருந்திருக்கும்

கிழக்கு மாகாணசபையின் முன்னாள்; பிரதித்தவிசாளர் இந்திரகுமார் பிரசன்னா இப்படித் தெரிவித்தார்



கொழும்பு, மே 77

2009ஆம் ஆண்டுக்கு முன்னைய களநிலையில் இந்தத் தாக்குதல் நடந்திருந்தால், அதன் விளைவுகளை ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பும், அதன் வழிகாட்டிகளும் உணர்ந்திருப்பார்கள் என்று கிழக்கு மாகாணசபையின் முன்னாள்; பிரதித் தவிசாளர் இந்திரகுமார் பிரசன்னா தெரிவித்தார்.

மட்டக்களப்பில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

குண்டு வெடிப்புடனான தொடர்புகள் பற்றிய குற்றச்சாட்டு ஒரு தமிழ் அரசியல்வாதி மீது இருந்திருந்தால் இந்த நேரம் அவர் சிறையில் அடைக்கப்பட்டு விசாரணைகள் நடைபெற்றிருக்கும். இந்த நாட்டின் அரசதலைவர், தலைமை அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர் யாராக இருப்பினும் அவர்கள் இந்த நாட்டை ஆள்வதற்காகவே இருக்கின்றார்களே தவிர மக்களைப் பாதுகாப்பதற்காக இல்லை.

2009ஆம் ஆண்டுக்கு முன்னிருந்த களநிலையில் இந்தத் தாக்குதல் நடந்திருந்தால். அதன் விளைவுகளை ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பும், அதன் வழிகாட்டிகளும் உணர்ந்திருப்பார்கள்.

எமது தலைவர்கள் நல்ல நோக்கமும், தூய சிந்தனைகளுடனும் எங்களை வளர்த்தவர்கள். அதே போல் நாங்களும் எமது மக்களுக்கு நல்ல சிந்தனைகளைத் தான் சொல்லுவோம். கடந்த ஏப்ரல் 21ஆம் திகதி எமது மக்கள் கோரமாகக் கொல்லப்பட்ட நாள் உயிர்ப்பு ஞாயிறு தினத்தன்று ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகள் எமது மக்கள் மீது படுமோசமான மிருகத்தனமான தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

உண்மையில் இந்தப் படுகொலைகளைச் செய்வதற்கு முழுக் காரணமாக இருப்பவர்கள் இந்த நாட்டில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் முகவர்களாக இருக்கும் சில அரசியல் தலைமைகள். இவ்வாறான அரசியல் தலைமைகளை வளர்த்தெடுத்தது இந்த நாட்டில் மாறிமாறி ஆட்சியை நடத்திய அரசுகள். அது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியாகவும் இருக்கலாம், ஐக்கிய தேசியக் கட்சியாகவும் இருக்கலாம்.

இந்த நாட்டில் மூன்று அரசகரும மொழிகள் இருக்கின்றன என்று சொல்லுகின்றார்கள். ஆனால் காத்தான்குடியிலே அவர்களது வரவேற்புப் பலகையில் அரபு மொழியை உட்புகுத்தி இருக்கின்றார்கள். இதனை இந்த நாட்டு அரசும் தட்டிக் கேட்கவில்லை. அரபு நாட்டில் இருந்து பல நிதி வருகின்றது அதனால் பல நன்மைகள் கிடைக்கி ன்றன என்று அவர்கள் பார்க்கின்றார்களே தவிர அந்த நிதி தவறுகள் பலவற்றிற்காகப் பயன்படுத்தப்படுகின்றது என்பதைப் பார்க்கின்றார்கள் இல்லை.

இவற்றையெல்லாம் கவனிக்காத இந்த அரசு எவ்வாறு எங்கள் தமிழ் மக்கள் மீது கரிசனை கொள்ளும். விடுதலைப் புலிகளை இப்போது புகழ்கின்றார்கள். ஆனால் சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய முடியவில்லை. வவுணதீவில் நடந்த சம்பவத்திற்கு முழுக் காரணத்தையும் எமது முன்னாள் போராளிகள் மீதே திணித்தார்கள். அதன் உண்மை தற்போது வெளிவந்துள்ளது. அவரை விடுவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளத் தாமதிக்கின்றார்கள் - என்றார். (ம)

# தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் பயிற்சி முகாம் நுவரெலியாவில்

## *ஸஹ்ரான் உட்பட 36 பேர் அங்கு பயிற்சி*

பொகவந்தலாவ, மே 7

தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் தலைவரான ஸஹ்ரான் உட்பட 36 பேர் பயிற்சி பெற்ற பெற்றனர் என்று கூறப்படும் முகாமொன்றை நேற்று நடத்திய அதிரடிச் சோதனையில் கண்டறிந்துள்ளோம் என்று நுவரெலியாப் பொலிஸார் தெரிவித்தனர்.





நுவரெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிளக்பூல் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றுக்கு மிக அருகிலுள்ள இரண்டு மாடிக் கட்டடமே சுற்றிவளைக்கப்பட்டது.

அம்பாறை சாய்ந்தமருது பிரதேசத்தில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையை அடுத்தே பொலிஸாரும் சிறப்பு அதிரடிப் படையினரும் சுற்றிவளைத்துள்ளனர்.

சஹ்ரான் உட்பட 36 பேர் வரையில் இங்கு பயிற்சி பெற்றுள்ளனர். கடந்த 21 ஆம் திகதிக்கு முன்னராக ஏப்ரல் 17 ஆம் திகதி தாக்குதலுக்கான இறுதி பயிற்சியை இந்தக் கட்டடத்திலே மேற்கொண்டுள்ளதுடன் குறுகிய கால குத்தகை அடிப்படையிலே குறித்த இரண்டு மாடிக் கட்டடத்தைக் குத்கைக்குப் பெற்றுள்ளனர் என்பது ஆரம்பக் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது என்று நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

சுற்றி வளைக்கப்பட்ட இரண்டு மாடிக் கட்டடத்தின் உரிமையாளர் உட்பட பணியாளர் ஒருவரும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

காத்தான்குடி தாளங்குடாவிலும் ஸஹ்ரான் குழுவினுடையது என்று கூறப்படும் சுமார் 15 ஏக்கர் பரப்புடைய நிலத்தைப் பாதுகாப்புத் தரப்பு சுற்றிவ ளைத்தது. அங்கும் பயிற்சிகள் இடம்பெற்றன என்று தெரிவிக்கப்பட்டது. (த)

## ரம்ழான் மாத நோன்பு இன்று ஆரம்பிக்கிறது

கொழும்பு பெரிய பள்ளிவாசல் அறிவிப்பு

கொழும்பு, மே 7

ரமழான் மாத நோன்பு இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்குமாறு இலங்கை வாழ் முஸ்லிம்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு பெரிய பள்ளிவாசலில் இன்று மஹ்ரிப் தொழுகையைத் தொட ர்ந்து நடைபெற்ற ரமழான் தலைப்பிறையைத் தீர்மானிக்கும் மாநாட்டிலேயே இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முஸ்லிம் சமய விவகார அமைச்சு, கொழும்பு பெரிய பள்ளிவாசல், அகில இலங்கை ஜம்மியதுல் உலமா உள்ளிட்ட பிறைக்குழு இந்த முடிவை அறிவித்துள்ளன. (த)

## கொடியேற்றம்

யாழ்ப்பாணம்,மே 7

யாழ்ப்பாணம் கோண்டாவில் ஈழத்து தில்லையம்பதி அருள்மிகு சிறி சிவகாமி அம்பாள் ஆலய பெருந் திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 12 நாள்கள் திருவிழா நடைபெறும். எதிர்வரும் 17 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும் என்று ஆலய பரிபாலனசபையினர் தெரிவித்தனர். (ஐ)

## குருதிக்கொடை

கிளிநொச்சி, மே 7

உலக செஞ்சிலுவை தினத்தை முன்னிட்டு இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் கிளிநொச்சி கிளையால் கிளிநொச்சி பளை வைத்தியசாலையிலும் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் இன்று குருதி வழங்கும் நிகழ்வு நடைபெற உள்ளது. (ம)

## அப்பாவி முஸ்லிம் மக்களை குற்றவாளிகளாகக் காட்டாதீர்

ஊடகங்களுக்குப் பொறுப்புண்டு என்று அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

கொழும்பு, மே 7

சமூகமட்டத்தில் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும் வகையிலும், அப்பாவி முஸ்லிம்களை குற்றமிழைத்தவர்களாகக் காட்ட முற்படும் வகையில் ஊடகங்கள் செய்திகளை வெளியிடக் கூடாது என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

இராணுவத்தினர் மற்றும் பொலிஸாரின் தீவிர தேடுதல் வேட்டை காரணமாக பல பொருள்கள் மீட்கப்பட்டு வருகின்றன. தேடுதல் வேட்டைகளின் போது சில ஊடகங்கள் நேரடியாக அழைத்துச் செல்லப்படுகின்றன எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

முஸ்லிம் சமூகத்தையும் குற்றவாளிகளாகக் காட்டும் வகையில் சில பரப்புரைகள் இடம்பெறுகின்றன. பொறுப்புணர்வுடன் மக்களின் உணர்ச்சிக்கு மதிப்பளித்துச் செயற்பட வேண்டும்.

தீவிரவாதத்தையும், அடிப்படைவாதத்தையும் அடியோடு ஒழிக்க முஸ்லிம் சமூகம் தமது முழுமையான ஒத்துழைப்பை பாதுகாப்புத்துறைக்கு வழங்கும். முஸ்லிம்களின் துளியளவும் ஆதரவில்லாத ஒரு சிறிய தரப்பே பயங்கரவாதத் தாக்குதலை நடத்தியுள்ளது. அதற்காக ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்தையும் குற்றவாளிகளைப் போன்று சித்தரிப்பதை அனுமதிக்க முடியாது.

ஊடகங்களின் இத்தகைய நடவடிக்கைகளால் பிரச்சினைகள் தோற்றுவிக்கப்படும். எனவே ஊடகங்களும், அரசியல்வாதிகளும், பாதுகாப்புத் துறையினரும் இது குறித்து உன்னிப்பாகவும் பொறுப்புணர்வுடனும் செயற்பட வேண்டும் என்றும் அமைச்சர் வேண்டுகோள் விடுத்தார். (த)

## ஒழிந்திருந்த சிறிய குழுவால் சகல முஸ்லிம்களுக்கும் பாதிப்பு

கொழும்பு, மே 7

முஸ்லிம்களுக்குள் ஒழிந்திருந்த சிறிய பயங்கரவாதக் குழுவால் ஒட்டுமொத்த முஸ்லிம்களும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

அலரிமாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டில் முழு முஸ்லிம் சமூகத்தினரையும் குற்றவாளிகளாகப் பார்க்கின்றனர். ஆகவே, அந்தத் தீவிரவாதக் குழுவை அடியோடு அழிக்க வேண்டும். நமது சமூகங்களைப் பிளவுப்படுத்துவதே அந்தத் தீவிரவாதக் குழுக்களின் நோக்கமாக இருந்துள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (த)

## பொறுமையாக இருக்குமாறு மக்களிடம் பேராயர் கோரிக்கை

கொழும்பு, மே 7

இலங்கையர்கள் பொறுமையுடனும் புத்திசாலித்தனத்துட னும் செயற்பட வேண்டும். அமைதியின்மை ஏற்பட இடமளிக்காதீர்கள் என்று பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை கோரியுள்ளார்.

நீர்கொழும்பில் நேற்றுமுன்தினம் மாலை இரு குழுக்களி டையே ஏற்பட்ட அமைதியின்மையை அடுத்து அவர் இவ்வாறு கோரியுள்ளார்.

இந்த நிலையைக் கட்டுப்படுத்துமாறு பொறுப்பானவர்களுக்கு அறிவித்துள்ளேன். சில நாள்களாகப் புத்திசாலித்த னத்துட னும் பொறுமையாகவும் செயற்பட்டதைப் போன்று இனிவரும் காலங்களிலும் செற்பட வேண்டும் என்று கத்தோலிக்கர்கள் மற்றும் இஸ்லாமியர்களிடமும் ஏனைய தரப்பினரிடமும் மிகவும் பணிவுடன் வேண்டுகோள் விடுக்கின்றேன். குறிப்பாக முஸ்லிம் சகோதரர்களுடன் ஒற்றுமையாக செயற்படுமாறும் கோருகின்றேன்.

பொய்த் தகவல்கள், மக்களைத் தூண்டிவிடும் சமூக வலைத்தளங்களுக்கு இடமளிக்க வேண்டாம் என்றும் உங்களிடம் கோருகின்றேன் - என்றார். (த)

# அதிகாரிகளின் அசமந்தப் போக்கால் உதவிகள் மக்களைச் சேர்வதில்லை

## சார்ள்ஸ் எம்.பி. குற்றஞ்சாட்டுகிறார்



முல்லைத்தீவு, மே 7

அரசு ஒருசில திட்டத்தை அறிவித்தாலும் அவற்றை மக்களுக்குக் கொண்டு சேர்ப்பதில் அதிகாரிகளுடைய அசமந்தப்போக்குக் காரணமாக பலதிட்டங்கள் மக்களுக்குக் கிடைக்காமலிருக்கின்றன.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் குற்றஞ்சாட்டினார்.

முல்லைத்தீவில், முன்னாள் போராளிகளையும் போரில் பிள்ளைகளை இழந்து தனியே இருக்கின்ற முதியோர்களையும் சந்தித்த சாள்ஸ் நிர்மலநாதன் மக்களின் குறைகளைக் கேட்டறிந்தார்.

புதுக்குடியிருப்பில் கடந்த வெள்ளிக்கிழமை இந்தச் சந்திப்பு நடைபெற்றது. இதில் நாடாளுமன்ற உறுப்பினருடன் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் து.ரவிகரனும் கலந்துகொண்டார்.

சந்திப்புத் தொடர்பில் சாள்ஸ் நிர்மலநாதன் மேலும் தெரிவித்ததாவது:

போர் முடிந்து பத்து வருடங்கள் ஆகின்றன. போரில் நேரடியாகவும், முற்றுமுழுதாகவும் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தில், அரசு இன்னும் மக்களுடைய வீடு மற்றும் வாழ்வாதார வசதிகளை, இயல்பான வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுக்கக்கூடிய சூழலை இந்த அரசு மக்களுக்குச் செய்யவில்லை.

பல திட்டங்களை அறிவிக்கின்றார்கள், அறிவிக்கின்ற திட்டங்கள் இங்கு மாவட்ட செயலகங்களூடாகவும், பிரதேச செயலகம் ஊடாகவும் மக்களுக்கு சென்று அதைப் பயன்படுத்த முடியாத ஒருசில அதிகாரிகளுடைய நடவடிக்கைகள் தொடர்பாகத்தான் இந்த மக்கள் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர்.

தனியாகவுள்ள பெற்றோருக்கு வீடுகள் கட்ட உதவி வழங்கப்படவில்லை என்று கூறினர். தலைமை அமைச்சரின் செயலரிடம் தொடர்புகொண்டு கதைத்திருந்தேன். முல்லைத்தீவு மாவட்டச் செயலரின் சிபார்சுடன் இவர்களுடைய பெயரை அனுப்புமாறு கூறியிருக்கின்றார்.

அதனடிப்படையில் இவர்களுடைய பெயர்கள் அங்கு வரும்பட்சத்தில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று செயலர் கூறியுள்ளார். அதற்கு நடவடிக்கையில் எடுப்போம் - என்றார். (த-246)



## மாணவிக்கு ஈருருளி

யாழ்ப்பாணம், மே 7

வவுனியா விநாயகர் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவிக்கு ஈருருளி மற்றும் கற்றல் உபகரணங்கள் வழங் கப்பட்டன.

இவற்றை வழங்குவதற்கான 20 ஆயிரம் ரூபாவை ஆஸ்திரேலியாவில் வசிக்கும் நடராசா கலைச்செல்வன் (இயந்திரவியல் பொறியியலாளர்) வழங்கியிருந்தார்.

மக்கள் ஆதரவு மையத்தினர் கல்விக்கு தோள் கொடுப்போம் எனும் செயற்றிட்டத்தின் மூலமாக தொழி லாளர் தினத்தன்று இவற்றை வழங்கினர். (த)

## அரசன் குடியிருப்பு வீதிசீரமைப்பு

கிளிநொச்சி, மே 7

புலோப்பளை அரசன் குடியிருப்பு வீதி சீரமைப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தார் வீதியாகச் சீரமைக்க நிதி உதவி வழங்கியிருந்தார். அதன்படி சீரமைப்பை அவர் ஆரம்பித்து வைத்தார்.

பலஆண்டுகளாகச் சீரமைப்பின்றிக் காணப்பட்ட இந்த வீதி மழை காலங்களில் தண்ணீர் தேங்கி நின்று மக்களின் இயல்பு வாழ்க்கைக்குப் பெரும் இடையூறாகக் காணப்பட்டது.

பிரதேசசபை உறுப்பினர் கி. வீரவாகுதேவரின் வேண்டுகோளுக்கு அமைவாக நாடாளுமன்ற உறுப்பினரின் ஊரெழுச்சித்திட்ட நிதியினூடாக சீரமைப்புச் செய்யப்படுகிறது.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின்தலைவர்சுரேன், வட்டார உறுப்பினர் கி.வீரவாகுதேவர், உட்படப்பலரும் கலந்து கொண்டனர். (த-222)

# மரக்கறி, மீன் வியாபாரம் மன்னாரில் பெரு வீழ்ச்சி

## வியாபாரிகள் கவலை தெரிவிக்கின்றனர்

மன்னார், மே 7

கடந்த 21ஆம் திகதிய குண்டுவெடிப்புச் சம்பவங்களின் பின்னர் மரக்கறி மற்றும் மீன் விற்பனை வீழ்ச்சியடைந்துள்ளது என்றும் அதனால் தமது வருமானம் பாதிக்கப்படுவதாகவும் மன்னார் வியாபாரிகள் நேற்றுமுன்தினம் தெரிவித்தனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பாதுகாப்பு மற்றும் சோதனைக் கெடுபிடிகளால் வியாபாரிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் சம்பந்தமாகக் கேட்ட போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் இறந்த பொதுமக்கள் அனைவருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களின் பின்னர் பாதுகாப்பு மற்றும் சோதனைக் கெடுபிடிகளால் மக்கள் மன்னார் நகருக்கு வருவதற்கு அஞ்சுகின்றனர்.

அவசர தேவை கருதி வந்தாலும் சற்று நேரம்கூட தாமதிக்காமல் சென்றுவிடுகிறார்கள். முன்னர் இந்த நேரம் (முற்பகல்) மீன் மற்றும் மரக்கறிச் சந்தைகளில் கூட்டம் அலைமோதும். மீனுக்கும் கரட்டுக்கும் விலை குறைக்குமாறு பேரம் பேசிக் கொண்டிருப்பார்கள்.

தற்போது போஞ்சியைத் தவிர அனைத்து மரக்கறி வகைகளும் உள்ளன. ஆனால் வியாபாரம் மூன்றில் ஒரு பகுதியேனும் இல்லை. வீணாக பழுதடைந்து குப்பையில் போட வேண்டிய நிலை ஏற்படுகின்றது என்று மரக்கறி வியாபாரிகள் தெரிவித்தனர்.

மீன் வியாபாரிகள் கருத்து தெரிவிக்கும் போது,

விலையில் எதுவித மாற்றமும் செய்யவில்லை. குண்டுவெடிப்புச்சம்பவத்தின்பின் மக்கள் மன்னார் நகருக்குள் வருவதற்கு அஞ்சுகிறார்கள். படையினரின் பாது காப்புக் கெடுபிடி மிக அதிகமாகவுள்ளது. தற்போதைய அவசரமான சூழலில் மக்களின் நன்மைகருதி பாதுகாப்பைப் புறந்தள்ளவும் முடியாது என்று தெரிவித்தனர். (த-213)



## 28 குடும்பங்களுக்கு 470 கிலோ அரிசி

### ரவிகரன் வழங்கினார்

முல்லைத்தீவு, மே 7

'வாழ்வோம் வளம்பெறுவோம்' செயற்றிட்டத்தின் 24ஆம் கட்டம் முல்லைத்தீவு ஒலுமடுக்கிராமத்திலும், ரவிகரனின் மக்கள் தொடர்பகத்திலும் இடம்பெற்றது.

28 குடும்பங்க ளுக்கு 470கிலோ அரிசி நேற்று முன் தினம் வழங்கப்பட்டது.

புலம்பெயர் அன்பர்களின் பங்களிப்பில் முன்னெடுக்கப்படும் இந்தச் செயற்றிட்டத்தின், இருபத்தி நான்காம் கட்டத்தில் தாயகத்தைச்சேர்ந்த இருபத்தெட்டு குடும்பங்கள் உள்ளீர்க்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

குறுங்கால வாழ்வுடமை ஊக்குவிப்பை நோக்காகக்கொண்டு நாளாந்த உணவுத்தேவைக்கு இடர்படும் குடும்பங்களுக்கான ஒத்துழைப்பாக "வாழ்வோம் வளம்பெறுவோம்" என்னும் செயற்றிட்டம் செயற்படுத்தப்படுகிறது.

புலம்பெயர்ந்து வாழும் அன்பரின் பணப்பங்களிப்பில் இது வரையில் 798 குடும்பங்கள் உள்ளீர்க்கப்பட்டுள்ளன என்று முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்தார்.

இந்த முறைக்கான உதவியை பிரிட்டனில் வசிக்கும் உறவுகளான சுதாகரன் சுபேந்தினி குடும்பத்தினர் தமது புதல்வியான சுதாகரன் மிதுசா அவர்களின் 2ஆவது பிறந்த நாளை முன்னிட்டு வழங்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-222)

# மரத்துடன் டிப்பர் மோதி வீதியில் புரண்டு வீழ்ந்தது

## 5 பேர் காயமடைந்தனர்



யாழ்ப்பாணம், மே 7

கிளிநொச்சி நகரில் கடந்த சனிக்கிழமை நள்ளிரவு 1.30 அளவில் பெரும் விபத்து இடம்பெற்றுள்ளது.

குறித்த விபத்தில் ஒருவர் படுகாயமடைந்தார், மேலும் மூவர் சிறு காயமடைந்தனர். அவர்கள் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஏ-9 வீதியில் கிளிநொச்சி நீதிமன்றை அண்மித்து மரத்துடன் மோதி டிப்பர் புரண்டுவீழ்ந்தது.

விபத்து பெருமளவில் இடம்பெற்றுள்ளபோதிலும், தெய்வாதீனமாக உயிரிழப்பு ஏற்படவில்லை. பளையிலிருந்து முறிகண்டி திசை நோக்கிப் பயணித்த டிப்பர் வேகக் கட்டுப்பாட்டை இழந்து மரத்துடன் மோதியிருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதுதவிர, வாகனம் மோதியதாகக் கூறப்படும் மரம் போக்குவரத்துக்கு அச்சுறுத்தலாக உள்ளதாகவும் சிலர் கூறுகின்றனர். அதனை அகற்றவேண்டும் என்றும் கோரிக்கை முன் வைக்கப்படுகிறது. (த-21)

# நினைவேந்தலில் ஒன்றுபடுவோம்

## ஈரோஸ் அழைக்கிறது

வவுனியா, மே 7

கடந்த 21ஆம் திகதி இலங்கையில் இடம்பெற்ற தாக்குதலில் பலியானோருக்கான நினைவேந்தலில் அரசியல் வேறுபாடின்றி ஒன்றுபடுமாறு ஈழப்புரட்சி அமைப்பு (ஈரோஸ்) அழைப்பு விடுக்கிறது.

அந்த அமைப்பு அனுப்பிவைத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஈழப்புரட்சி அமைப்பு அனைத்து விடுதலை அமைப்புக்கள் மற்றும் அரசியல்கட்சிகளின் தலைவர்களுடனான கலந்துரையாடல் ஒன்றை அண்மையில் நடத்தியிருந்தது.

அண்மையில் குண்டுத் தாக்குதல்களில் கொல்லப்பட்ட பொது மக்களை நினைவு கூர்ந்தும், பன்னாட்டுப் பயங்காரவாதத் தாக்குதலைக் கண்டித்தும் அரசியல் கட்சி வேறுபாடுகளை கடந்து அஞ்சலி நிகழ்வொன்றை நடத்துவதற்கும், மக்களுக்கெதிரான பயங்கரவாத நடவடிக்கைகளில் ஒருமித்த ஐக்கியத்தை வெளிப்படுத்துவதனை நோக்காக கொண்டு கலந்துரையாடல் இடம்பெற்றது.

ஈரோஸ்அமைப்பின் தலைவர் துஸ்யந்தனின் தலைமையில், நாடாளுமன்ற உறுப்பினர்களான த. சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான வினோநோகராதலிங்கம், சுரேஸ் பிரமேச்சந்திரன், முன்னாள் முதலமைச்சர் சி.வி விக்னேஸ்வரன், முன்னாள் வடக்கு கிழக்கு மாகாண முதலமைச்சர் வரதராஜப்பெருமாள், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் பேச்சாளர் க.துளசி ஆகியோரை சந்தித்து இந்த விடயம் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது. (த-110)

# கிராம எழுச்சி வேலைகளின் மீளாய்வுக் கூட்டம் நடந்தது



கிளிநொச்சி, மே 7

கிராம எழுச்சி அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் கீழ் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவின் முன்னேற்ற மீளாய்வுக் கலந்துரையாடல் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தலைமையில் கண்டாவளை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

கிராமிய வீதிகள், ஆலயங்கள், பாடசாலைகள், மைதானங்கள் போன்றவற்றை அபிவிருத்தி செய்வதற்கான அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வு தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இங்கு 30 அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டு அபிவிருத்திகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

மேற்படி அபிவிருத்திக் கலந்துரையாடலில் கண்டாவளை பிரதேச செயலர் பிருந்தாகரன், கரைச்சி பிரதேச சபைத் தவிசாளர் அ.வேழமாலிகிதன், உபதவிசாளர் தவபாலன் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் கிராம அலுவலர்கள், அபிவிருத்தி அலுவலர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வட்டார அமைப்பாளர்கள் மற்றும் அபிவிருத்தி வேலைத்திட்ட ஒப்பந்தகாரர்கள், பயனடைவோர் எனப்பலரும் கலந்துகொண்டனர். (த-6)



# கிளாலி வீதியை சீரமைக்க அடிக்கல்

கிளிநொச்சி, மே 7

கிளிநொச்சி கிளாலிப் பகுதியில் 4.5 கிலோமீட்டர் நீளமான வீதி சீரமைக்கப்படவுள்ளது. அதற்கு அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

மீள்குடியேற்றம், மறுவாழ்வு, வீதி அபிவிருத்தி அமைச்சின் 80மில்லியன் நிதி பங்களிப்பில் குறித்த வீதிசீரமைக்கப்படவுள்ளது.

நிகழ்வில் உரையாற்றிய நாடளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன்,

வடக்கு அபிவிருத்தியின் கீழ் பல்வேறு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. அதற்காக அமைச்சின் செயலர் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறார். அரசியல்வாதிகள் ஒவ்வொருவரும் தாம் தான் தொண்டர் ஆசிரியர் நியமனத்துக்கு உழைத்ததாக கூறலாம். உண்மையில் வடக்கில் தொண்டர் ஆசிரியர் நியமனத்துக்காக சிவஞானசோதியின் அவர்களின் பங்களிப்பு அதிகம் காணப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

நிகழ்வில் உரையாற்றிய அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி,

வடக்கில் பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

4ஆயிரத்து 500 க்கும் மேற்பட்ட வீடுகள் கட்டிநிறைவடையும் தருவாயில் உள்ளன. மேலும் 5ஆயிரம் வீடுகள்வரை மக்களுக்கு வழங்கப்படவுள்ளன. இது தவிர்ந்து புதிய குளங்கள் அமைக்கும் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன - என்றார்.

இதனை தொடர்ந்துகிளாலி கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்கத்தினருக்கு வாகனம் ஒன்று கையளிக்கப்பட்டதுடன், மீன்பிடி வள்ளங்களும் கையளிக்கப்பட்டன.

இதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் வடக்கு அபிவிருத்தி அமைச்சின் செயலர் சிவஞானசோதி, யாழ்ப்பாண மாவட்டச்செயலர் நா.வேதநாயகன், கிளிநாச்சி மாவட்ட மேலதிக செயலர் சத்தியசீலன், பச்சிலைப் பள்ளிப் பிரதேச செயலர் பரமோதயன் ஜெயராணி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (த-6)

## வீடுகள், கட்டடங்களை

# வாடகைக்கு வழங்குவோர் கிராம அலுவலரிடம் பதியவும்

வவுனியா, மே 7

வவுனியாவில் வாடகைக்கு வீடுகளை வழங்குவோர் அங்கு தங்கியிருப்பவர்களின் விவரங்களை தத்தமது பிரிவு கிராம அலுவலர்களுக்குத் தெரிவித்துப் பதிவு செய்திருத்தல் வேண்டும். அவ்வாறே அங்கு தங்கியிருப்போரும் தங்கியிருக்கும் பிரிவுக்குரிய கிராம அலுவலரிடம் சென்று பதிவு செய்திருத்தல் வேண்டும் என்று பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

வவுனியாவில் கல்வி நோக்கில் அல்லது தொழில் நோக்கில் அல்லது வேறு தேவைகள் கருதி வருவோர் வவுனியாவில் தங்கியிருக்க வேண்டிவரின் அவர்கள் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

சிலருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட வீடுகள் இருந்தால் அவற்றை வாடகைக்கு விடுவர். அவர்களும் கட்டாயம் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

நாட்டில் அவரசகாலச்சட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. பொலிஸாருக்கும் இராணுவத்தினருக்கும் கடமைகள் வழங்கப்பட்டுள்ளன. எங்கும் சென்று சோதனை நடவடிக்கை மேற்கொள்வதற்கு அவர்களுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. ஒரு நபரைக் கைது செய்வதற்கு அவர்களுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

உங்களது கிராமத்துக்கு வரும்நபர்கள் தொடர்பாக நீங்கள் விழிப்புடன் இருக்கவேண்டும்.

கிராமத்தில் வசிப்பவர்களுக்கு அங்குள்ளவர்களை நன்கு தெரியும். புதியவர்களின் நடமாட்டம் இருந்தால் உடனடியாக பொலிஸாருக்கு தகவல் வழங்க வேண்டும். (த-110)

# சுகாதாரக் கேடாக இயங்கிய உணவகத்துக்குத் தண்டம்

## ரூ. 25 ஆயிரம் செலுத்த யாழ். நீதிமன்று உத்தரவு

சுகாதாரச் சீர்கேடுகளுடன் இயங்கிய உணவகத்தின் உரிமையாளருக்கு 20 ஆயிரம் ரூபா தண்டம் விதித்த யாழ்ப்பாண நீதிவான் மன்று, சுகாதாரப் பரிசோதகரின் அறிக்கை நீதிமன்றுக்குச் சமர்ப்பிக்கப்படும்வரை உணவகத்தை மூடுமாறும் உத்தரவிட்டது.

யாழ்ப்பாண மாநகர சுகாதாரப் பரிசோதகர் அ.சுரேஸ்குமார் குருநகர் பகுதியில் சோதனையில் ஈடுபட்டபோது, சந்தைப் பகுதிக்கு அருகாமையிலுள்ள உணவகம் சுகாதார விதிமுறைகளைக் கடைப்பிடிக்காமல் இயங்கி வந்தமை தெரியவந்தது. உணவக உரிமையாளருக்கு எதிராக நான்கு குற்றச்சாட்டுக்கள் சுமத்தி நீதி மன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, உணவக உரிமையாளர் குற்றத்தை ஏற்றுக் கொண்டார். ஒருகுற்றச்சாட்டுக்கு 5 ஆயிரம் ரூபா வீதம் 20ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. சுகாதாரப் பரிசோதகரின் அறிக்கை நீதிமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்படும் வரை உணவகத்தை மூடுமாறும் உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, அதே பகுதியில் திகதி கலாவதியான பொருள்களை வைத்திருந்த வர்த்தகருக்கெதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் கடை உரிமையாளர் குற்றத்தை ஏற்றுக் கொண்டார். அவருக்குநீதிமன்று 5 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது. (த-115)



# குருதிக்கொடை நிகழ்வு

வவுனியா,மே 7

சிறீ சபாரத்தினத்தின் நினைவு தினத்தை முன்னிட்டு வவுனியாவில் குருதிக்கொடை நிகழ்வு இடம்பெற்றது

தமிழிழ விடுதலை இயக்கத்தின் தலைவர் சிறீ சபாரத்தினத்தின் 33ஆவது நினைவுதினத்தினை முன்னிட்டு சிறீ தமிழீழ விடுதலை இயக்கத்தின் வவுனியா மாவட்ட இளைஞர் அணியால் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

வவுனியா குருதிக்கொடை வங்கியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் இருபதுக்கு மேற்பட்ட சிறீரெலோ இளைஞர் அணி உறுப்பினர்கள் கலந்து கொண்டு குருதித் தானம் செய்தனர். (ஐ-110)

# நகர சபையாக உயர்த்த முன்னர் எல்லைகளை சீர்செய்ய வேண்டும்

## வலி.தென்மேற்குப் பிரதேச சபை உறுப்பினர் மகேந்திரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 7

வலி.தென்மேற்குப் பிரதேசம் 28 கிராம அலுவலர் பிரிவைக் கொண்டது. இங்கு பிரதேச ரீதியான எல்லை வரம்புகள் பல ஆண்டுகளாக ஒழுங்குமுறைப்படுத்தப்படாத நிலை காணப்படுகின்றது. எனவே பிரதேச சபைகளை நகர சபைகளாக தரம் உயர்த்தவது குறித்து ஆலோசிக்க முன் எல்லை வரம்புகளை முறைப்படுத்த வேண்டும்

இவ்வாறு வலி.தென்மேற்குப்பிரதேச சபை உறுப்பினர் சி.மகேந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

வலி.தென்மேற்குப் பிரதேச செயலக எல்லை என்பது வலி.தென்மேற்குப் பிரதேச சபைக்கும் உரித்தானது. ஆனால் வலி.தென்மேற்கு எல்லைக்குமாக வலி.மேற்கு பிரதேச செயலக எல்லை ஊடறுத்து நிற்கின்றது.

அதேபோல வலி.தென்மேற்கின் பிரான்பற்று, சில்லாலை, சாந்தை போன்ற பிரதேசங்கள் சபையின் சங்கானை உபஅலுவலக ஆதனத்தில் பதியப்பட்டுள்ளன.

இவ்வாறான வலி.தென்மேற்கு எல்லைகளும் ஆதனங்களும் ஒழுங்குமுறையற்று வலி.மேற்கு (சங்கானை) பிரதேச செயலர் பிரிவில் உள்ளடங்குவதால் மக்கள் தாம் எந்த எல்லையில் உள்ளனர் என்பது இன்னும் புரியாத அளவில் உள்ளது.

4 வருடங்களுக்கு முன்னர் பிரதேச செயலக ரீதியாக இடம்பெற்ற எல்லைப்பிரிப்பு தொடர்பாகவும் எமது வலி.தென்மேற்குப் பிரதேச செயலக எல்லைப்பிரிப்பு தொடர்பாகவும் தேர்தல் ஆணையாளருக்கும் வலி.தென்மேற்குப் பிரதேச செயலாளருக்கும் எல்லை வரம்புக் குழுவுக்கும், கட்சி தலைமை காரியாலயங்களுக்கும், யாழ்ப்பாண மாவட்டச் செயலருக்கும் விரிவான விளக்கப்ப டத்துடன் கடிதங்களை வரைந்துள்ளேன்.

ஆனால் யாழ்ப்பாண செயலகத்தில் ஆராயப்பட்ட போது எல்லை வரம்பு முழுமை பெறவில்லை.

வலி.மேற்கின் பிரதேச சபை, பிரதேச செயலகம் என்பவற்றுடன் வலி.தென்மேற்கின் பிரதேச சபை, பிரதேச செயலகம் ஆகிய நான்கு அரச நிறுவனங்களும் ஒருங்கிணைந்த அடிப்படையில் ஒரு மேசையில் வரைபட ரீதியாக மக்கள் பங்கேற்புடன் ஆராய்ந்தால் இந்தப் பிரச்சினைக்கு ஓரிரு நாள்களில் முறையாகத் தீர்வு காணலாம் - என்றார். (ஐ-50)

# கட்டுக்கரை குளத்தின்கீழ் 1695 ஏக்கரில் சிறுபோகம்

தலைமன்னார், மே 7

மன்னார் மாவட்டத்தில் தற்பொழுது மன்னாரின் முதன்மைக் க்ளமான கட்டுக்கரைக் குளத்தில் 8 அடி 3 அங்குலம் தண்ணீர் இருப்பதால் கட்டுக்கரைக் குளத்தின் கீழ் ஆயிரத்து 695 ஏக்கரில் சிறுபோகம் மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. கட்டுக்கரைக் குளத்தின் கீழ் சிறுபோக பயிர்ச் செய்கை பற்றிய கூட்டம் கடந்த வெள்ளிக் கிழமை மன்னார் மாவட்டச்செயலர் சீ.மோகன்ராஸ் தலைமையில் செலகத்தில் நடைபெற்றது. அதில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

முருங்கன் பிரதேச நீர்ப்பாசனப் பொறியியலாளர் தெரிவிக்கையில், கட்டுக்கரைக் குளத்தில் 8 அடி 3 அங்குலத்துக்குத் தண்ணீர் காணப்படுகிறது. ஆயிரத்து 695 ஏக்கரில் சிறுபோகம் செய்ய முடியும்.

இதற்கமைய பின்வரும் புலவுகள் பிரதேச நீர்ப்பாசனப் பொறியியலாளரால் சிபார்சு செய்யப்பட்டுள்ளன. அதாவது சின்ன உடைப்பு முதன்மை வாய்க்காலின் கீழ் 715 ஏக்கரிலும், பெரிய உடைப்பு முதன்மை வாய்க்காலின் கீழ் 538 ஏக்கரிலும், அடைக்கலமோட்டை முதன்மை வாய்க்காலின் கீழ் 439 ஏக்கரிலும் சிறுபோக நெற்செய்கை செய்ய முடியும். விதை நெல் இரண்டு மாதம் முதல் மூன்றரை மாத நெல் இனம் காணப்படுவதால் விவசாயிகள் விரும்பிய இன நெல்லை தெரிவு செய்து செய்கையை மேற்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

சிறுபோக நெற்செய்கைக்கான முதல் தண்ணீர் விநியோகத் திகதி எதிர்வரும் 25 ஆம் திகதி எனவும், விதைப்பு இறுதித் திகதியும், காப்புறுதி செய்யப்பட வேண்டிய இறுதி திகதியும் எதிர்வரும் ஜீன் 15ஆம் திகதி எனவும், இறுதித் தண்ணீர் விநியோகத் திகதி எதிர்வரும் செப்ரம்பர் 13ஆம் திகதி எனவும், அறுவடை இறுதித் திகதி ஒக்ரோபர் 30ஆம் திகதி எனவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் குளத்தின் கீழுள்ள ஐந்து கமநல சேவைகள் பிரிவிலுள்ள 83 விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (த-60)

# குருதிக்கொடை முகாம்

யாழ்ப்பாணம், மே 7

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தால் 4 மாதங்களுக்கு ஒருமுறை நடாத்தபடும் குருதிக்கொடை முகாம்களின் வரிசையில் 13ஆவது குருதிக்கொடை முகாம்இளவாலை பிரதேச மருத்துவமனையில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

தெல்லிப்பழை குருதி வங்கியினர் கலந்துகொண்டு குருதி சேகரிப்பில் ஈடுபட்டனர். (ம-21)



### நீர்கொழும்பு கொச்சிக்கடையில்

# போதையில் வந்தவர்களே வன்முறைக்குக் காரணம்

## பொலிஸ் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, மே 7
நீர்கொழும்பு கொச்சிக்கடை பலகத்துறை பகுதிகளில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வன்முறையானது, மதுபோதையில் செயற்பட்ட சிலரால் ஏற்பட்ட சம்பவமே. இந்தச் சம்பவம் தொடர்பில் இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சகருமான ருவான் குணசேகர தெரிவித்தார்.

நீர்கொழும்பு கொச்சிக்கடை, பலகத்துறை பொலிஸ் பிரிவுகளில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் இருவருக்கிடையில் ஏற்பட்ட வாய்த் தகராறு காரணமாக இடம்பெற்றதே. இந்தச் சம்பவத்தின்போது கூடுதலான மதுபானம் அருந்தியிருந்த மற்றுமொரு குழுவினர் சம்பவத்தில்' தலையீடு செய்தனர். இந்த தலையீட்டை அடுத்து அமைதியற்ற நிலை ஏற்பட்டது.
பொலிஸார் உடனடியாக செயற்பட்டனர். பெரும் இடர் தவிர்க்கப்பட்டது. பொலிஸ் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது. உந்துருளி மற்றும் முச்சக்கர வண்டி சிலவற்றுக்குச் சேதங்கள் ஏற்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.
எவரும் மருத்துவமனையில் சேர்க்கப்படவில்லை. கையால் தாக்கப்பட்ட சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இதைத் தொடர்ந்தே சிறு முறைப்பாடு பதிவானது. கடந்த சில தினங்களில் பொலிஸ் மற்றும் பாதுகாப்புப் பிரிவினர் சிறப்புத் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதன்போது வாள், கூரிய ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. எனினும் கூரிய ஆயுதங்கள் பயன்படுத்தப்படவில்லை. தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது வாள் கூரிய ஆயுதங்களை பொலிஸிடம் ஒப்படைக்குமாறு நாம் கூறியுள்ளோம். இந்தச் சம்பவம் தொடர்பாக சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் மேலும் சிலர் அடையாளங் காணப்பட்டுள்ளனர் என்று பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (த)

# கடல் மார்க்கங்களில் கண்காணிப்பு இல்லை

## யோகேஸ்வரன் எம்.பி. குற்றச்சாட்டு



மட்டக்களப்பு, மே 7
ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினரைத் தேடும் பணிகள், புலனாய்வுப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. ஆனால் அவை வீதிகளில்முன்னெடுக்கப்படுகின்றனவே தவிர கடல் மார்க்கங்கள் கவனிக்கப்படவில்லை என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன்.
தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மண்முனை தென் எருவில்பற்று பிரதேச சபை உறுப்பினர் மேகசுந்தரம் வினோராஜின் வேண்டுகோளிற்கிணங்க நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரனின் நிதி ஒதுக்கீட்டின்கீழ் களுவாஞ்சிகுடி கிராமத்தில் 3 வீதிகள் 60 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் சீரமைப்புச் செய்யப்படவுள்ளன.
அந்த அபிவிருத்தி வேலைத் திட்டங்களை ஆரம்பித்து வைத்துவிட்டு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
கடந்த 21ஆம் திகதி இஸ்லாமியத் தீவிரவாதிகளின் தாக்குதல்களால் தமிழ் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றோம். இந்தத் தாக்குதலின் பின்னர் அது தொடர்பில் அரசு எடுத்து வருகின்ற நடவடிக்கைகள் சில வரவேற்கத்தக்கவையாக இருந்தாலும், இஸ்லாமியப்பயங்கரவாதிகள்இன்னமும் உள்ளனர் என்றுதான் அரசுகூறிக்கொண்டுள்ளது. புலனாய்வாளர்களே தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்புக்குகாசு கொடுத்து அவர்களையும் புலனாய்வாளர்களாக வைத்திருக்கின்றார்கள். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து பிரிந்த வந்து ஒட்டுக் குழுக்களாகச் செயற்பட்ட, கருணா அம்மானின் குழுவுக்கும், பிள்ளையானின் குழுவுக்கும், தமிழ் மக்களைப் புலனாய்வு செய்வதற்காக சம்பளம் வழங்கப்பட்டு வந்துள்ளன. தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பு ஒரு ஆயுதக்குழு என்று அறிந்திருந்த காரணத்தினால்தான் இந்த அரசு அவர்களையும் புலனாய்வாளர்களாக உள்ளீர்த்துள்ளது.
இஸ்லாமிய தீவிரவாதிகள் தமிழ் மக்களை இலக்காக வைத்து செயற்பட்டிருக்கின்றார்கள். தற்போது முதன்மைத் தீவிரவாதி சஹ்ரான் உயிரோடு இருப்பதாக பாதுகாப்புத் தரப்புச் சொல்லிக் கொண்டிருக்கின்றது. அவர் இருந்த காத்தான்குடியை இப்போதான் மெல்ல மல்ல பாதுகாப்புத் தரப்பினர் சுற்றிவளைப்புச் செய்கின்றார்கள். இந்தச் சம்பவம் நடைபெற்ற உடனேயே முழு சுற்றிவளைப்புக்களைச் செய்திருந்தால் பலரைக் கைது செய்திருக்கலாம், பல பொருள்களையும் கைப்பற்றியிருக்கலாம். பொருள்களெல்லாம் மெல்ல மெல்ல நகர்த்தப்பட்ட பின்னர்தான் தேடுதல் நடைபெறுகின்றது. ஓட்டமாவடி, வாழைச்சேனை முஸ்லிம் பிரதேசம், ஏறாவூர், போன்ற பகுதிகளிலெல்லாம் தேடுதல் நடவடிக்கைகள் முற்றாக முடிக்கப்படவில்லை.
பொலிசாரும் இராணுவதினரும், அப்போது தமிழ் மக்கள் மீது செய்த தேடுதல் நடவடிக்கைகளை ஏன் இப்போது இஸ்லாமிய மக்கள் மீது மேற்கொள்ளவில்லை என்பது கேள்வியாக இருக்கின்றது. எனெனில் பின்புலத்திலே இஸ்லாமிய அரசியல்வாதிகள் இருக்கின்றார்கள். பலபொலிஸ் அதிகாரிகள் இஸ்லாமிய அரசியல்வாதிகளின் ஆதரவாளர்களாக இருக்கின்றார்கள். இவர்கள் சரியாக தீவிரவாதிகளைக் கண்டுபிடிப்பார்களா என்பது மிகவும் சந்தேகத்துக்குரியதாகவே இருந்த கொண்டிருக்கின்றது.
உண்மையிலே காத்தான்குடியிலிருக்கின்ற அனைத்து அரசியல்வாதிகளும் விசாரணைக்குட்படுத்தப்படல் வேண்டும். அதேபோன்று எனைய இஸ்லாமிய பகுதிகளிலிருக்கின்றவர்களும் விசாரிக்கப்படல் வேண்டும். காலம் தாழ்த்த தாழ்த்த, அங்கிருக்கின்ற பயங்கரவாதிகள் வெளியேறிவிடுவார்கள், அங்கிருக்கின்ற பயங்கரவாத பொருள்களும், மாற்றப்படலாம். வீதிகளில் மாத்திரம்தான் சோதனை நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன, கடல் மார்க்கத்தைக் கவனிப்பதில்லை. எனவே அரசு இன்னும் சரியான முறையில் நடவடிக்கை எடுக்கவில்லை.
உடனடியாக அரசதலைவர் சட்டம் ஒழுங்கு அமைச்சை தலைமை அமைச்சர் தலைமையிலான குழுவிடம் கையளிக்க வேண்டும். தனது அரசியல் இருக்கையைத் தக்கவைக்க வேண்டும்என்பதற்காகதலைமை அமைச்சரும்இஸ்லாமியஅரசியல்வாதிகளை உடைக்கக்கூடாது என்பதற்காக இதனை பெரிதாக எடுக்காமல் இருக்கின்றார். தனக்கும் எதிர்கால அரசியல் வேண்டும் என்பதற்காக அரச தலைவரும் இதில் கூடிய அக்கறையில்லாமல் இருக்கின்றார் - என்றார். (ம)

# யாழ். பல்கலை மாணவர்களை உடன் விடுதலை செய்யுங்கள்

## காணாமல் ஆக்கப்பட்டோரின் மட்டக்களப்புச் சங்கம் கோரிக்கை



மட்டக்களப்பு, மே 7
யாழ்ப்பாணப் பல்கலைகழக மாணவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும்என்று மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.
மட்டக்களப்பு கல்லடி வொயிஸ் ஒவ் மீடியா அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில், சங்கத் தலைவி திருமதி அமலராஜ் அமலநாயகி மேலும் தெரிவித்ததாவது:
பயங்கரவாதச் செயற்பாடுகளில் ஈடுபடுவதாகக் குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்ட மாணவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும். மாணவர்கள் காணாமல் போனோரின் உரிமைக்காக குரல் கொடுத்தனரே தவிர எவ்வித பயங்கரவாத செயற்பாடுகளிலும் ஈடுபடவில்லை.
அரசும், இராணுவமும் தமிழ் மக்கள் மீது அடக்குமுறையை பிரயோகிக்காது செயற்பட வேண்டும். பத்து வருடங்களுக்கு முன் நடந்த துயரத்தில் இருந்து மீளாத நிலையில் அந்நிய நாடுகளின் சூழ்ச்சிக்கும் அப்பாவித் தமிழ் மக்களே பாதிக்கப்படுகின்றனர் - என்றார். (த-46)

# முகத்தை மூடும் ஆடைகளுக்கு சாஹிராக் கல்லூரியில் தடை

கொழும்பு, மே 7
கொழும்பு சாஹிராக் கல்லூரியில் முகத்தை மூடும் ஆடைகள் அணிவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.
நாடு முழுவதும் இரண்டாம் தவணைக் கல்வி நடவடிக்கைகளுக்காக பாடசாலைகள் நேற்றுத் திறக்கப்பட்டுள்ளன. இந்த நிலையிலேயே சாஹிரா கல்லூரியில் முகத்தை மூடும் ஆடைகள் அணிவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகப் பாடசாலை நிர்வாகம் அறிவித்துள்ளது.
இதுகுறித்த சிறப்பு அறிவித்தல் ஒன்றையும் பாடசாலை நிர்வாகம் வெளியிட்டுள்ளது. அந்த அறிவித்தல் பாடசாலையின் முதன்மை வாயிலிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.
முகத்தை மூடும் ஆடைகள் அணிவதற்குத் தடை விதிக்கும் அரசிதழ் அறிவித்தலை அண்மையில் அரசு வெளியிட்டிருந்தது. இந்த நிலையில் குறித்த பாடசாலை நிர்வாகம் மேற்படி அறிவித்தலை விடுத்துள்ளது. (த)

# தீவிரவாதிகளை வளர்த்துவிட்ட அரசியல்வாதிகள் தப்பக் கூடாது

## சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. தெரிவிப்பு


முஸ்லிம் தலைவர்களாக தம்மை அடையாளப்படுத்தும் அரசியல்வாதிகள், வெடிப்பொருள்களுடன் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இளைஞர்கள் விடுவித்த சம்பவத்திலிருந்தும், தீவிரவாதிகளை வளர்த்த சம்பவங்களிலிருந்தும் தப்பிக்க முடியாது.
இவ்வாறு வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.
ஊடகவியலாளரின் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும்போது அவர் தெரிவித்ததாவது:
சில மாதங்களுக்கு முன்னர் வில்பத்துக் காட்டில் முஸ்லிம் இளைஞர்கள், வெடிப்பொருள்களுடன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்கள் அரசியல் தலையீட்டால்தான் விடுதலை செய்யப்பட்டனர். அவர்களை விடுவித்த அரசியல்வாதிகள் தப்பிக்கக்கூடாது.
வில்பத்து காட்டில் மூன்று மாதங்களுக்கு முன்பு தீவிரவாதிகளுடைய அல்லது முஸ்லிம் இளைஞர்களின் பயிற்சி நடைபெற்றது. அதில் அங்கிருக்கின்ற சிங்கள மக்கள் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தினர்.
அங்கு சென்ற பொலிஸார் சோதனையிட்டபோது சுமார் 100கிலோ சீ போர் (C4) என்று சொல்லப்படுகின்ற வெடி மருந்து மீட்கப்பட்டது.
அதை வைத்திருந்த குற்றச்சாட்டில் முஸ்லிம் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். எனினும் அரசியல் அழுத்தங்களால் விடுதலை செய்யப்பட்டனர்.
100கிலோ வெடிமருந்தோடு கைது செய்யப்பட்டவர்களை அரசியல் ரீதியாக இலங்கையில் விடு விக்க முடியும். அப்படிப்பட்ட அரசியல்வாதிகள் முஸ்லிம் மக்களுடைய தலைவர்களாகத் தங்களை அடையாளங் காட்டியிருக்கின்றனர். அவர்கள் தப்ப முடியாது - என்றார். (த-246)

# கடும் பாதுகாப்புக்குள் கற்றல் செயற்பாடுகள் ஆரம்பம்
























இலங்கையில் ஈஸ்டர் தினத்தன்று நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதல்களில் சுமார் 250க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். சுமார் 500க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர். இதையடுத்து பாதுகாப்புக் காரணமாக நாடாளாவிய ரீதியில் உள்ள பாடசாலைகள் அனைத்தினதும் கற்றல் செயற்பாடுகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன. இதையடுத்து நேற்றையதினம் கடும் பாதுகாப்புக்கு மத்தியில் பாடசாலைகள் தமது கற்றல் செயற்பாடுகளை ஆரம்பித்தன. (ம)

# பத்தனை பாடசாலைக்கருகில் வெடிபொருள்கள் நேற்று மீட்பு


கொழும்பு, மே 7

திம்புள்ள பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்ட கொட்டகலை ஸ்ரீ பெரகும் சிங்கள வித்தியாலயத்துக்க அருகில் சுமார் ஒரு கிலோவிற்கு அதிகமான வெடி மருந்துகள் நேற்று மீட்கப்பட்டன என்று திம்புள்ள பத்தனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



பாடசாலையின் வளாகப்பகுதிகளைச் சுத்தப்படுத்தும் நடவடிக்கையில் பொது மக்கள் ஈடுப்பட்டிருந்தபோது இந்த வெடிமருந்துகள் மீட்கப்பட்டன. மீட்கப்பட்ட வெடிமருந்துகள் கல் உடைப்பதற்காகப் பயன்படுத்தப்படுபவை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸார் இந்த விடயத்தில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம)



## புத்தர் சிலை உடைப்பில் 13 பேருக்கும் மறியல் நீடிப்பு

கொழும்பு, மே 7

மாவனெல்லையில் புத்தர் சிலை உடைப்புடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் கைதான 13 பேருக்கும் எதிர்வரும் 20ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

அவர்கள் மாவனெல்லை நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டனர். அதன் போதே மறியல் நீடிக்கப்பட்டது.

கடந்த ஜனவரியில் புத்தர் சிலை உடைக்கப்பட்டிருந்தது. இந்தக் குற்றச்சாட்டில் ஒருவர் பின் ஒருவராக முன்னர் 13 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில்,

நாவலப்பிட்டியில் பாதணிகள் விற்பனை நிலையம் ஒன்றில் அண்மையில் மறைந்திருந்த வேளையில் கைது செய்யப்பட்டு, தற்பொழுது குற்றப் புலனாய்வுப் பிரிவின் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ள சாதிக் அப்துல்லாஹ் மற்றும் ஷாஹித் அப்துல்லாஹ் ஆகியோர் மாவனெல்லையில் புத்தர் சிலை உடைப்பு சம்பவம் தொடர்பிலும் முதன்மைச் சந்தேக நபர்களாகப் பெயரிடப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் கூறியுள்ளனர். (து)

## கண்ணியமாக நடந்த மாணவர் திட்டமிட்டு படையினரால் கைது

*மாகாண சபை முன்னாள் உறுப்பினர் விசனம்*

வவுனியா,மே 7

போரின் பின்னரான பத்து ஆண்டுகளில் எந்தவித அசம்பாவிதங்களிலும் ஈடுபடாது கண்ணியமாக நடந்துகொண்ட தமிழ் இளைஞர்கள் மீது வேண்டுமென்றே பழிசுமத்தி பேரினவாத மேலாதிக்கத்தை காட்டிய செயலாகவே பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய நிர்வாகிகளின் கைது அமைந்துள்ளது.

இவ்வாறு வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் செ.மயூரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களின் கைது தொடர்பாகவும், சமகால அரசியல் நிலவரம் தொர்பாகவும் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். ஒன்றியத் தலைவரையும், செயலரையும் கைதுசெய்தமை மாணவர்கள் மத்தியில் கொதி நிலையை உருவாக்கியுள்ளது - என்றுள்ளது. (த-110)

## நாட்டில் இயல்பு நிலையை விரைவில் கொண்டு வருவோம்

*இராணுவத் தளபதி தெரிவிப்பு*

யாழ்ப்பாணம்,மே 7

நாட்டில் இயல்பு நிலையை விரைவில் கொண்டு வருவோம் என்று இராணுவ தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மகேஷ் சேனாநாயக தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது :

நாட்டில் கடந்த 10 ஆண்டுகளாக அமைதி நிலவியது. தற்போது நாட்டில் ஏற்பட்ட குண்டு வெடிப்பை அடுத்து மக்கள் குழப்ப நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள். தாக்குதல் நடைபெறுவது தொடர்பில் புலனாய்வு பிரிவை குற்றம் சுமத்துகிறார்கள்.

இது ஒட்டுமொத்த பாதுகாப்புக்கு பொறுப்பானவர்கள் அனைவரின் பிரச்சினையாக உள்ளது.

இவ்வாறான தாக்குதல்கள் வெளியில் உள்ள ஒருவரின் தலைமைத்துவத்தின் கீழ் நடைபெற்று இருக்கலாம். பொது மக்களுக்கு நம்பிக்கை அளிக்கவும், வன்முறை இல்லாமல் ஒழிக்கவுமே நாங்கள் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளோம். விரைவில் இயல்பு நிலையை மீண்டும் கொண்டு வருவார்கள் - என்றார். (ஐ-7)

*இலங்கைக் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்ட*

## கோடீஸ்வரரின் 3 பிள்ளைகளின் சடலங்கள் கண்ணீருடன் அடக்கம்

கொழும்ப, மே 7

கொழும்பில் 21ஆம் திகதி இடம்பெற்ற குண்டு வெடிப்பில் உயிரிழந்த டென்மார்க்கின் கோடீஸ்வரரான ஆண்டர் ஹொல்ச் பொவ்ல்சனின் மூன்று குழந்தைகளின் இறுதி அஞ்சலி உறவினர்களின் கண்ணீருடன் டென்மார்க்கில் நடைபெற்றது.



ஷங்ரிலா ஹொட்டலில் நடைபெற்ற குண்டுத் தாக்குதலில் கோடீஸ்வரின் 3 பிள்ளைகளும் அடங்குவர். சடலங்களை அவர் டென்மார்க்குக்குக் கொண்டு சென்றிருந்தார்.

டென்மார்க் நாட்டின் முதல் நிலை கோடீஸ்வரரான ஆன்ட்ரஸன் ஹாவல்க் பாவ்ல்ஸன் (வயது -46) அவரின் இரு மகள்மாரினதும், மகனினதும் இறுதி நிகழ்வும், நல்லடக்கமும் அர்ஹஸ் நகரில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

இறுதி நிகழ்வில் டென்மார்க்கின் அரசகுடும்ப உறுப்பினர்கள், அந்த நாட்டின் தலைமை அமைச்சர் உள்ளிட்ட பல நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

தேவாலயத்துக்குள் கொண்டு வரப்பட்டபோது ஆன்ட்ரஸன் தனது மனைவி ஆன் மற்றும் எஞ்சியுள்ள ஒரே மகள் அஸ்ரிட் ஆகியோரை அரவணைத்தபடி கண்ணீர் மல்க நின்றிருந்தார். (து-21)



## சகலருக்கும் பொதுவாக சட்டம் இருக்கவேண்டும்

*சிறிதரன் எம்.பி. தெரிவிப்பு*

கிளிநொச்சி, மே 7

சட்டம் எல்லோருக்கும் பொதுவானதாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டும். அனைவருக்கும் ஒரேமாதிரியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்தார்.

அண்மையில் நாடாளுமன்றில் அவசரகாலச் சட்டம் நிறைவேற்றப்பட்ட போதும் அதற்கு ஆதரவாக வாக்களிக்கவில்லை எதிர்க்கவுமில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் 25 லட்சம் ரூபா நிதியில் புதிதாகக் கட்டடம் அமைத்துக் கொள்வதற்காக நேற்றுமுன்தினம் அடிக்கல் நடப்பட்டது.

அதில் சிறிதரன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு அடிக்கல் நட்டார்.

கிளிநாச்சி தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத் தலைவர் நா.நகுலராஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கரைச்சி பிரதேச சபை தவிசாளர் அ.வேழமாலிகிதன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (து-214)

## அப்பாவிகளை அழித்தொழித்து சொர்க்கத்துக்குப் போகமுடியாது

*சிறிநேசன் எம்.பி. தெரிவிப்பு*

செங்கலடி, மே 7

அப்பாவிகளை அழிப்பதன் மூலமாக சொர்க்கத்துக்குப் போகலாம் என்று எந்த மதத்திலாவது கூறியிருந்தால் அதனைப் பகுத்தறிவுள்ள ஒருவரின் கருத்தாக நாங்கள் ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞா. சிறிநேசன் தெரிவித்தார்.



மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் சிறிமாவடி பிள்ளையார் ஆலய சுற்று மதில் அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. சிறிநேசனின் 3 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் மதில் அமைக்கப்படவுள்ளது. அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது உருவாகியுள்ள பல்லின சமூகங்கள் வாழுகின்ற இந்த நாட்டிலே அப்பாவி மக்களின் உயிர்களை எடுக்குமாறு எந்தவொரு மதமும் கூறவில்லை. - என்றார். (து)

## ஒரு இரவில் இரு வீடுகளில் திருட்டு

சிறுப்பிட்டியில் நேற்றுமுன்தினம் இரவு இரு வீடுகளில் பணம் மற்றும் நகைகள் திருடப்பட்டுள்ளன என்று பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சிறுப்பிட்டி விஸ்ணுதுர்க்கா ஆலயத்துக்கு அருகில் பிரதான வீதியில் உள்ள இரு வீடுகளிலேயே திருட்டு நடந்துள்ளது.

ஒரு வீட்டில் 6 பவுண் நகைகளும், ஒரு லட்சத்து 15 ஆயிரம் ரூபா பணமும், மற்றைய வீட்டில் நகைகளும், பணமும் திருடப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதிகாலை 3 தொடக்கம் 4 மணிக்கு இடைப்பட்ட நேரத்தில் திருட்டு நடத்திருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக அச்சுவேலிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-26,11)

### சோதனைகளின்...

றும், பாதுகாப்பு நடவடிக்கைகளின்போது பாதுகாப்புத் தரப்பினர் அல்லாத ஊடகவியலாளரையோ அல்லது வேறு எந்தத் தரப்பையோ பயன்படுத்தக் கூடாது என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அனைத்துப் பாதுகாப்புத் துறைகளுக்கும் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார் என்றும் அரச தலைவர் ஊடகப் பிரிவு அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக மேற்கொள்ளப்படும் சோதனை நடவடிக்கைகள் தொடர்பான காட்சிகள் ஊடகங்களில் காட்சிப்படுத்தப்படுவதால், சில சந்தர்ப்பங்களில் பயங்கரவாத நடவடிக்கைகளுடன் தொடர்பு அற்றவர்கள் கூட அதில் சம்பந்தப்பட்டவர்கள் என்று கருதும் நிலை உருவாகின்றது. அதனால் அவர்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர். இது தொடர்பாகச் சமயத் தலைவர் உட்படப் பல தரப்பினர் அரச தலைவரின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர். அதையடுத்து அரச தலைவரால் இந்தப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது என்று ஊடகப் பிரிவு அனுப்பியுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

### பாடசாலைகள்...

பாடசாலைகளில் மாணவர்களின் வரவானது 47 சதவீதத்தைத் தண்டாத நிலைமையே காணப்பட்டது என்று வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்தார்.

பாடசாலைகளின் இரண்டாம் தவணைக் கற்றல் செயற்பாடுகள் கடந்த 22ஆம் திகதி ஆரம்பமாகிவிருந்தது. கடந்த 21ஆம் திகதி கொழும்பிலும், மட்டக்களப்பிலும் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களை அடுத்துப் பாடசாலைகள் ஆரம்பிப்பது கடந்த 29ஆம் திகதிவரை பிற்போடப்பட்டிருந்தது. அதன்பின்னரும் பாதுகாப்பைக் காரணம் காட்டி நேற்றுவரைப் பிற்போடப்பட்டிருந்தது. நேற்று தரம் 6 முதல் 13 வரையான வகுப்புக்களின் இரண்டாம் தவணைக் கற்றல் நடவடிக்கைகள் ஆரம்பமாகின. அனைத்துப் பாடசாலைகளிலும் ஆயுதம் தாங்கிய இராணுவத்தினர் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். பாடசாலைக்கு வந்த ஆசிரியர்கள், மாணவர்களின் புத்தகப் பொதிகள், உணவுப் பொதிகள் என அனைத்தும் சோதனையிடப்பட்ட பின்னர் அவர்கள் பாடசாலைகளுக்குள் அனுமதிக்கப்பட்டனர்.

வடக்கிலும் பாடசாலைகளில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டிருந்தன. அனைத்துப் பாடசாலைகளுக்கு முன்பாகவும் பாதுகாப்புத் தரப்பினர் கடமையில் இருந்தனர். மாணவர்களும், ஆசிரியர்களும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுப் பாடசாலைக்குள் அனுமதிக்கப்பட்டனர்.

வடக்குப் பாடசாலைகளின் நிலமை தொடர்பாக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலனிடம் கேட்டபோது, வடக்கு மாகாணத்தில் உள்ள 12 கல்வி வலயங்களிலும் உள்ள ஆரம்பப் பிரிவுகள் தவிர்ந்த ஏனைய பாடசாலைகளின் இரண்டாம் தவணைக் கற்றல் நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன. வடக்கு மாகாணப் படசாலைகளில் மாணவர்களின் வரவு 47 சதவீதத்தைத் தாண்டாத நிலமையே காணப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் மாணவர் வரவு 80 சதவீதத்தைத் தொட்டது. ஆனால் அதிக மாணவர்களைக் கொண்ட யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் வரவு 30 சதவீதமாகக் காணப்பட்டது. தென்மராட்சிக் கல்வி வலயத்தில் 46 சதவீதமாகவும், வடமராட்சிக் கல்வி வலயத்தில் 58 சதவீதமாகவும் மாணவர் வரவு காணப்பட்டது. எதிர்வரும் தினங்களில் மாணவர்களின் வரவு வழமைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது என்றார்.

அதேவேளை, நகர்ப் புறப் பாடசாலைகளில் மாணவர்களின் வரவு குறைவாக இருந்த போதும், கிராமப் புறப் பாடசாலைகளில் மாணவர்களின் வரவு அதிகமாக இருந்தது என்று தெரிவிக்கப்பட்டது.

தமது அரசியல் இலாபத்தை நோக்கமாகக் கொண்டு செயற்படும் சில குழுக்களின் போலியான பரப்புரைகளைப் புறந்தள்ளித் தமது பிள்ளைகளைப் பாடசாலைகளுக்கு அனுப்பிய பெற்றோருக்குக் கல்வி அமைச்சு நன்றி தெரிவித்துள்ளது. (எ-105,37,7)

### வலி...

பிடிக்கப்படவில்லை.

வட்டார ரீதியாக முன்னிலைப்படுத்திச் செய்ய வேண்டிய வேலைத் திட்டம் தொடர்பாக நேற்றுக் காலை 10 மணிக்குக் கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கூட்டம் ஆரம்பமாகவிருந்த நிலையில் அலுவலகத் தொலைபேசிக்கு அழைப்பு ஒன்று வந்துள்ளது. அந்த அழைப்பில் பேசிய ஒருவர் சபையில் வெடி குண்டு வைக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்து அழைப்பைத் துண்டித்துள்ளார்.

உடனடியாக அது தொடர்பாக பாதுகாப்புத் தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டது. பாதுகாப்புத் தரப்பினரும், வெடி குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினரும் அங்கு வந்து சோதனையில் ஈடுபட்டனர். எனினும் அங்கு வெடி பொருள் எதுவும் மீட்கப்படவில்லை.

அதன்பின்னர் கூட்டம் நடைபெற்றது. இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-26,7,ரி1)

### சிறு...

கம் ஏற்படுத்த இடமளிக்க முடியாது என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் சிவில் சமூகத் தலைவர்களை நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார் என்று அவரது ஊடகப் பிரிவு அனுப்பியுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் உள்ளதாவது;

புரிந்துணர்வுடனும் நம்பிக்கையுடனும் நாட்டினுள் அமைதியான சூழலை ஏற்படுத்துவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டியது அனைவரினதும் பொறுப்பாகும் என்று அரச தலைவர் தெரிவித்தார்.

அங்கு கருத்துத் தெரிவித்த முஸ்லிம் சிவில் சமூக தலைவர்கள், பாரம்பரிய முஸ்லிம் சமூகத்தினர் இத்தகைய மிலேச்சத்தனமான நடவடிக்கைகளை ஒருபோதும் ஏற்றுக்கொள்வதில்லை. அவர்கள் இந்த நாட்டின் ஏனைய மதங்களை சார்ந்த மக்களோடு மிகுந்த ஒத்துழைப்புடன் வாழ்ந்து வருகின்றனர் என்று குறிப்பிட்டனர்.

கடந்த ஏப்ரல் 21ஆம் திகதி இடம்பெற்ற தாக்குதலின் பின்னர் ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்தினரையும் சந்தேகத்தோடு நோக்குவதால் அவர்கள் முகங்கொடுக்க நேர்ந்துள்ள சிரமங்கள் தொடர்பாக முஸ்லிம் தலைவர்கள் அரச தலைவரிடம் தெளிவுபடுத்தினர். அனைத்து இன மக்களுக்கிடையேயும் சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் உறுதிப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான தமது ஆலோசனைகளையும் முன்மொழிவுகளையும் அவர்கள் முன்வைத்தனர்.

நாட்டில் அமைதியான சூழலை பேணுவதற்கு அரச தலைவர் 2015ஆம் ஆண்டு முதல் நாட்டினுள் முன்னெடுத்துவந்த நல்லிணக்க வேலைத்திட்டங்களும் உறுதுணையாக அமைந்தனவென அவர்கள் சுட்டிக்காட்டினர்- என்றுள்ளது. (எ)

### பல்கலையில்...

பனின் ஒளிப்படம் இருந்தது என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சிற்றுண்டிச் சாலைப் பொறுப்பாளரையும் நாளை 8ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட யாழ்ப்பாணம் நீதிவான் மன்று, அவர்களை பிணையில் விடுவிப்பதா? அல்லது வழக்கில் இருந்து விடுப்பதா? என்பது தொடர்பில் அன்று கட்டளையிடப்படும் என்றும் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இராணுவத்தினரும், பொலிஸாரும் இணைந்து மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போது, அங்குள்ள கலைப்பீட மாணவர் ஒன்றிய அலுவலகத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் மற்றும் உறுப்பினரின் படம் இருந்து என்று தெரிவித்துக் கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவரும், செயலரும் கைது செய்யப்பட்டனர். அங்குள்ள சிற்றுண்டிச் சாலையில் தியாகி திலீபனின் ஒளிப்படம் இருந்தது என்று தெரிவித்து சிற்றுண்டி நடத்துபவர் கைது செய்யப்பட்டார். மாணவர்கள் இருவரும் அன்று இரவு 8.30 மணியளவில் நீதிவான் இல்லத்தில் முற்படுத்தப்பட்டு எதிர்வரும் 16ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். சிற்றுண்டிச் சாலை நடத்துபவர் மறுநாள் நீதிவானிடம் முற்படுத்தப்பட்டு அவரும் எதிர்வரும் 16ஆம் திகதி விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இந்தநிலையில் நேற்று மாணவர்கள் சார்பாகவும், சிற்றுண்டிச் சாலை நடத்துபவர் சார்பாகவும் நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது. சட்டத்தரணிகளான க.சுகாஸ், கு.குருபரன், ச.சயந்தன், வி.மணிவண்ணன், வி.திருக்குமரன், செலஸ்ரின் ஆகியோரால் இரு நகர்த்தல் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

இந்த வழக்குப் பொலிஸரால் சோடிக்கப்பட்ட வழக்கு என்றும், உரிய சட்ட ஏற்பாடுகளைப் பயன்படுத்தி வழக்குத் தாக்கல் செய்யப்படவில்லை என்று சட்டத்தரணி கு.குருபரன் மன்றுரைத்தார்.

திலீபனின் நினைவு தினத்துக்குத் தடை உத்தரவு கோரிப் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்தபோது நினைவேந்தலை நடத்தலாம் என்ற உத்தரவை நீதிமன்று கடந்த காலத்தில் பிறப்பித்திருந்தது. திலீபனின் நினைவாலயத்தைச் சீரமைக்க அமைச்சரவையே நிதி ஒதுக்கியுள்ளது. அவ்வாறிருக்கத் திலீபனின் ஒளிப்படம் வைத்திருந்தமை குற்றமாகாது என்று சட்டத்தரணி க.சுகாஸ் சுட்டிக்காட்டினார்.

மாணவர்களுக்கு எதிராக முன்வைத்த குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் பொலிஸ் அத்தியட்சகர் அல்லது அவரது பதவிநிலைக்கு குறையாத ஒருவரே சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்தவேண்டும் என்ற வாதத்தை முன்வைத்து சட்டத்தரணிகள் நீண்ட சமர்ப்பணத்தைச் செய்தனர்.

சந்தேகநபர்களை 72 மணிநேரத்துக்குள் நீதிமன்றில் முற்படுத்தியதால் பொலிஸ் அத்தியட்சகரால் மன்றில் முற்படுத்த வேண்டும் என விதி தேவையற்றது என்று பொலிஸார் மன்றுரைத்தனர். சட்டமா அதிபரின் ஆலோசனையின் மாணவர்களைப் பிணையில் விடக்கூடாது என்று கோப்பாய் பொலிஸார் மன்றில் கோரினார். இவற்றை ஆராய்ந்த நீதிவான் நீதிமன்றக் கட்டளைக்காக வழக்கு நாளை 8 திகதிவரை ஒத்திவைக்கப்பட்டது.

**நடந்தது என்ன?**

கடந்த ஈஸ்ரர் தினத்தன்று கொழும்பிலும், மட்டக்களப்பிலும் தற்கொலைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டிருந்தன. அதன்பின்னர் அவசரகாலச் சட்டம் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் நடைமுறைப்படுத்தப்பட்டது. தற்போது நாடளாவிய ரீதியில் தேடுதல்கள் நடைபெற்று வருகின்றன. பொலிஸாருடன், இராணுவத்தினரும் களமிறக்கப்பட்டுள்ள நிலையில் வடக்கில் பாதுகாப்புக் கெடுபிடிகள் வெகுவாக அதிகரித்துள்ளன. வடக்கில் பல இடங்களில் சுற்றிவளைப்புத் தேடுதல்களும், வீதிச் சோதனைகளும் தீவிரப்படுத்தப்பட்டிருந்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் படைத் தரப்பால் சுற்றிவளைக்கப்பட்டது. சுமார் 300 தொடக்கும் 450 வரையான இராணுவத்தினர் குவிக்கப்பட்டிருந்தனர். வீதிகளில் கனரக போர் வாகனங்கள் நிறுத்தப்பட்டிருந்தன.

ஒவ்வொரு பீடங்களும், அங்குள்ள விரிவுரைக் கூடங்களும் தனித்தனியாகச் சோதனையிடப்பட்டன. வளாகத்தில் உள்நுழைந்த ஊழியர்களின் உடமைகள் நுழைவாயிலில் கடமையில் இருந்த பல்கலைக் கழகப் பாதுகாப்பு அலுவலர்களால் பைகள் சோதனையிடப்பட்டன. அங்குள்ள கலைப்பீட மாணவர் ஒன்றிய அலுவலகத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரன் மற்றும் உறுப்பினரின் ஒளிப்படங்கள் இருந்தன என்று தெரிவித்து கலைப்பீட மாணவர் ஒன்றித் தலைவர் எம்.திவாகரன், செயலர் எஸ்.கபில்ராஜ் ஆகியோர் கைது செய்யப்பட்டனர், தியாகி திலீபனின் படம் இருந்தது என்று சிற்றுண்டிச் சாலை நடத்தியவரும் கைது செய்யப்பட்டிருந்தார். மாணவர்கள் அன்று இரவே நீதிவான் இல்லத்தில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். சிற்றுண்டிச் சாலை நடத்துநர் மறுநாள் நீதிவானிடம் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

பல்கலைக் கழகத்தில் இருந்து மிதிவெடி மற்றும் கிளைமோர் மீட்கப்பட்டது என்ற தகவல்கள் வெளியிடப்பட்டன. எனினும் அவை கண்காட்சிக்காகப் போலியாக உருவாக்கப்பட்டவை என்று பின்னர் தெரிவிக்கப்பட்டது. எனினும் பொலிஸார் பல்கலைக் கழகத்தில் இருந்து மிதிவெடி, கிளைமோர் என்பன மீட்கப்பட்டன என்ற பொய்க் குற்றச்சாட்டைச் சுமத்தியுள்ளனர் என்று சட்டத்தரணிகள் அன்று தெரிவித்திருந்தனர். (எ-ம-21,26)

### யாழ்....

ரன் நேற்றுப் பதில் சட்டமா அதிபர் தப்புல டி லிவேராவை சட்டமா அதிபர் திணைக்களத்தில் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

நேற்றுக் காலை உயர்நீதிமன்ற வளாகத்தில் பதில் சட்டமா அதிபரைச் சந்தித்த நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் பிற்பகல் அவரைச் சந்திக்க வேண்டும் எனக் கூறியிருந்தபடியால் பிற்பகல் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் நீதிமன்ற அறிக்கைகளை பதில் சட்டமா அதிபர் விவரமாக அறிந்து வைத்திருந்தார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர் படங்கள் யாழ். 'பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய அறையிலும், சிற்றுண்டிச்சாலையிலும் இருந்தமை ஒரு பாரதூரமான குற்றமா என்று பதில் சட்டமா அதிபரிடம் நேரடியாகவே கேள்வியெழுப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மூவரின் விடுதலைக்குப் பொலிஸாரை பணிப்பதற்குரிய நடவடிக்கைகளை சட்டமா அதிபர் உடனடியாக எடுக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

மாணவர்களின் வாக்குமூல விவரங்கள் இதுவரை கிடைக்கவில்லை என இந்தச் சந்திப்பில் குறிப்பிட்ட பதில் சட்டமா அதிபர், இதனால் வழக்குகளை மீளப் பெறுவது பற்றிய பொலிஸாரின் தீர்மானத்தில் தாமதம் ஏற்பட்டாலும் மாணவர்களையும் மற்றவரையும் பிணையில் விடுதலை செய்யத் துரித நடவடிக்கை எடுக்கப்படும் உறுதியளித்தார் என்று கூறப்பட்டது. (எ-22)

### யாழ்.பல்கலைத்....

வாளருக்கு அறிவித்துள்ளார். கடந்த 30ஆம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும்வகையில் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்துக்கு அமைவாக அரச தலைவருக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களைப் பாவித்து, பேராசிரியர் இ. விக்னேஸ்வரன் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் துணைவேந்தர் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் பேராசிரியர் இ.விக்னேஸ்வரனைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, இந்த விடயம் தொடர்பாகத் தான் அறிந்துள்ளேன் என்றும், எனினும் அந்தக் கடிதம் இன்னமும் தனது கைகளுக்குக் கிடைக்கவில்லை என்றும் தெரிவித்தார். அவர் தான் கொழும்பில் தங்கி நிற்பதாகவும் தெரிவித்தார்.


யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் இ. விக்னேஸ்வரனுக்கு முகவரியிடப்பட்டு, கடந்த மாதம் 30ஆம் திகதி கடிதம் தயாரிக்கப்பட்டிருக்கின்ற போதும், நேற்றுமுன்தினம் பின்னிரவு தொலைநகல் மூலம் யாழ்ப்பாணத்துக்கு பல்கலைக்கழகத்துக்கு அறிவிக்கப்பட்டது என்றும், பேராசிரியர் இ.விக்னேஸ்வரனைப் பதவியில் இருந்து நீக்கியமைக்கான காரணங்கள் எதுவும் கடிதத்தில் குறிப்பிடப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-105)



# ஈரான் நோக்கி விரைகிறது அமெரிக்கப் போர்க் கப்பல்

வோஷிங்டன்,மே 7

வானூர்திகள் தாங்கிப் போர்க் கப்பல்கள் மற்றும் குண்டு வீசும் போர் வானூர்திகளை ஈரானுக்குக்கு அனுப்புகிறது அமெரிக்கா. ஈரான் ஏற்படுத்துகின்ற தொந்தரவுகள், பதற்றங்கள், எச்சரிக்கைகளுக்குப் பதிலடியே இது என்று அமெரிக்காவின் பாதுகாப்பு ஆலோசகர் ஜோன் போல்டன் இது குறித்துத் தெரிவித்தார்.



அமெரிக்கப் படையினர் மீது தாக்குதல் நடத்துவதற்கான வாய்ப்பு இருப்பதாகக் கூறப்படுவதாலே இந்தப் போர்க் கப்பலை ஈரானுக்கு அனுப்புவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. "அமெரிக்கப் படையினர் மீதோ, அதன் கூட்டாளிகள் மீதோ ஏதேனும் தாக்குதல் நடத்தப்பட்டால் பதிலடி வழங்கப்படும். யு.எஸ்.எஸ். ஆபிரஹாம் லிங்கன் என்ற வானூர்திகள் தாங்கிப் போர்க் கப்பல் தாக்குதல் குழுவும், குண்டு வீச்சு படையும், அமெரிக்காவின் மத்திய கட்டளைப் பிராந்தியத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன. இது தெளிவான செய்தியை ஈரான் அரசுக்கு அனுப்பும். ஈரானுடன் அமெரிக்கா போரிட முனையவில்லை.

ஆனால், ஈரான் ஏதாவது தாக்குதல் நடத்தினால், பதிலடி வழங்குவதற்குத் தயாராக இருக்கிறோம்" என்றும் போல்டன் மேலும் தெரிவித்தார்.

**பின்னணி**

2015ஆம் ஆண்டில் அமெரிக்கா உள்ளிட்ட ஆறு நாடுகள் ஈரானுடன் பன்னாட்டு அணு ஒப்பந்தம் ஒன்றைச் செய்தன. அணு ஆயுதச் சோதனைகளைச் செய்யாமல் இருப்பதற்காக ஈரானுக்குச் சலுகைகள் அளிப்பது தொடர்பான ஒப்பந்தம் அது.

கடந்த ஆண்டு இதிலிருந்து அமெரிக்கா வெளியேறியது. அமெரிக்கா வெளியேறினாலும், பிற ஐரோப்பிய நாடுகள் ஒப்பந்தத்தில் நீடிக்கின்றன. ஆனால், ஒப்பந்தத்தில் இருந்து வெளியேறியவுடன் ஈரான் மீது பொருளாதாரத் தடைகளை அமெரிக்கா விதித்தது.

ஈரானிடம் இருந்து எண்ணெய் வாங்குவதற்குச் சீனா, இந்தியா, தென்கொரியா, துருக்கி ஆகிய நாடுகள் பற்றிப் பரிசீலிக்கவுள்ளதாகக் கடந்த மாதம் அறிவித்திருந்தது. அமெரிக்கத் தடைகளைத் தொடர்ந்து ஈரான் பொருளாதாரம் வெகுவாகப் பாதிக்கப்பட்டது. அந்த நாட்டின் பண மதிப்பு வீழ்ச்சி அடைந்தது.

இதனால், வெளிநாட்டு முதலீட்டாளர்கள் ஈரானிலிருந்து வெளியேறினார்கள். உள்நாட்டில் அரசுக்கு எதிரான போராட்டங்கள் தொடங்கின. அமெரிக்காவின் இந்தச் செயல்களை ஈரான் அரசு தொடர்ந்து கண்டித்துச் சவால் விடுத்து வருகிறது.

## தீப்பிடித்தது வானூர்தி

*அவசரமாகத் தரையிறக்கியும் தீயில் கருகி 41 பேர் சாவு*





மொஸ்கோ,மே 7

ரஷ்யாவின் தலைநகர் மொஸ்கோவில் உள்ள ஷெர்மெட்யவோ வானூர்தி நிலையத்தில், அவசரமாகத் தரை இறங்கிய 'சுகோய் சுப்பர் ஜெட் 100' என்கிற வானூர்தி தீப்பிடித்ததில் இரண்டு குழந்தைகள் அடங்கலாக 41 பேர் சாவடைந்தனர். 78 பயணிகளும் வானூர்திப் பணியாளர்கள் 5பேரும் பயணித்த அந்த வானூர்தியில் புறப்பட்டவுடனேயே தொழில்நுட்பக் கோளாறுகள் கண்டுபிடிக்கப்பட்டதாகவும், உடனடியாகத் தரையிறக்கியபோதே இந்த விபத்து நடந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. புறப்பட்டவுடன் அதிலிருந்த 'கோளாறு' ஒன்றைக் கண்ட வானூர்திக் குழுவினர் உடனடியாக எச்சரிக்கைச் சமிக்ஞை விடுத்து, வானூர்திக் கட்டுப்பாட்டுக் குழுவினரின் உதவியுடன் அதை அவசரமாகத் தரை இறங்கினர்.

அது தரையிறங்கி ஓடு பாதையில் தனது வேகத்தைத் தணிப்பதற்கிடையில் பெரியளவில் தீ பற்றிக் கொண்டது. விமானத்தின் அவசர வழி மூலமாகப் பயணிகள் வெளியேற்றப்பட்டனர். எனினும் தீ வேகமாகப் பரவியதால் மேற்படிச் சாவுகள் தவிர்க்க முடியாதவையாகிவிட்டன என்று இது குறித்துக் கவலை தெரிவிக்கப்பட்டது.

'பிரெக்ஸிட்' விவகாரம்'

## எதிர்க்கட்சியை நாடும் தெரசா மே


லண்டன்,மே 7

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் வெளியேறுவதற்கான 'பிரெக்ஸிட்' ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்காக எதிர்க்கட்சியின் உதவியை நாடி உள்ளார் பிரிட்டனின் தலைமை அமைச்சர் தெரேசா மே. ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து வெளியேறுவது என்பது தொடர்பில் 2016ஆம் ஆண்டு நடந்த வாக்கெடுப்பில், பெரும்பான்மை மக்கள் வெளியேறுவதற்கு ஆதரவாக வாக்களித்தனர்.

அப்போதைய தலைமை அமைச்சர் டேவிட் கமரூன் பதவி விலகினார். புதிய தலைமை அமைச்சராகத் தெரசா மே பதவி ஏற்றார். அவர் இந்த 'பிரெக்ஸிட்' நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறார். ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் வெளியேறிய பின்னர் ஐரோப்பிய நாடுகளுடனான அணுகுமுறை குறித்து அவர் முன்வைத்த ஒப்பந்தங்களை பிரிட்டன் நாடாளுமன்றம் நிராகரித்து வருகிறது. இதனால் திட்டமிட்டபடி, ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் வெளியேறுவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையிலேயே எதிர்க்கட்சியான தொழிற்கட்சியின் தலைவர் ஜெரேமி கார்பைனின் உதவியைத் தெரசா மே நாடி உள்ளார். இது தொடர்பில் ஆளும் கன்சர்வேடிவ் கட்சிக்கும் எதிர்க்கட்சியான தொழிற்கட்சிக்கும் இடையே இன்று பேச்சுக்கள் நடக்கவுள்ளன.

## வெனிசுலாவில் தொடரும் போராட்டங்கள்

வெனிசுலா அதிபர் நிக்கோலஸ் மதுரோவின் ஆட்சியை வீழ்த்துவதற்கு அந்த நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர் ஜுவான் குவைடோ அமெரிக்கா உட்படச் சிலநாடுகளின் ஆதரவுடன் தொடர்ச்சியாகப் போராட்டங்களை மேற்கொண்டு வருகிறார். கடந்த செவ்வாய்க்கிழமை ஒரு பெரிய போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்தார். வெனிசுலா இராணுவச் சிப்பாய்கள் சிலர் பின்னணியில் நிற்க ஆட்சிக் கவிழ்ப்புக்கு முன்வரு மாறு அவர் கோரிக்கை விடுவதான காணொலி வெளியாகி வெனிசுலாவில் பதற்றத்தையும், மோதலையும் தோற்றுவித்திருந்தது. இந்தநிலையில் தான் மேற்கொண்ட ஆட்சிக் கவிழ்ப்புப் போராட்டம் தோல்வியடைந்ததாகக் குவைடோ குறிப்பிட்டார். ஆனாலும் மதுரோவின் ஆட்சியைக் கலைப்பதில் தான் உறுதியாக இருப்பதாகவும் அமெரிக்காவின் இராணுவ உதவியை குவைடோ நாடவுள்ளார் என்றும் பன்னாட்டு ஊடகங்கள் செய்திவெளியிட்டன.



## இஸ்ரேல் உக்கிர தாக்குதல் பாலஸ்தீனர்கள் 24 பேர் சாவு

ஜெருசலோம்,மே 7

இஸ்ரேல் இராணுவத்துக்கும் காசாவில் உள்ள போராளிகள் குழுக்களுக்கும் இடையே கடந்த சனிக்கிழமையிலிருந்து கடும் போர் நடந்து வருகிறது. போராளிகள் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தினர். அதற்குப் பதிலடியாக இஸ்ரேல் தொடர்ச்சியாக வான்வழித் தாக்குதல்களை நடத்தியது. இதில் பாலஸ்தீனர்கள் 24 பேர் சாவடைந்தனர் என்று பாலஸ்தீன அரசு தெரிவித்தது.


இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்துக்கும் இடையிலுள்ள காசாப் பகுதியில் இஸ்ரேல் 300க்கும் மேற்பட்ட வான்வழித் தாக்குதலைக் கடந்த வாரத்தில் நிகழ்த்தியுள்ளதாகப் பாலஸ்தீனம் குற்றச்சாட்டியுள்ளது.

இஸ்ரேலின் தலைநகரமாக ஜெருசலோமை அமெரிக்கா அறிவித்ததைத் தொடர்ந்து பாலஸ்தீனம் இஸ்ரேல் இடையே மோதல் அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது.

## 'அல்கொய்தா' அமைதியாகச் செயற்படுகிறது; எச்சரிக்கிறது அமெ. உளவுத்துறை

வோஷிங்டன்,மே 7

'அல் கொய்தா' என்கிற ஆயுத அமைப்பைத் தோற்றுவித்தவர் ஒஷாமா பின்லேடன். ஒஷாமா பின் லேடன் அமெரிக்கப் படையினரால், பாகிஸ்தானின் அபெட்டாபட் என்ற இடத்தில் வைத்துக் கொல்லப்பட்டு 8 வருடங்கள் கழிந்து விட்டன. உலகிலேயே மிகப் பயங்கரமான ஆயுத இயக்கமாக விளங்கி இந்த அமைப்பினிடம் ஆயிரக்கணக்கான போராட்டக்காரர்கள் மட்டுமல்லது ஏராளமான பணமும் இருந்தது. இந்த அமைப்பு ஒஷாமா பின் லேடனின் சாவுக்குப் பின்னர் நிலைகுலைந்து சரிந்துவிட்டதாகவே கருதப்பட்டது. ஆயினும் இந்த அமைப்புத் தற்பொழுது புத்துயிர் பெற்றுள்ளது என்று அண்மையில் அமெரிக்க உளவுத் துறை எச்சரித்ததாகப் பன்னாட்டு ஊடகங்களில் செய்திகள் வெளியாகின. இந்த அமைப்பின் மூத்த உறுப்பினர்கள் அமெரிக்காவிலும், மேற்குலக நாடுகளிலும் தாக்குதல்கள் நடத்த திட்ட மிட்டுள்ளனர் என்றும், இதன் அங்கத்தவர்கள் பல நாடுகளில் அமைதியாகவும் சுறுசுறுப்பாகவும் தங்கள் கொள்கைகளைப் பரப்பி வருகின்றனர் எனவும் அமெரிக்க உளவுத்துறை கூறியிருப்பதாக இந்தச் செய்திகள் கூறுகின்றன.



# புயல் நிவாரணமாக ஒடிசாவுக்கு ஆயிரம் கோடி - மோடி உத்தரவு

புதுடெல்லி,மே 7
இந்தியாவின் ஒடிசா மாநிலத்தைக் கடந்த 3ஆம் திகதி 'பெனி' புயல் தாக்கி யது.
அதனால்ஏற்பட்டபாதிப்புகளைநேற்று ஆய்வு செய்த அந்த நாட்டுத்தலைமை அமைச்சர் மோடி அதன் நிவாரணப் பணிகளுக்கு ஆயிரம் கோடி ரூபா (இந் திய மதிப்பில்) வழங்கப்படும் என அறி வித்தார்.
இந்தப் புயல் எச்சரிக்கை அறிவிப்பு வெளியானபோது நிவாரணப் பணிக ளுக்கான தொகையாக ஒடிசா மாநிலத் துக்குஇந்தியஅரசு 381கோடிரூபாயை ஒதுக்கீடு செய்திருந்தது.
நிவாரணப்பணிகள்தொடர்பாகஒடிசா மாநில முதலமைச்சர் நவீன் பட்நாயக் மற்றும் அரசு அதிகாரிகளுடன் நேற்று ஆலோசனைசெய்தமோடி, கூடுதலாக ஆயிரம் கோடி ரூபாவை ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டார்.
மேலும், புயலின் தாக்கத்தால் இறந்த வர்கள் குடும்பத்தினருக்கு அரசு சார் பில் 2 லட்சம் ரூபாவும், காயமடைந்த வர்களுக்கு 50 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படும் என்றும் அவர் அறிவித் தார்.

## தமிழக இளைஞர்களுக்கு பா.ஜ.க., அ.தி.மு.க துரோகம்


*ஸ்ராலின் குற்றச்சாட்டு*

தமிழகத்தில்வெளிமாநிலஇளைஞர் களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கித்தமிழக இளைஞர்களுக்கு பா.ஜ.க. மற்றும்அ.தி.மு.க. அரசுகள் துரோகமிழைத்து விட்டன என, தி.மு.க. தலைவர் மு.க.ஸ்ரா லின் குற்றம் சாட்டினார்.
இதுதொடர்பாக, அவர் நேற்று வெளி யிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். இங்குள்ளமத்தியஅரச அலுவலகங்களிலும், அதன் பொதுத் துறை நிறுவனங்களிலும் வட மாநி லத்தவருக்கு வேலைவாய்ப்புகளை யும்வழங்கிவரும்துரோகச்செயலுக் குக் கடும் கண்டனத்தைத் தெரிவித் துக் கொள்கிறேன் என்ற அவர், தமிழகத்தில்தமிழர்களுக்கே 90 சத வீத முன்னுரிமை என்பது உறுதி செய்யப்பட்டுத்தமிழக இளைஞர்கள் மட்டுமே வேலைவாய்ப்புபெறுகின்ற நிலையைஉருவாக்குவதேதி.மு.கவின் நோக்கம்" என்று தெரிவித்தார்.




## சாவுகள் 29 ஆக அதிகரிப்பு!

புதுடெல்லி,மே 7
இந்தியாவின் ஒடிசா மாநிலத்தைத் தாக்கியபெனிபுயலின்பாதிப்பால்சாவ டைந்தவர்களின் எண்ணிக்கை 29 ஆக அதிகரித்தது. கடந்த வெள்ளிக்கி ழமை ஒடிசாவை இந்தப் புயல் தாக்கி யது. இந்தப்புயலின்வருகையையும், அதன் தாக்கத்திலிருந்து தப்பிக் கொள் வது குறித்த முன் எச்சரிக்கை நடவடிக் கைகளையும் இந்திய அரசு மேற் கொண்டிருந்தது.
புயல்தாக்கும்என்றுஎதிர்வுகூறப்பட்ட பகுதிகளில் இருந்து சுமார் 12 லட்சம் மக்களை ஒடிசா மாநில அரசு வெளி யேற்றிப் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்து சென்று இருந்தது. இந்த முன் எச்சரிக்கை காரணமாக பெரும ளவு சாவுகள் தவிர்க்கப்பட்டன. புயல் தாக்கிய அன்று வெளியான தகவல்க ளின்படிஇருபதுக்குஉட்பட்டசாவுகளே அறியப்பட்டிருந்தன. இந்திய அரசின் இந்தமுன்எச்சரிக்கைநடவடிக்கைக்கு ஐக்கியநாடுகள்சபைதனதுபாராட்டுக் களைத்தெரிவித்திருந்தது. இந்தநிலை யில், பிந்தியநிலவரப்படிபானிபுயலின் தாக்கத்துக்கு 29 பேர்சாவடைந்ததாக ஒடிசாமாநிலஅரசின்சார்பில்தெரிவிக் கப்பட்டுள்ளது.



## 5ஆம் கட்ட வாக்குப்பதிவு நேற்று நடந்து முடிந்தது

இந்திய நாடாளுமன்றத் தேர்த லின்5ஆம்கட்டவாக்குப்பதிவுகள் மேற்கு வங்கத்தின் 7 மாநிலங்க ளின் 51 தொகுதிகளில் நேற்று நடந்தன.
674வேட்பாளர்கள்போட்டியிடும் இந்தத்தொகுதி4.63கோடிஆண் வாக்காளர்களையும் 4.12 கோடி பெண் வாக்காளர்களையும் கொண்டது.
பிகார், ஜம்மு காஷ்மிர், மத்திய பிரதேசம், ராஜஸ்தான், உத்தர பிரதேசம், மேற்கு வங்கம், ஜார்க் கண்ட் ஆகியவையே நேற்று 5ஆம்கட்டத்தேர்தல்நடந்தஅந்த 7 மாநிலங்களும் ஆகும்.




இந்தியாவில் 5ஆம் கட்டமாக நேற்று நடந்தநாடாளுமன்றத்தேர்தலின்போது ராஞ்சிஎனும்பகுதியில்உள்ளவாக்குச்சா வடி ஒன்றில் வாக்காளர்கள் வாக்களித்த பிறகு தம்படம் ('செல்பி') எடுப்பதற்காக அமைக்கப்பட்ட இடம் இது.

## தேர்தல் ஆணையகம் மீது காங்கிரஸ் வழக்கு

புதுடெல்லி,மே 7
இந்தியத்தலைமைஅமைச்சர்மோடி மற்றும்ப.ஜ.காவின்தலைவர்அமித் ஷா ஆகியஇருவரும்விதிமுறைமீறி யதாகவும் அவர்கள் மீது தேர்தல் ஆணையகம் நடவடிக்கை எடுக்க வில்லை என்றும் காங்கிரஸ் வழக் குத்தொடர்ந்தது. இவர்கள்இருவரும் தேர்தல்விதிமுறைகளைமீறியதாகக் காங்கிரஸ் பலமுறை முறைப்பாடு அளித்து இருந்தும் தேர்தல் ஆணை யகம்காங்கிரசின்முறைப்பாடுகளை நிராகரித்தது. மோடியும், அமித்ஷா வும் தேர்தல் விதிமுறை மீறலில் ஈடு படவில்லை என்றும் அறிவித்தது.
இந்த நிலையில் மோடி, அமித்ஷா மீது தேர்தல் ஆணையம் நடவ டிக்கை எடுக்காதது தொடர்பில் காங் கிரஸ் கட்சி நீதிமன்றத்தில் தேர்தல் ஆணையகத்து எதிராக நேற்று முறையிட்டது.



## இன்றைய நாள்

**மேடம்:** பின்விளைவு உணர்ந்து பேசு வது நல்லது. நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைப்பதில் தாமதம் ஏற்படும். தொழில், வியாபாரத்தில்முன்னேற்றம் பெற கூடுதல் உழைப்பு அவசியம். பணச்செலவு அதிகரிக்கும்.

**இடபம்:** சிறிய பணி கூட பலமடங்கு நன்மையை தரும். கடந்த காலத்தில் தொழில், வியாபாரத்தில் இருந்த இடையூறு விலகும். பணம் கொடுக்கல், வாங்கல் சீராகும். தாயின் தேவையை நிறைவேற்றி அன்பு, ஆசி பெறுவீர்கள்.

**மிதுனம்:** வாழ்வில் மனச்சாட்சிப்படி நடந்து கொள்வீர்கள். தொழில், வியா பாரத்தில் வருகிற குளறுபடியை சரி செய்ய முயல்வீர்கள். லாபம் சுமார். வெளியூர் பயணம் செல்ல நேரிடும்.

**கடகம்:** பிறர் கருத்துக்கு முக்கியத்துவம் தருவதால் நற்பெயர் ஏற்படும். தொழில், வியாபாரம் சீர்பெற புதிய மாற்றங்களை செய்ய வேண்டும். அளவான பணவரவு கிடைக்கும். உணவு ஒவ்வாமையால் அஜீரணம் ஏற்படலாம்; கவனம் தேவை.

**சிம்மம்:** முன் யோசனையுடன் செயல்படுவீர்கள். தொழில், வியாபா ரத்தில் அனுகூலம் ஒருசேர கிடைக் கும். பணவரவும், நன்மையும் அதிக ரிக்கும்.

**கன்னி:** உங்களுக்கு உதவுவது போல் சிலர் பாசாங்கு செய்வர். தொழில், வியா பாரம் செழிக்க நிதான அணுகுமுறை பின்பற்ற வேண்டும். செலவுக்கு சேமிப்பு பணம் பயன்படுத்துவீர்கள். வாகனத் தில் மிதவேகம் பின்பற்றவும்.

**துலாம்:** எளிதான பணி கூட சுமை போல தோன்றும். தொழில், வியாபாரம் சார்ந்த எவரிடமும் சச்சரவு கூடாது. நிலுவைப் பணம் வசூலிப்பதில் நிதான அணுகுமுறை பின்பற்றுங்கள். மனம் இலகுவாகும்.

**விருச்சிகம்:** உறவினர் அதிக பாசம் கொள்வர். எதிர்காலவாழ்வில்நம்பிக்கை வளரும். தொழில், வியா பாரம் செழிக்க தகுந்த பணிபுரிவீர்கள். வீட்டு உப யோகப் பொருள் வாங்குவீர்கள்..

**தனுசு:** சில நிகழ்வுகள் இனியதாக அமைந்து உற்சாகம் தரும். எந்த செய லையும் நேர்த்தியுடன் செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கு பூர்த்தியாகும்.

**மகரம்:** .மனதில் கூடுதல் நம்பிக்கை வளர்ப்பது அவசியம். தொழில், வியாபாரநடைமுறைசுமாரான அளவில் இருக்கும். பணவரவை விட செலவு அதிகரிக்கும்.

**கும்பம்:** வெற்றி பெற எளிதான வழி பிறக்கும். நண்பர் தேவையான உத வியை வழங்குவார். தொழில், வியாபாரத் தொடர்பு பலம் பெறும்.

**மீனம்:** சந்தோஷ முகத்துடன் காணப் படுவீர்கள். சமூகப் பணி ஆற்றுவதில் ஆர்வம்வளரும். தொழில், வியாபாரத்தில் உருவாகிற வளர்ச்சி புதிய அனுகூலம் தரும்.

# கே.ஸி.ஸி.ஸியின் துடுப்பாட்டத்தில் பற்றிசியன்ஸ் அணி அபார வெற்றி


பற்றீசியன் அணி

யாழ்ப்பாணம், மே 7
கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாணம் மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்தில் பதிவு செய்துள்ள கழகங்களுக்கு இடையில் நடத்தும் துடுப்பாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற ஆட்டத்தில் பற்றிசியன்ஸ் அணி வெற்றிபெற்றது.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் பற்றிசியன்ஸ் அணியை எதிர்த்து மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பற்றிசியன்ஸ் அணி 29.5 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 232 ஓட்டங்களைப் பெற்றது. ரதீசன் அதிகபட்சமாக 65 ஓட்டங்களையும், பத்ம முரளி 51 ஓட்டங்களையும், கவாஸ்கர் 38 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சுபதீபன்; 3 இலக்குகளையும், யாழினியன் 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

233 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குக் களமிறங்கிய மானிப்பாய் பரிஸ் அணி 17.1 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 101 ஓட்டங்களைப் பெற்றது. நிரோசன் பெற்ற 31 ஓட்டங்களே அதிகபட்சம்.

பந்துவீச்சில் மைக்கல் 4 இலக்குகளையும், நோபேட் 3 இலக்குகளையும், ரதீசன் 2 இலக்குகளையும் கைப்பற்றினர். (ம-23)



## மகாதீபம் அணி இலகு வெற்றி

கிளிநொச்சி மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட மூன்றாம் பிரிவு அணிகளுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் மகாதீபம் அணி 191 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மகாதீபம் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய அந்த அணி 43 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 261 ஓட்டங்களைப் பெற்றது. நிரோசன் 53 ஓட்டங்களையும் பிரவிந்தன் 42 ஓட்டங்களையும் பெற்றனர்.


பந்துவீச்சில் நிலுக்சன் 4 இலக்குகளையும், நிசாந்தன் 2 இலக்குகளையும் கைப்பற்றினர். 262 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கிருஸ்ணபாரதி அணி 16.1 பந்துப் பரிமாற்றங்களில் 69 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்தது.

(ம-23)

## இன்றைய மோதல்கள்

தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் வடக்கின் நாயகன் வெற்றிக்கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதியாட்டங்கள் இன்று செவ்வாய்க்கிழமை தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளன. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் அரையிறுதியாட்டத்தில் உரும்பிராய் திருக்;குமரன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

தெல்லிப்பளை நாமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் வடக்கின் நாயகன் வெற்றிக் கிண்ணத்துக்கான 35 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதியாட்டங்கள் இன்று செவ்வாய்க்கிழமை தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளன. இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் அரையிறுதியாட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் 'அணியை எதிர்தது இளவாலை சென். லூட்ஸ்; அணி மோதவுள்ளது. (ம-23)




*போர்த்துக்கல் கால்பந்தாட்ட அணியின் தலைவரும் இத்தாலியின் யுவென்டஸ் கழகத்துக்காக விளையாடி வருபவருமான ரொனால்டோ ஆடம்பரக் காரொன்றை தற்போது கொள்வனவு செய்துள்ளார். அது தொடர்பான ஒளிப்படங்கள் இணையத்தில் வைரலாகி வருகின்றன.* (ம)



## சைனிங்ஸ் கழகம் இறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், மே 7
வல்வை விளையாட்டுக் கழகம் வல்வைக்குட்பட்ட கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையில் நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் சைனிங்ஸ் அணி இறுதிக்குத் தகுதி பெற்றது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் சைனிங்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நேதாஜி விளையாட்டுக் கழக அணி மோதியது. 2:1 என்ற கோல் கணக்கில் சைனிஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது. சைனிங்ஸ் விளையாட்டுக் கழக அணியின் சார்பில் பிரசாந், துளசிராம் ஆகியோர் தலா ஒரு கோலைப் பதிவுசெய்தனர். (ம-23)

## கரைச்சி சம்பியன்

யாழ்ப்பாணம், மே 5
கிளிநொச்சி மாவட்ட பிரதேச செயலக இளைஞர் கழகங்களுக்கு இடையிலான கரப்பந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் கரைச்சி பிரதேச இளைஞர் கழக அணி கிண்ணம் வென்றது.

கிளிநொச்சி பொதுவிளையாட்டு அரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் கரைச்சி பிரதேச இளைஞர் கழக அணியை எதிர்த்து பூநகரி பிரதேச இளைஞர் கழக அணி மோதியது. 2:0 என்ற செற் கணக்கில் கரைச்சி பிரதேச இளைஞர் கழக அணி கிண்ணம் வென்றது.

(ம-23)

## றெயின்போ அணி இறுதிக்குத் தகுதி

வல்வை விளையாட்டுக் கழகம் நடத்தும் கால் பந்தாட்டத்தொடரில்றெயின்போ அணி இறு திக்குத் தகுதி பெற்றது. நேற்றுமுன்தினம் இடம்பற்ற இந்த அரையிறுதி ஆட்டத்தில் றெயின்போ அணியை எதிர்த்து இளங்கதிர் அணி மோதியது. 2:1 என்ற கோல் கணக்கில் றெயின்போ விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது. (ம-23)

## கே.ஸி.ஸி.ஸி. அணி போராடி வென்றது

யாழ்ப்பாணம், மே 7
கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழகம் நடத்தும் கே.ஸி.ஸி.ஸி வெற்றிக் கிண்ணத்துக்கான துடுப்பாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி. அணி வெற்றிபெற்றது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து திருநெல்வேலி கிரிக்கெட் கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய திருநெல்வேலி கிரிக்கெட் கழக அணி 29.1 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 173 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக தர்சிகன் 44 ஓட்டங்களையும், சையிலேஸ் 40 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பிரதீஸ் 4 இலக்குகளையும், சாம்பவன் 3 இலக்குகளையும், துசியந்தன் 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

174 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கே.ஸி.ஸி.ஸி 29.4 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 177 ஓட்டங்களைப் பெற்றனர். ரஜயறூபன் 50 ஓட்டங்களையும், பானுசன் ஆட்டம் இழக்காமல் 49 ஓட்டங்களையும், றொசான் 25 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் திருநெல்வேலி விளையாட்டுக் கழக அணி சார்பில் சையிலேஸ் 3 இலக்குகளையும், சுரேஸ் 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

(ம-23)


கே.ஸி.ஸி.ஸி. அணி



# ரியல் மட்ரிட் அபார வெற்றி

ஸ்பானிய கழகங்களுக்கிடையில் இடம்பெற்று வரும் லா லிகா தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற போட்டியில் ரியல் மட்ரிட் அணி 3:2 என்ற கணக்கில் அபார வெற்றி பெற்றது.

ரியல் மட்ரிட் - வில்லாரியல் அணிகள் மோதிய முதல் பாதி ஆட்டம் ஆரம்பித்த இரண்டாவது நிமிடத்தில் ரியல் மட்ரிட் வீரர் மரியானோ ஒரு கோலைப் போட்டார். அதற்குப் பதிலடியாக வில்லாரியல் அணி வீரர் மொரினோ 11ஆவது நிமிடத்தில் ஒரு கோலைப் போட 1:1 என்று சமநிலையானது. ஆட்டம் சூடு பிடிக்க ஆரம்பித்ததும் ரியல் மட்ரிட் வீரர் ஜீசஸ் வில்லியோ 40ஆவது நிமிடத்தில் ஒரு கோலைப் போட ரியல் மட்ரிட் அணி 2:1 என்ற கணக்கில் முன்னிலையானது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பித்து 4ஆவது நிமிடத்தில் மரியானோ மீண்டும் 49ஆவது நிமிடத்தில் இன்னொரு கோலைப் போட்டார். வில்லாரியல் அணி வீரர்கள் ஆக்ரோசமாக ஆட ஆரம்பித்தனர். ஆட்டத்தின் இறு மட்டும் அவர்கள் விறு விறுப்பாக ஆடினர். ஆட்டத்தின் இறுதி நிமிடத்தில் 90ஆவது நிமிடத்தில் வில்லாரியல் அணி வீரர் கொஸ்ரே ஒரு கோலைப் போட ஆட்டத்தின் முடிவில் ரியல் மட்ரிட் அணி 3:2 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

## பயிற்சியாட்டத்தில் வோர்னர், சிமித் பங்கேற்றனர்

பந்தை சேதப்படுத்திய குற்றச்சாட்டின் கீழ் தடை விதிக்கப்பட்ட ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் வீரர்களான வோர்னர் மற்றும் சிமித் ஆகியோர் தடைக்காலம் முடிவடைந்துள்ள நிலையில் மீண்டும் ஆஸ்திரேலிய அணிக்குள் இணைத்துக் கொள்ளப்பட்டனர்.

உலகக் கிண்ணத் தொடரானது இந்த மாத இறுதியில் ஆரம்பமாகவுள்ள நிலையில். நியூஸிலாந்து அணிக்கும், ஆஸ்திரேலியா அணிக்கும் இடையே மூன்று பயிற்சி போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

இதையொட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற பயிற்சியில் சக வீரர்களுடன் சிமித்தும், வோர்னரும் பங்கேற்றனர். இவர்களின் வருகை



குறித்து ஆஸ்திரேலிய அணியின் சகலதுறை ஆட்டக்காரர் மக்ஸ்வெல், ஐ.பி.எல். போட்டியில் வோர்னர் அதிரடி காட்டினர். அவர் நல்ல திறனுடன் இருக்கின்றார். சிமித்தும் சிறப்பான திறனுடன் உள்ளார். இருவரும் உலகக் கிண்ணத் தொடரில் முக்கியப் பங்கு வகிப்பார்கள் - என்றார்.

இது குறித்து ஆஸ்திரேலிய அணியின் பயிற்சியாளர் ஜஸ்டின் லாங்கர் தெரிவிக்கையில்; இருவரும் அணிக்குத் திரும்பி விட்டனர். 'அவர்களைத் தேர்வு செய்தது புத்திசாலித்தனமான செயல் -என்றார்.

## ஒருநாள் போட்டியில்
# மே.இ.தீவுகள் புதிய சாதனை

பன்னாட்டு ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணியானது புதிய சாதனையைப் படைத்தது.

அயர்லாந்து, மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் பங்களாதேஷ் ஆகிய அணிகளுக்கு இடையே முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் தொடர் இடம்பெற்று வருகின்றது.

இதில் மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் அயர்லாந்து அணிகளுக்கிடையேயான போட்டியில்,

மேற்கிந்தியத் தீவுகள் அணியின் ஆரம்ப வீரர்களான ஜோன் கேம்பெல் மற்றும் ஷெய் ஹோப் களமிறங்கி 48ஆவது பந்துப்பரிமாற்றம் வரை ஆட்டமிழக்காது ஓட்டங்களைக் குவித்தனர். இருவருக்குமான இணைப்பாட்டமாக 365 ஓட்டங்கள் பெறப்பட்டன. கேம்பெல் 137 பந்துகளை எதிர்கொண்டு 15 நான்கு ஓட்டங்கள், 6 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 179 ஓட்டங்களையும். ஷெய் ஹோப் 152 பந்துகளை எதிர்கொண்டு 22 நான்கு ஓட்டங்கள், 2 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 170 ஓட்டங்களையும் குவித்தனர்.

இதற்கு முன்னர் சிம்பாப்வே அணிக்கு எதிராக கடந்த 2018ஆம் ஆண்டு இடம்பெற்ற போட்டியில் பாகிஸ்தான் அணியின் இமாம் உல்ஹக், பாஹர் சமன் இருவரும் இணைந்து முதல் இலக்கு இணைப்பாட்டமாக 304 ஓட்டங்களை பெற்றிருந்தமையே பன்னாட்டு ஒருநாள் போட்டியில் சாதனையாக இருந்தது. இந்த நிலையில் மேற்கிந்தியத் தீவுகள் அணி அந்த சாதனையை முறியடித்துள்ளது.



## பெங்களூர் அணியின் முயற்சியை நினைத்து பெருமைப்படுகின்றேன்
### கோக்லி தெரிவிப்பு

பெங்களூரு அணி 14 ஆட்டங்களில் விளையாடி 5 வெற்றி, 8 தோல்வி, ஒரு முடிவில்லை என்று 11 புள்ளியுடன் இறுதி இடத்துக்கு தள்ளப்பட்டு ஐ.பி.எல். போட்டியில் இருந்து வெளியேறியது.

இது குறித்து அணித் தலைவர் கோக்லி தெரிவிக்கையில்;

இந்த தொடரின் பிற்பகுதியில் நாங்கள் விளையாடிய விதத்தை கவனித்தால், அது போன்ற ஆட்டத்தை தான் ஆரம்ப கட்டத்தில் எதிர்பார்த்தோம். முதல் 6 ஆட்டங்களில் தொடர்ச்சியாக தோற்று விட்டு அதன் பிறகு ஐ.பி.எல். போன்ற தொடரில் மீண்டு வருவது மிகவும் கடினம். இந்த தொடரில் இருந்து நாங்கள் நிறைய கற்றுக் கொண்டோம். இறுதி 7 ஆட்டங்களில் 5 போட்டிகளில் வெற்றி பெற்று இருக்கிறோம். ஒரு ஆட்டத்தில் முடிவு கிடைக்கவில்லை. இறுதி சில ஆட்டங்களில் எங்களது வீரர்கள் விளையாடிய விதம், வெளிப்படுத்திய தீவிர முயற்சியை நினைத்து பெருமைப்படுகின்றேன். அடுத்த ஆண்டில் நிச்சயம் ஆட்டத்தில் முன்னேற்றம் காண்போம். வலுவான அணியாக மீண்டெழுவோம் -என்றார்.

## உலகக் கிண்ணப் போட்டியில்
# இங்கிலாந்தின் ஆதிக்கம் மிகப் பலமாக இருக்கும்
### கவாஸ்கர் கணிப்பு

உலகக் கிண்ணப் போட்டி இங்கிலாந்தில் இந்த மாத இறுதியில் ஆரம்பமாகவுள்ளது. இதில் 10 நாடுகள் பங்கேற்கவுள்ளன.

ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளுடன் தலா ஒருமுறை மோத வேண்டும். முதல் நான்கு இடங்கள் பிடிக்கும் அணி அரையிறுதிக்கு முன்னேறும். அரையிறுதிக்கு முன்னேறும் அணிகள் எவை என்பது குறித்து முன்னாள் வீரர்கள் மற்றும் கிரிக்கெட் விமர்சகர்கள் கருத்து கூறி வருகின்றனர்.



இந்த நிலையில் இந்திய அணியின் முன்னாள் தலைவரும், தொலைக்காட்சி வர்ணனையாளருமான கவாஸ்கர் இந்தியா, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து மற்றும் மேற்கிந்தியத்தீவுகள் ஆகிய அணிகள்தான் அரையிறுதிக்குத் தகுதி பெறும் எனத் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்; இங்கிலாந்து அணி உலகக் கிண்ணப் போட்டியில் வெல்ல வாய்ப்புள்ளது. 2015ஆம் உலகக் கிண்ணத்தில் மோசமான தோல்வியை சந்தித்தபின், அதில் இருந்து மீண்டு அபாரமான ஆட்டத்தை நான்கு வருடங்களாக வெளிப்படுத்தி வருகிறது.

இங்கிலாந்து மிகச்சிறந்த அணியா விளங்குகின்றது. அவர்கள் அதிக அளவில் நம்பிக்கையை பெற்றுள்ளனர். சமீபகாலமாக அவர்களது ஆட்டத்தை பார்த்தீர்கள் என்றால், அட்டகாசமான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகின்றனர். கடந்த சில உலகக் கிண்ணப் போட்டியைப் பார்த்தீர்கள் என்றால், போட்டியை நடத்திய நாடுதான் கிண்ணத்தை வென்றுள்ளது. ஆனால் கிரிக்கெட்டில் எதுவும் நடக்கலாம். இங்கிலாந்துக்கு வாய்ப்புள்ள அதேநேரத்தில், மற்ற அணிகளுக்கும் வாய்ப்பு உள்ளது.

இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, இந்தியா மற்றும் மேற்கிந்தியத்தீவுகள் ஆகிய நான்கு அணிகள் உலகக் கிண்ணத்தில் ஆதிக்கம் செலுத்தலாம். இந்தத் தொடர் மிகமிக சுவாரஸ்யமாக இருக்கும். ஏனென்றால், ஒவ்வொரு அணிகளும் ஏனைய அணிகளுடன் மோத வேண்டும்- என்றார்.












இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.05.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.